# ஆரம்ப பாடசாலை மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தையும் தகவல் திறனையும் அபிவிருத்தி செய்தல்

நந்தா நாரங்கொட

# ஆரம்பப் பாடசாலை பிள்ளைகள்
# மத்தியில் வாசிக்கும்
# பழக்கங்களையும் தகவற் திறன்களையும்
# மேம்படுத்துதல்

# ஆரம்பப் பாடசாலை பிள்ளைகள் மத்தியில் வாசிக்கும் பழக்கங்களையும் தகவற் திறன்களையும் மேம்படுத்துதல்

நந்தா நாரங்கொட

தேசிய நூலக ஆவணவாக்கல் மத்திய நிலையம்
இல. 14, சுதந்திர வழி
கொழும்பு 07.

தேசிய நூலக ஆவணவாக்கல் மத்திய
நிலையத்தின்
கல்வி ஆவணவாக்கல் ஆய்வுக்கான
உதவியின் கீழ் செய்யப்பட்ட
ஆய்வு

2000 முதலாம் பதிப்பு

© தேசிய நூலக ஆவணவாக்கல் மத்திய நிலையம்

ISBN 955-8383-08

இலங்கைத் தேசிய நூலகம் - வெளியீட்டில் உள்ள பட்டியற் தரவு

நாரங்கொட, நந்தா
ஆரம்பப் பாடசாலை பிள்ளைகள் மத்தியில் வாசிக்கும் பழக்கங்களையும் தகவற் திறன்களையும் மேம்படுத்துதல் / நந்தா நாரங்கொட .- கொழும்பு : தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை, 2000
ப. [viii], 56, x [i] ; ச.மீ. 29.

ISBN 955-8383-08-2 விலை :

i. 028.9 டிடிசி 21 ii. தலைப்பு
1. வாசிப்புப் பழக்கம் 2. நூல்களும் வாசிப்பும்

கணனி எழுத்துக் கோர்ப்பு : சக்வா பிஸ்னஸ் புறமோஷன், இல. 225/08, கிருல வீதி, நாரஹென்பிட்டி

மட்டை அச்சிட்டோர் : சமயவர்த்தன பிரின்டர்ஸ், மாளிகா கந்த வீதி, கொழும்பு 10

நூல் அச்சிட்டோர் : வெளியீட்டுப் பிரிவு, தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை

வெளியீட்டாளர் : தேசிய நூலக ஆவணவாக்கல் மத்திய நிலையம், இல. 14, சுதந்திர வழி, கொழும்பு 07

# முகவுரை

இலங்கை அரசாங்கம் 1997 ஆம் ஆண்டை கல்வி அபிவிருத்தி ஆண்டாகப் பிரகடனப்படுத்தியிருந் தது. இதைக் கொண்டாடுமுகமாக தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை ஒரு விசேட கல்வி அபிவிருத்தி ஆய்வை நடத்துவதற்கு தீர்மானித்தது. கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தெரிவு செய்யப்பட்ட இரு துறைகளில் ஆய்வை மேற்கொள்வதற்காக புதினத்தாள் விளம்பரங்களின் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

01. 1987-1996 ஆம் ஆண்டு காலப்பகுதியை உள்ளடக்கியதாக இலங்கைக் கல்வி தொடர்பான ஒரு விபரண நூற்பட்டியலைத் தொகுத்தலும், ஆரம்ப, இரண்டாம் நிலைப் பாடசாலைச் சிறுவர்களின் பொருட்டு வாசிப்புச் சாதனங்களின் பூரண பட்டியல் ஒன்றைத் தொகுத்தலும் .

02. ஆரம்ப, இரண்டாம் நிலைப் பாடசாலை மாணவர்களிடையே வாசிப்பு பழக்கத்தையும் தகவல் நுட்பங்களையும் அபிவிருத்தி செய்தலும், ஆரம்ப, இரண்டாம் நிலைப் பாட சாலைகளுக்குப் பொருத்தமான மாதிரி நூலகம் ஒன்றையும், தகவல் வள நிலையம் ஒன்றையும் திட்டமிடுதல் .

இது தொடர்பாக பெறப்பட்ட விண்ணப்பங்களும் செயற்திட்டப் பிரேரணைகளும் கல்வி மான்களின் குழு வொன்றினால் பரிசீலனை செய்யப்பட்டு தெரிவு செய்யப்பட்டது. நாடளாவியரீதியில் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்கான கவனம் செலுத்தப்பட்டு வந்தமையால் அதற்கு முதலிடம் வழங்கப்பட்டது.

இவ் வெளியீடானது ஆரம்ப நிலை மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தையும் தகவல் நுட்பத் தையும் அபிவிருத்தி செய்வதற்காக தெரிவு செய்து நடத்தப்பட்ட சில ஆய்வுத் திட்டங்களின் முடி வுகளை எடுத்துக் காட்டுகின்றது. இவ் ஆய்வுச் செயற்திட்டமானது முன்பு தேசிய கல்வி நிலையத்தில் கடமையாற்றிய திருமதி. நந்தா நாரங்கொடவினால் நடத்தப்பட்டது. ஆரம்பத்தில் இந் நூலானது ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்ததுடன் பின்னர் சிங்கள, தமிழ் மொழிகளில் மொழிபெயர்ப்பு செய் யப்பட்டுள்ளது. இந் நூலனது கல்விக் கொள்கையைத் திட்டமிடுவோருக்கும், பாடசாலை அதிபர் களுக்கும்,சிரியர்களுக்கும், அதேபோல் பெற்றோர்களுக்கும் உபயோகமானதாக இருக்குமென நம்புகின்றோம்.

காலோசிதமானதும், நாட்டின் முக்கிய தேவையாகவும் இருந்த இவ் ஆய்வை மேற்கொண்டதற்காக திருமதி நந்தா நாரங்கொடவுக்கு நான் நன்றியுடையவனாவேன். இவ் வெளியீட்டை வெளியிடுவதில் மிகுந்த ஆர்வம் காட்டிய தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் தலைவர் திரு. ஹென்றி சமரநாயக்காவிற்கும், பிரதிப் பணிப்பாளர் செல்வி ஜானகி பிரணாந்துவிற்கும் வெளியீட்டுப் பிரிவின் தலைவர் திரு. யு.பீ. அழகக்கோனுக்கும், வெளியீட்டு அலுவலர் திரு. நெல்சன் பீரி ஸுக்கும் இந் நூலிற்கான எழுத்து வடிவமைப்பைச் செய்த "சக்வா பிசினஸ் புறோமோஸன்ஸ்" விற்கும் எனது நன்றி உரித்தாகும்.

ஒக்ரோபர் 2000
தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை
14, சுதந்திர வழி,
கொழும்பு 07.

எம்.எஸ்.யு. அமரசிறி
பணிப்பாளர் நாயகம்

# நன்றி

மாணாக்கரின் அடைவு மட்டங்களை, குறிப்பாக மொழி, கணிதம் ஆகியவற்றில் அவர்களது அடைவு மட்டங்களைப் பாடசாலைகளில் கிடைக்கப்பெறும் பௌதிக வளங்கள் மனிதவளம் ஆகியவற்றில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் பாதிக்கின்றன என்பது முன்பு செய்யப்பட்ட ஆராய்ச்சியில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. இவ்வாய்வும், பாடசாலைகளில் கிடைக்கப் பெறும் வளங்களினால் ஆரம்பப் பாடசாலைப் பிள்ளைகளின் வாசிக்கும் ஆற்றல் பாதிக்கப்படுகின்றது என்பதைக் காட்டுகின்றது. எனவே, முதற்படியாக கல்வியின் தரத்தை மேம்படுத்துவதும், பிள்ளைகள் மத்தியில் வாசிக்கும் பழக்கத்தையும் தகவற் திறன்களையும் அபிவிருத்தி செய்வதற்குப் பெற்றாருக்காக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்வதும் அவசியம்.

இச் சந்தர்ப்பத்தில் இலங்கைத் தேசிய நூலகத்தில் பணிப்பாளரான திரு எம். எஸ். யு. அமரசிறி என்பவருக்கும், எனது முன்மொழிவுகளைச் சம்பந்தப்பட்ட சபை அங்கீகரித்தபின் இவ்வாய்வை நடத்தும் படி பணித்த, இலங்கைத் தேசீய நூலக சேவைகள் சபையின் தலைவரான திரு. ஏச் சமரநாயக்க என்பவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாய்வின் முன்னேற்றம் பலமுறை மீளாய்வு செய்யப்பட்டு பொருத்தமான ஆலோசனையும் ஆதரவும் வழங்கப்பட்டன. இச் செயற்றிட்டத்துக்கு உயிர் நாடியாக விளங்கிய செல்வி ஜே. பர்ணாந்துவுக்கும் எனது நன்றி உரித்தாகும்.

பாடசாலைகளைத் தெரிவு செய்வதிலும் அப்பாடசாலைகளைப் பயன்படுத்த அநுமதி வழங்குதலிலும் சேவைகள் புரிந்த மாகாண பிராந்திய கல்விப் பணிப்பாளர்களுக்கும், எனது அணியினருக்கு தம் முழு ஒத்துழைப்பையும் வழங்கிய அப்பாடசாலைகளின் அதிபர்கள் ஆசிரியர்களுக்கும், ஓவிய வேலையில் துணைபுரிந்த திருமதி/செல்வி தியாகராஜாவுக்கும், கல்வியமைச்சில் பணிபுரியும் திருமதி/செல்வி எம். என். டி. அல்விஸ் தலைமையில் பாடசாலைகளின் போதனைகளை நடத்த உதவிய ஆசிரியர்களுக்கும், எனது நன்றி...

தேசிய நூல் அபிவிருத்திச் சபையின் தலைவரான திரு. குணசேன விதான, தேசிய நூலக சேவைகள் சபையின் தலைவரான திரு. ஏச். சமரநாயக்க, கல்விக் கல்லூரிகளின் பணிப்பாளர் நாயகமான திரு. என். ஹேரத், தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னாள் ஆங்கில மொழிப் பணிப்பாளர் நாயகமான திரு நிஹால் கூரே, பிரசித்தி பெற்ற எழுத்தாளரும் சித்திரங்களை வரைபவருமான திருமதி. சிபில் வெத்தசிங்க ஆகிய அனுபவம் மிக்க கல்வியாளர்கள் தமது நேரத்தை இவ்விடயம் பற்றிக் கலந்துரையாடச் செலவிட்டமைக்கு எனது விசேட நன்றி உரித்தாகும்.

என். நாரங்கொட

# உள்ளடக்கம்


*அத்தியாயம்* *01. அறிமுகம்*

1.01. ஆரம்பக்கல்வி
1.02. மொழி ஆற்றலின் முக்கியத்துவம்
1.03. வாசிப்பின் முக்கியத்துவம்
1.04. வாசிப்புப் பழக்கங்களும் தகவற் திறன்களும்
1.05. ஆய்வின் பின்னணி

*அத்தியாயம்* *02. ஆய்வுத் திட்டம்*

2.01. ஆய்வின் விடய எல்லை
2.02. குறிப்பான குறிக்கோள்கள்
2.03. ஆராய்ச்சி முறையியல்

*அத்தியாயம்* *03. தரவுகள் சேகரிப்புக் கருவிகள்*

3.01. அ. மொழிச் சோதனைக் கருவிகள்
ஆ. மாணாக்கருக்கான வாசிப்பு மனப்பாங்கு அளவையீடு
இ. ஆசிரியர்க்கான வாசிப்பு மனப்பாங்கு அளவுகோல்
ஈ. பாடசாலை அதிபர்களுக்கான வினாகொத்து
உ. கல்வியாளர் முதலியோருடன் நேர்காணல்.

3.02. கருவியினங்களை விநியோகித்தல் - வகுப்பு 2
3.03. கருவியினங்களை விநியோகித்தல் - வகுப்பு 4
3.04. வாசிப்பு மனப்பாங்கு அளவையீடுகளை விநியோகித்தல்

*அத்தியாயம்* *04. தரவுகளைப் பகுப்பாய்வு செய்யும் முறைகள்*

4.01. பொது அறிமுகம்
4.02. பாடசாலைகளை வகைப்படுத்தல்
4.03. முற்றாகக் கையாளக்கூடிய திறமை மட்டமும் தரங்குறைந்த மட்டமும்
4.04. சராசரி ஆற்றுகை- மாவட்டரீதியாக, பாடசாலை வகைரீதியாக, பால்ரீதியாக

*அத்தியாயம்* *05. இலக்கியம் தொடர்பான உபசோதனைகளைப் பகுப்பாய்வு செய்தல்*

5.01. முற்றாகக் கையாளக்கூடிய திறமை மட்டமும் தரங்குறைந்த மட்டமும் – இரண்டாம் வகுப்புக் கருவியினங்களுக்கு
5.02. முற்றாகக் கையாளக்கூடிய திறமை மட்டமும் தரங்குறைந்த மட்டமும் – நான்காம் வகுப்புக் கருவியினங்களுக்கு

*அத்தியாயம்* *06. வாசிப்பு ஆர்வமும் பிள்ளைகளும்* 13

6.01. இரண்டாம் வகுப்பு மனப்பாங்குப் பதிவேடுகளைப் பகுப்பாய்வு செய்தல்

6.02. நான்காம் வகுப்பு மனப்பாங்குப் பதிவேடுகளைப் பகுப்பாய்வு செய்தல்

*அத்தியாயம்* *07. வீட்டுப் பின்னணி* *35*

7.01. குடுப்பத்தின் அளவும் அடைவும்

7.02. பெற்றோரின் ஆதரவும் வாசிப்புச் சாதனங்களும்

7.03. பாடசாலைப் பின்னணி

7.04. ஆசிரியரும் வாசிப்பும்

7.05. பொழிப்பு

*அத்தியாயம்* *08. பெறப்பட்ட முடிவுகளும் கலந்துரையாடலும்*

8.01. மேலாய்வு 42

8.02. இரண்டாம் நாலாம் வகுப்புக்களில் எழுத்தறிவு அடைவு

8.03. குறைந்த அடைவுக்குரிய காரணங்களும் பரிகார நடவடிக்கைகளும்

8.04. வாசிப்புச் சாதனங்களும் நூலகங்களும்

*அத்தியாயம்* *09. சிபாரிசுகளும் கருத்தேற்றங்களும்* *48*

9.01. கல்வி முறையை மேம்படுத்துதல்

9.02. வாசிப்புப் பழக்கங்களையும் தகவற் திறன்களையும் முன்னேற்றுதல்

9.03. புதியன புகுத்துதல்

## உசாத்துணை

பிற்சேர்க்கை

I. எழுத்தறிவு அடைவு வினாத்தாள்கள் வகுப்பு 2,4

II. ஆசிரியர்களுக்கான சுய ஆர்வப் பதிவேடு

III. பாடசாலை அதிபர்களுக்கான வினாக்கொத்து

IV. பிள்ளைகள் வாசித்துள்ள நூல்கள்

# ஆரம்பப் பாடசாலைப் பிள்ளைகள் மத்தியில் வாசிக்கும் பழக்கங்களையும் தகவற் திறன்களையும் மேம்படுத்துதல்

## *அத்தியாயம் - 01*

# அறிமுகம்

*1.01.* எந்த நாட்டிலும் அபிவிருத்தி யாவற்றுக்கும் அடிப்படையாக உள்ளதே ஆரம்பக்கல்வி. வாணாள் முழுவதும் கல்விக்கான அத்திவாரம் ஆரம்பப் பாடசாலையிலேயே இடப்படுகின்றது. எமது பிள்ளைகள் 21ஆம் நூற்றாண்டில் வித்தியாசமான உலகு ஒன்றை எதிர்நோக்க உள்ளனர். முன்னெப்பொழுதும் இல்லாத அளவில் இன்று ஏற்படும் சமுதாய தொழில் நூணுக்க மாற்றங்களுக்குத் தம்மை இசைவாக்கிக் கொள்ளத்தக்கவாறு மாணாக்கர் பெறும் கல்வி அவர்களைத் தயார்ப்படுத்த வேண்டும். இப்பொழுதும் கணனி களையும் தகவல் யுக உற்பத்திகளையும் நோக்கிச் செல்கின்றோம். மட்டுப்டுத்தப்பட்ட அளவிலாயிலும் கணனிகள் வகுப்பறைகளில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. குறிப்புரைகளோடுகூடி, உடனடியாகப் பயன்படுத்தத்தக்க தகவல் அறிவு என்பனவற்றைக் கணனிகள் மூலமும் இன்டர்நெற் போன்ற பொதுத் தொடர்புக் கீழ்க் கட்டமைப்புக்கள் மூலமும், ஒரு பொத்தானை அழுத்துதல் மூலம் அல்லது கணனிக் கட்டளை மூலம் நினைத்த மாத்திரத்தில் பெறக்கூடிய தன்மை இன்றுண்டு. இத்தகைய சந்தர்ப்பங்களில் ஒரு பிள்ளையின் கல்வி மொழித் திறனில் பெருமளவு தங்கியுள்ளது. இந்நிலையில், தொடர்ச்சியான கல்விக்கும், பொது ஊடகங்கள் மூலம், விசேடமாகப் புதினத் தாள்கள், நூல்கள், வானொலி, தொலைகாட்சி, கணனியின் பதனிடப்பட்ட கோவை என்பன மூலம் தகவல்களைப் பெற்றுப் புதிய அறிவையும் திறன்களையும் பெற்றுக் கொள்வதற்கும், வாசிப்பு ஒரு வளமாக அமைகின்றது. எனவே ஆரம்பக் கல்வியின் உச்சப்பயன் பாட்டுக்கு வாசிப்பும் தகவற் திறன்களும் மேம்படுத்தப்படவேண்டுமென்பது புலனாகும்.

*1.02.* ஒருவரது மொழியைக் கற்பிப்பது கல்வியமைப்பின் முக்கிய பொறுப்புக்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. மக்கள் தமது கருத்துக்களை வெளியிடவும் உலகம் முழுவதும் மக்களிடையே காத்திரமான சமுதாயத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவும் மொழி பயன்படுகின்றது. உடனலப் பழக்க வழக்கங்கள், குடியியல் சார் உணர்வு, விஞ்ஞானரீதியான மாற்றங்கள், வாழ்வதற்கு ஊதியத்தைச் சம்பாதிப் பதற்கு தேவைப்படும் வெவ்வேறு வகையான திறன்கள் ஆகிய தமது அடிப்படைத் தேவைகளை மேம்படுத்த வேண்டிய தகவல்களை மக்கள் பெறுவது மொழி மூலமே. பிரசித்தி பெற்ற உளவியல் நிபுணரான பியாகெட் (Piaget) என்பவர் மனித நுண்ணறிவு அபிவிருத்தி எண்ணக்கருசார் அபிவிருத்தி என்பனவற்றுக்குத் திறவுகோலாக அமைவது மொழியே எனக் கருதினார். மொழிதான் வினைத்திறன் மிக்க தொடர்பாடல் வழியாகும். மொழித்திறனின்மை ஒருவரின் முன்னேற்றத்துக்குத் தடையாகும். ஆரம்ப மட்டத்தில் மொழி அபிவிருத்தி, ஏனைய துறைகளிலும் அடைவு நிலையை மேம்படுத்தக் குறிப்பிடத் தக்க பங்களிப்புச் செய்யும்.

*1.03.* மொழிக்கல்வியில் வாசிப்பு ஒரு முக்கிய உறுப்பாகும். விசேடமாக ஆரம்பப பாடசாலையில் வாசிப்பு ஒரு அடிப்படைக்கருவியாக அமைந்த பாடமாகும். பாடசாலைக் கலைத்திட்டத்தில் ஏனைய துறைகளைக் கற்பதற்கு வாசிப்பு உதவுவதோடு, கற்றலுக்கு மிக இன்றியமையாத வழியாகவும் உள்ளது. ஒரு செய்தியை அச்சிலிருந்து கருத்துடையதாகப் பெற்றுத் தகவலைப் பெறும் ஒரு நடைமுறையாக வாசிப்பு கருதப்படுகிறது. வாசிப்பு, மனித நடத்தையின் எல்லா அம்சங்களையும் ஒன்றிணைத்துத் துல்லியமாக வாசிப்பதற்கும் வாசித்தவற்றை

மதிப்பிடவும் வாசித்தவற்றைக் குறிபிடத்தக்க வகையில் வாழ்க்கையின் ஏனைய துறைகளோடு தொடர்புபடுத்தவும், பல்வேறுபட்ட தொடர்ச்சியான வழிக்காட்டலை வேண்டி நிற்கும் சிக்கலான நடைமுறை எனச் சிலரால் கருதப்படுகின்றது. எனினும் வாசிப்பு என்பது காலத்தையும் தூரத்தையும் கடந்து மக்களை இணைக்கும் அநுபவங்களை நிறையப் பெறுவதற்கு ஒரு திறவுகோல் என எல்லோரும் கருதுவர். ஸ்ராங் (Strang) என்பவரின் கருத்துப்படி "வாசிப்பு, தனிநபர் ஒருவர் தனது அறிவெல்லைகளை விரிவுப்படுத்தவும், தனது அக்கறைகளை இனங்கண்டு விரிவு படுத்திச் செறிவாக்கவும், உலகின் மனித உயிர்களையும் தன்னையும் பற்றிப் புரிந்துணர்வு பெறவும் அத்தனிநபரின் ஊடாக அநுபவத்தை வழங்குகின்றது." என்பதாகும். (பக்கம் 68) இவ்வாறு, ஒரு பதனிடல் முறையாகவும், சமுதாயத் தோற்றப்பாடாகவும், கல்வியில் செல்வாக்குச் செலுத்தும் ஒன்றாகவும் வாசிப்பு இருப்பதனால், பெற்றார் தொடக்கம், சமுதாய வியலாளர், கல்வியாளர் போன்ற யாவரதும் கவனத்தையும், அக்கறையையும் ஈர்க்கும் ஒன்றாக விளங்க வேண்டும். வாசிப்பு கல்வியாளர் ஒருவருக்கு மிகவும் பொருள் குறித்ததொன்றாகும் ஏனெனில் ஒரு பிள்ளையின் நலனுக்காகவும் சமுதாயத்தின் முழு நலனுக்காகவும் அப்பிள்ளையின் முழு ஆளுமையையும் அபிவிருத்தி செய்வது கல்வியாளரின் பொறுப்பு. அத்துடன் எழுத்தறிவு உடையதாகப் பிள்ளை இருக்கவேண்டியது அதன் உரிமை.

பிள்ளைகள் நல்ல நூல்களை வாசித்து, வாசிக்கும் பழக்கத்தை அபிவிருத்தி செய்து கொள்ளவேண்டியது முக்கியம். அவர்கள் உடல்ரீதியாக மாத்திரமன்றி உள ரீதியாகவும் வளர்ச்சி அடையவேண்டும். ஆரோக்கியமான புத்திசார் வளர்ச்சிக்கு நல்ல வாசிப்புப் பழக்கங்கள் தேவை. ஆரம்பத்தில் ஒரு பிள்ளை தனது மிக அண்மைச் சூழலை அறிந்து கொள்வதற்குப் புலனுணர்ச்சியைப் பயன்படுத்துகின்றது. வாசிப்புத்தான் அதன் நோக்கை விரிவுபடுத்துகின்றது. வாசிப்புப் பழக்கம் ஒரு குறிப்பிட்ட நேரத்துக்குரிய அநுபவமன்று, அது ஒரு தொடர்ச்சியான வாணாள் அநுபவமாகும். எனவே வாழ்வின் ஆரம்ப வருடங்களிலேயே நல்ல வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தி வளர்த்துக் கொள்ள வேண்டும், என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

*1.04* அச்சில் வெளிவந்தனவற்றிலிருந்து வாசிப்பினூடாக நாம் பெறும் அறிவுப் பகுதிகளே தகவல் எனப்படும். அவ்வறிவுப் பகுதிகள் விஞ்ஞானத்திலே புதியன புகுத்துதல், வான்வெளி ஓடங்கள், போர், நவீன தொழினுணுக்கம் அல்லது ஒரு நாளுக்குரிய சாதாரண புதினங்கள் போன்றவை எவையாகவும் இருக்கலாம். எத்தகைய தகவலையும் அல்லது அறிவையும் கிரகித்துக் கொள்ளக் கூடியவாறு, ஒருவர் வாசிப்புத் திறன்களைக் கொண்டிருக்க வேண்டும். அறிவு என்பது நாடுகளின் எல்லைகளையும், சாதி, நிறம், பண்பாடு, என்பவற்றையும்கடந்து விரைவாக அதிகரித்துச் செல்கின்றது. தொழினுணுக்க அறிவின்றித் தொழினுணுக்க உலகில் ஒருவர் வாழமுடியாது. வாசிப்பே இத்தகைய தகவலைப் பெற உதவுகின்றது. தகவற் திறன்கள் தொடர்பாடற்திறன்களைப் பெற உதவுகின்றன. இவ்வாறு வாசிப்புத்திறன்கள், வாசிப்புப் பழக்கங்களையும், தகவற்திறன்களையும் அபிவிருத்தி செய்தல், தொடர்பாடற் திறன்கள் என்பன ஒருவரின் வாழ்க்கையில் இன்றியமையாத அம்சங்களாகி விட்டன.

தொழினுணுக்க ரீதியாக மிக உயர்நிலைக்குச் சென்றுள்ள அமெரிக்கா போன்ற நாடுகள் வாசிப்புத் திறன்கள், தகவற்திறன்கள் என்பனவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன. செய்திகளின் படி 'தகவற் புரட்சி' மனிதவர்க்கத்தின் முழு வாழ்க்கையையுமே மாற்றியமைக்கின்றது. கணனிகள், செய்மதிகள், இன்டர்நெற் போன்ற தொடர்பாடற் கீழ்க் கட்டமைப்புக்கள் போன்ற தகவல் யுக உற்பத்திகள், வேலைத் தளங்களில் மாத்திரமன்றி பாடசாலை வகுப்பறைகளிலும் பிரவேசித்துள்ளன. செய்திகள் கணனிகள், இன்டர்நெற் போன்ற சிக்கல்களில் மாட்டியுள்ள வாசிப்புப் பழக்கங்களினாலும் தகவற் திறன்களினாலும் என்ன பயன் என ஒருவர் வினவலாம், தொழில்நுட்ப ரீதியாக வளர்ச்சி பெற்ற ஐக்கிய நாடு, ஐக்கிய அமெரிக்க நாடுகள் போன்ற நாடுகள் ஒரு நாட்டுக்குரிய முதன்மைப் பணியாக, வாசிப்புத் திறன்களைத் தரமுயர்த்த வேண்டிய தேவையை வலியுறுத்துகின்றன. புத்திக் கூர்மையுடன் வாசிப்பதன் மூலமே தொழினு ணுக்கத் தகவல்களைச் சேகரிக்க வேண்டியுள்ளது. அந்நாடுகள், 'இளம் பிள்ளைகள் மத்தியில் வாசிப்புக் கஷ்டங்களைத் தடுத்தல்' போன்ற ஆய்வுகளை

மேற்கொண்டு, வாசிப்பைக் கற்பிப்பதில் பயன் தரு கற்றல்-கற்பித்தல் செயன்முறைகளை முன்னேற்றவும், அரசு, தொழில்சார் ஆயங்கள், பொதுநிறுவனங்கள் என்பன பங்குகொண்டு வாசிப்புத்தரத்தை பாடசாலைகளில் உயர்த்துவதற்கும் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளன. ஒரு பயன் தரு விளைவை ஏற்படுத்த வேண்டுமாயின் வாசிப்புக்கு இத்தகைய முதன்மை அளிக்க வேண்டும்.

### *1.05 ஆய்வின் பின்னணி*

மகரகமையிலுள்ள தேசியக் கல்வி நிறுவகம் நடத்திய இரு ஆய்வுகளும், வாசித்தல், எழுதுதல், தொடர்பாடல் ஆகிய எழுத்தறிவில் ஆரம்பப் பாடசாலை மாணாக்கரின் அடைவுத்தரம் குறைந்திருப்பதை எடுத்துக்காட்டுகின்றன.

*1)* எஸ்.பி. எக்கநாயக்க, மொஹொற்றிகே யு. சேதர என்பவர்கள் (1992) மாணாக்கரின் அடைவில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் பற்றி நடத்திய ஆராய்ச்சி, பொலநறுவை, குருணாகல், இரத்தினபுரி, கண்டி, மாத்தளை ஆகிய ஐந்து மாவட்டங்களிலுள்ள வசதிகள் மறுக்கப்பட்ட கிராமியப் பாடசாலைகளில், இரு முக்கிய பாடங்களான மொழி, கணிதம் என்பவற்றில் மாணாக்கரின் அடைவின் பண்பை எடுத்துக் காட்டுகின்றது. இவ்வாய்வின் சில முடிவுகள் பிரச்சினையின் ஆழத்தைச் சித்திரிக்கின்றன:-

| | | |
|---|---|---|
| I. | ஆண்டு 1இல் 47%<br>ஆண்டு 2இல் 40.8% | மொழி அடைவுப் பரீட்சையில் சித்தியடையவில்லை |
| II.. | ஆண்டு 1இல்<br>ஆண்டு 2இல் } 33% | 2-3 எழுத்துச் சொற்களை இனங்கான முடியவில்லை. இத்திறனை அவர்கள் முற்றாகப் பெறவில்லை. |
| III.. | ஆண்டு 1இல் 37%<br>ஆண்டு 2இல் 20% | தமது சொந்தப் பெயரை எழுதமுடியவில்லை |
| IV. | ஆண்டு 3இல் 50%<br>ஆண்டு 4இலும் 5இலும் 70% | இம்மட்டத்துக்கெனக் கொடுக்கப்பட்ட சொற்களைக் கற்றுக்கொள்ள முடியவில்லை |

V. ஈராண்டுகள் பாடசாலை சென்றிருந்தாலும் 25% மாணாக்கர் எழுத்தறிவு அற்றவராகவே இருந்தனர்.

VI. எமதுகல்வியமைப்பு எமது சமுதாயத்தின் சமுதாய பொருளாதார அமைப்பை அப்படியே நிலைபெறச் செய்வது போல் தோன்றுகிறது. இத்தோற்றப்பாடு வளர்ச்சியடைந்த நாடுகள் யாவற்றிலும் காணப் படுவது.

*2)* 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் (1993) நடத்தப்பட்ட ஆராய்ச்சியின் பிரகாரம் 182262 மாணாக்கரில்

10.6% - 10 புள்ளிகளுக்குக் குறைவாகப் பெற்றுள்ளனர்
49.6% - 35 புள்ளிகள் பெற்றுள்ளனர்
26.2% - மாத்திரமே சிங்கள மொழியில் 50 அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

3) மகரகமையயிலுள்ள தேசீய கல்வி நிறுவகத்தின் மதிப்பீட்டுத் திணைக் களம் "ஐந்து வருடப் பாடசாலைக் கல்வியில் மாணாக்கர் கற்றவை யாவை?" என்ற தலைப்பில், பாடசாலையில் ஐந்து வருடங் களை நிறைவு செய்யும் ஆரம்பப் பாடசாலை மாணாக்கர் மத்தியில் ஆராய்ச்சி ஒன்றை நடத்தியது. இவ்வாராய்ச்சியின் மூலம் கண்டுபிடிக் கப்பட்டவை அதிர்ச்சி யூட்டுவனவாக உள்ளன.

இவ்வாராச்சியின் படி மாணாக்கரின் அடைவு வருமாறு :-

எழுத்தறிவு 21%
எண்ணறிவு 13%
வாழ்கைத்திறன்கள் 20%

இங்கு காட்டப்பட்டுள்ள இலக்கங்கள், எழுத்தறிவு, வாசிப்பு, எழுத்து, பயன்தருதொடர்பாடல், பொது ஊடகங்கள் மூலம் தகவல் சேகரித்தல் என்பவற்றில் ஆரம்பப் பாடசாலையின் அடைவுமிகத் தரங்குறைந்துள்ளமையைக் காட்டுகின்றது.

## அத்தியாயம்-02

# ஆய்வுத்திட்டம்

2.01 இவ்வாய்வுத் திட்டத்தின் விடயவெல்லை, பிள்ளைகளுக்கு வாசிப்புப் பழக்கங் களும் தகவற் திறன்களும் இல்லாமைக்குரிய காரணங்களை உள்ளடக்கியுள்ளது. சிக்கலான பல காரணங்கள் பல்வேறு பட்டவையாகயும் ஒன்றோடொன்று தொடர்புற்ற வையாகவும் இருந்து, பழக்கங்களை ஏற்படுத்திக்கொள்ளல், திறன்களைப் பெறுதல் ஆகியவற்றைப் பாதிக்கின்றன. பாடசாலையில் கற்பித்தல், கற்றல் பின்னணியில் இப்பிரச்சினையை நோக்கும் பொழுது, இதிற் செல்வாக்குச் செலுத்தும் மாறிகள் பலவாகவும் பல்வேறு அளவினவாகவும் உள்ளன. இச்சந்தர்ப்பத்தில் மாணாக்கரின் வீட்டுப் பின்னணியும் பாடசாலைப் பின்னணியும் முன்னணியில் நிற்கின்றன. எளிதாக வாசிப்பதற்கு உதவும் காரணி, நான்கு முக்கிய மொழித்திறன்களைப் பெற்றுக்கொள்வதாகும். இத் திறன்களாவன கவனித்துக் கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து, என்பனவாகும். இவையில்லாமல் வாசிக்க முடியாது. எனவே இரண்டாம், நான்காம் வகுப்புகளுக்குக் கொடுக்கப்பட்ட பரீட்சைகள் அவ்வவ் வகுப்புக்களுக்குரிய கலைத்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டவை.

### 2.02 *ஆய்வின் குறிப்பான குறிக்கோள்கள்:*

I. வாசிக்கும் பழக்கம் பிள்ளைகளுக்கு இருக்காமைக்குரிய காரணங்கள்.

II. பிள்ளைகளின் வாசிக்கும் ஆற்றலைக் குறிப்பாக நிர்ணயிக்கும் காரணிகளை, விசேடமாக வீட்டுப் பின்னணி பாடசாலைப் பின்னணி என்பனவற்றை ஆராய்தல்.

III. பொதுவாகவும், மாவட்ட ரீதியாகவும் பாடசாலை வகையின் அடிப்படை யிலும், மாணாக்கரின் வாசிக்கும் ஆற்றலுக்கும் அவர்களின் அடைவு மட்டங்களுக்கும் இடையுள்ளதொடர்பை அறிதல்.

IV. வாசிப்புப் பற்றி மாணாக்கரின் அக்கறைகள், மனப்பாங்குகள் என்பன வற்றை அறிந்து அவர்களின் தேவைகளை நிறைவு செய்ய வழி முறைகளை முன்வைத்தல்.

V. வாசிப்புப் பற்றிய மாணாக்கரின் தேவைகள், வாசிப்பு மட்டங்கள் ஆகியவை பற்றி ஆசிரியர் எவ்வளவு அறிந்துள்ளனர் என்பதை இனங்காணலும், வாசிப்புப் பழக்கங்கள் பற்றி ஆசிரியரின் மனப்பாங் குகளை அறிதலும்.

VI. ஆரம்பப்பாடசாலைப் பிள்ளைகளின் வாசிக்கும் ஆற்றல், வாசிக்கும் பழக்கங்கள், தகவற் திறன்கள் என்பனவற்றை மேம்படுத்த வேண்டிய சிபாரிசுக்களையும் பின்னூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களையும் முன் வைத்தல்

### .2.03. *ஆராய்ச்சி முறையியல்*

மேற்படி குறிக்கோள்களைக் கருத்திற் கொண்டு இவ்வாய்வுக்கென, அநுராதபுரம், குருணாகல் மாத்தறை, கொழும்பு என்ற நான்கு மாவட்டங்களிலும் ஒவ்வொன்றுக்கு மும்மூன்று பாடசாலைகள் வீதம் மொத்தம் 12 பாடசாலைகள் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டன. (படம் I இலங்கையின் கல்வி மாவட்டங்களைக் காட்டுகின்றது. தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்கள் நிழற்படுத்தப்பட்டுள்ளன,) மாகாண கல்வி அதிகாரிகளினது சிபாரிசுக்களும் பெறப்பட்டன. பாடசாலைகள் பின்வருவனவற்றிலிருந்து தெரிவு செய்யப்

பட்டன. மகாவித்தியாலாயம் 1AB, தேசீயப் பாடசாலைகள், கனிட்ட பாடசாலைகள் 1AB, 2 ஆம் 3ஆம் வகைகளைச் சார்ந்த ஆரம்பப் பாடசாலைகள். ஆய்வுக்காகப் பாடசாலைகளைத் தெரிவு செய்யும் பொழுது அவற்றின் சமுதாய பொருளாதார மட்டங் களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது; ஏனெனில் பிள்ளைகளின் கல்வி அடைவு மட்டங்களில் இவை செல்வாக்குச் செலுத்துகின்றன என்பது உணரப்பட்டது. பாடசாலை களைத் தெரிவுசெய்யும் பொழுது கவனத்திற் கொள்ளப்பட்ட ஏனைய மாறிகள் ஆவன, பாடசாலையின் அளவு, அமைவிடம், அதைச் சென்றடையக் கூடிய தன்மை, அங்கு கிடைக்கும் மனித, பௌதீக வளங்கள்.

இவ்வாறு பாடசாலைகள் மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டன. அவை:-

1. தரங்குன்றிய வளங்களையுடைய பாடசாலை
2. சராசரித்தர வளங்களையுடைய பாடசாலை
3. சராசரிக்கு மேற்பட்ட தரத்தில் வளங்களையுடைய பாடசாலை.

*அட்டவணை 1. தெரிவு செய்யப்பட்ட 12 பாடசாலைகள்*

| மாவட்டம் | பாடசாலைகளின் பெயர்கள் | | |
|---|---|---|---|
| | *தரங்குன்றிய வளங்களையுடைய பாடசாலை* | *சராசரித்தர வளங்களையுடைய பாடசாலை* | *சராசரிக்கு மேற்பட்ட தரத்தில் வளங்களையுடைய பாடசாலை* |
| அநுராதபுரம் | டி.எஸ். சேனாநாயக்க கனிட்ட பாடசாலை 2 AB | ரத்மலே திஸ்ஸ மகாவித்தியாலயம் 1 AB | வலிசிங்கி ஹரிச்சந்திர வித்தியாலயம் 1 C |
| குருணாகல் | நிஸங்க மகா வித்தியாலயம் 1 C | மாலியதேவ காட்டுருக்கனிட்ட பாடசாலை 1 AB | வயம்ப றோயல் கல்லூரி தரம் III |
| மாத்தறை | யட்டியன கனிட்ட பாடசாலை 1 C | திஹாகொடை கனிட்டபாடசாலை 1 C | ஒல்கொட் காட்டுருப் பாடசாலை 3 AB |
| கொழும்பு | தர்மாசோக கனிட்ட பாடசாலை 3 C | தர்மபால வித்தியாலயம் பண்ணிப்பிட்டி 1 AB | பெண்கள்: விசாக வித்தியாலயம் ஆண்கள்: ஆனந்த வித்தியாலயம் கொழும்பு தேசீய பாடசாலைகள். |

மாதிரிக் கல்வி மாவட்டங்கள் 4

1. அநுராதபுரம்
2. குருணாகல்
3. மாத்தறை
4. கொழும்பு




*படம் I. 4 மாதிரி மாவட்டங்களைக் காட்டுகின்றது*

சோதனை செய்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட காலப்பகுதி நவம்பர் நடுப்பகுதியில் இருந்து டிசம்பர் முதற்கிழமை வரை (1997). அக்காலப் பகுதியில் அவ்வாண்டுக்கு விதிக்கப்பட்ட பாடத்திட்டத்தை மாணாக்கர் பூர்த்தி செய்து விட்டனர்.

பரீட்சிக்கப்பட்ட மாணாக்கரின் முழுத்தொகை 960 (தொளாயிரத்து அறுபது) இம்மாதிரியில் இரண்டாம் வகுப்பில் இருந்து (20 ஆண்கள் 20 பெண்கள்) 40 மாணாக்கர், நான்காம் வகுப்பில் இருந்து 40 மாணாக்கர் அடங்கினர். இவ்வாறு ஒவ்வொரு மாவட்டத் திலுமிருந்து (120 ஆண்கள், 120 பெண்கள்) 240 பேர் பரீட்சிக்கப்பட்டனர்.

| மாவட்டம் | தரங்குன்றிய வளங்களை உடைய பாடசாலை | | சராசரித்தர வளங்களை உடைய பாடசாலை | | சராசரிக்கு மேற்பட்ட தரத்தில் வளங்களை உடைய பாடசாலை | | மொத்தம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | வகுப்பு 2 | | வகுப்பு 4 | | மொத்தத் தொகை |
| | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | |
| அநுராதபுரம் | 20 | 20 | 20 | 20 | 20 | 20 | 60 | 60 | 60 | 60 | 240 |
| குருணாகல் | 20 | 20 | 20 | 20 | 20 | 20 | 60 | 60 | 60 | 60 | 240 |
| மாத்தறை | 20 | 20 | 20 | 20 | 20 | 20 | 60 | 60 | 60 | 60 | 240 |
| கொழும்பு | 20 | 20 | 20 | 20 | 20 | 20 | 60 | 60 | 60 | 60 | 240 |
| மொத்தம் | 80 | 80 | 80 | 80 | 80 | 80 | 240 | 240 | 240 | 240 | 960 |
| | 160 | | 160 | | 160 | | 480 | | 480 | | |

## *அத்தியாயம் -03*

# தரவுகள் சேகரிப்புக் கருவிகள்

*3.01- a.* மொழிப் பரீட்சைக் கருவிகள் இருவகுப்புகளுக்கும் வேறு வேறாகத் தயாரிக் கப்பட்டன. அநுபவமிக்க ஆசிரியர்களோடு கலந்துரையாடிப் பிரச்சினைகள் இனங்காணப் பட்டன. பெருந்தொகையான விடயங்கள் தயாரிக்கப்பட்டு, சிறு குழுக்கள்மத்தியில் பரீட்சிக்கப்பட்டன. இம்முற்சோதனைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு, அப்பரீட்சை களில் மூன்றில் இரண்டு பிரிவு மாணாக்கர் சரியான விடையளித்த விடயங்களில் இருந்து பரீட்சைக்கு விடயங்கள் தெரிவுசெய்யப்பட்டன.

இரு வினாத்தாள்களிலும் இரு பெரும் பிரிவுகள் இருந்தன.

பகுதி A பகுதி B, வாசிப்புப் பழக்கங்கள் தகவற் திறன்கள் என்பனவற்றைப் பாதிக்கும் காரணிகளைத் தீர்மானிக்க மிகப் பொருத்தமானவை என இனங்காணப்பட்ட தகைமைகளை அளவிடுவதற்கேற்ற வகையில், பகுதி A வடிவமைக்கப்பட்டது. இவை பாடத்திட்டத்தை உள்ளடக்கியன. 2 ஆம் வகுப்புக்கு ஆறு விடயங்களை உள்ளடக்கிய தொகுதி ஒன்றும், 4 ஆம் வகுப்புக்கு 7 விடயங்கள் உள்ளடக்கிய தொகுதி ஒன்றும், மொழிப் பயன்பாடு, கிரகித்தல் என்பவற்றில் சொல்லாட்சித் தகமையை அளவிட வடிவமைக்கப்பட்டன.

*b.* வாசிப்பு பற்றி மாணாக்கரின் பண்புரீதியான கருத்தை அறிவதற்கு, வாசிப்பு ஆற்றலைப் பாதிக்கும் மாறிகளை அளவிடுவதற்கு ஏற்றவாறு வினாத் தாள்களின் B பகுதி வடிவமைக்கப்பட்டது. இந்நோக்கத்துக்காக, அக்கறை விடயப்பதிவேடுகளுடன் 10-20 விடயங்களடக்கிய சுய அறிக்கை வாசிப்பு அளவையும் கொண்ட வாசிப்பு மனப்பாங்கு அளவீடு ஒவ்வொன்றும் இருவகுப்புகளுக்கும் வேறுவேறாக தயாரிக்கப்பட்டது.

*c.* 20 விடயங்கள் கொண்ட சுய அறிக்கை வாசிப்பு அளவை, நூல்கள் வாசிப்பது பற்றி, ஒவ்வொரு வகுப்பிலும் இரு ஆசிரியர்களுக்கென வடிவமைக்கப்பட்டு, 25 ஆசிரியர்களிடமிருந்து அவர்களது (துலங்கல்) கருத்து பெற்றுக் கொள்ளப்பட்டது.

*d.* வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தவும் தகவற் திறன்களைப் பெறவும் எவற்றை வாசிக்க வேண்டும் என அறிவுறுத்தும் வகையில், கல்வி புகட்டும் நிலைமைகள் பற்றி பாடசாலை அதிபர்களின் கருத்துக்களைப் பெற, வினாக் கொத்து ஒன்று தயாரிக்கப்பட்டது.

*e.* எழுத்தாளர், சித்திரிப்போர், நூலகப் பொறுப்பாளர்கள், கல்வியாளர்கள் என்போருடன் நேர்காணல்கள் நடத்தப்பட்டன.

## *3.02 வாசிக்கும் ஆற்றல் தொடர்பாக, கருவிகளில் உள்ள விடயங்களின் பரம்பல்.*

பாடசாலைப் பொதுக்கலைத்திட்டத்தில் இரண்டாம் வகுப்பு பாடத்திட்டத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இரண்டாம் வகுப்புக்குரிய மொழிப்பரீட்சையில் 6 விடயங்கள் அடங்கின:

I. சிங்கள நெடுங்கணக்கில் பரிச்சயமான எழுத்துக்களை இனங்காணல்.
II. 2-3 எழுத்துக்களாலான சொற்களை இனங்காணல்
III. சொல்லாட்சி
IV,V. கிரகித்தல், கருத்தை வெளியிடுதல், ஆக்கத்திறன்
VI. தனது சொந்த முதற்பெயரை எழுதும் ஆற்றல்

I. விடயம் I இல் ஒரு விளக்க உதாரணத்துடன் 6 உப பரீட்சைகள் அடங்கின. பிள்ளைக்கு நான்கு படங்கள் கொடுக்கப்பட்டன. இப்படங்கள் பிள்ளையின் சுற்றாடலிற் காணப்படும் பொருட்கள் மிருகங்கள் என்பனவற்றைச் சித்திரிப்பன. ஒவ்வொரு படத்திலுமுள்ள பொருளினதும் பெயரின் முதலெழுத்தை ஏனைய படங்களிலுள்ள பொருள்களினது பெயர்களில் இணங்காணும்படி கேட்கப்பட்டனர்.

II. பிள்ளைக்கு ஆறு படங்கள் கொடுக்கப்பட்டன. அப்படங்களில் சித்திரிக்கப்பட்டுள்ள பொருளின் பெயரில், ஓரெழுத்துக்கு இடைவெளி விட்டு ஏனைய எழுத்துக்கள் எழுதப்பட்டிருந்தன. அந்த இடைவெளியைச் சரியான எழுத்தினால் நிரப்பிச் சொல்லைப் பூர்த்தி செய்யும்படி பிள்ளை கேட்கப்பட்டது.

III. 5 படங்களை விபரிக்கும் 5 வாக்கியங்கள் பிள்ளைக்குக் கொடுக்கப்பட்டன. இவ்வாக்கியங்களில் 2-3 சொற்களே இருந்தன. வாக்கியங்களை வாசித்து ஒவ்வொரு வாக்கியத்துக்கும் பொருத்தமான படத்தை தெரிவு செய்யும் படி பிள்ளை கேட்கப்பட்டது.

IV. ஒவ்வொன்றிலும் இரண்டு சொற்கள் கொண்ட மூன்று வாக்கியங்கள் பிள்ளைக்குக் கொடுக்கப்பட்டன. ஒவ்வொரு வாக்கியமும் ஒவ்வொரு நிகழ்ச்சியைக் கூறும். பிள்ளை அவ்வாக்கியத்தை வாசித்து, விளங்கி அக்கருத்தைச் சித்திரத்தில் வடிக்கும்படி கேட்கப்பட்டது.

V. ஒரு வாக்கியத்திலுள்ள கருத்து நிறைவுபெறக் கூடியவாறு பெயர்ச்சொல்லை அல்லது வினைச்சொல்லைக் கோடிடும்படி பிள்ளைக்கு அறிவுறுத்தப்பட்டது.

VI. பிள்ளை தனது சொந்த முதற்பெயரை எழுதும்படி கேட்கப்பட்டது.

| I | II | III | IV | V | VI |
|---|---|---|---|---|---|
| எழுத்துக்களை இனங்காணல் | சொற்களை இனங்காணல் | சொல்லாட்சி | கிரகித்தல் | கருத்துவெளிப் பாட்டில் ஆக்கமுயற்சி | தன் சொந்தப் பெயரை எழுதுதல் |
| வினாக்களின் எண்ணிக்கை 5 | 6 | 5 | 5 | 3 | 1 = 25 |

*அட்டவணை 3.* **ஒவ்வொரு உப பரீட்சையிலுமடங்கியுள்ள வினாக்களின் எண்ணிக்கை.**

*3.03* நான்காம் வகுப்பக்குரிய மொழிப் பரீட்சையில் ஏழு விடயங்கள் அடங்கின. இப் பரீட்சையும் அவ்வகுப்புக்குரிய பாடத்திட்ட அடிப்படையில் அமைந்தது. அதன் நோக்கங்கள் பின்வருவனவற்றை அறிதல்:-

1-2) சொல்லாட்சி
3) எழுத்துக்கூட்டும் ஆற்றல்
4) இலக்கியம் சார் கிரக்கித்தல்
5) அனுமானத்துக்குரிய கிரகித்தல்
6) இலக்கணரீதியாக எழுதும் திறன்கள்
7) ஆக்கபூர்வமான எழுத்துத் திறன்களும், தனது பெயர், வயது,முகவரி, பாடசாலையின் பெயர் என்பனவற்றை எழுதும் ஆற்றலும்

வினாப்பகுதி 1,2 என்பன பிள்ளையின் சொல்லாட்சி மட்டத்தை அளவிடுவதற்கு வடிவமைக்கப்பட்டன. கொடுக்கப்பட்ட ஐந்து சொற்களுக்கு ஒத்த கருத்துடைய சொற்கள் ஐந்தும் வேறு ஐந்து சொற்களுக்கு எதிர்க்கருத்

துடைய சொற்கள் ஐந்தும் வழங்கும்படி பிள்ளை கேட்கப்பட்டது. இச்சொற்கள் நான்காம் வகுப்புக்குரிய சிங்கள மொழிப் பாடபுத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டன.

3. இது பிள்ளையின் எழுத்துக் கூட்டும் ஆற்றலைப் பரிசோதிப்பதுடன் தொடர்புடையது. தவறாக எழுத்துக் கூட்டி எழுதப்பட்ட 10 சொற்களைச் சரியாகத் திருத்தி எழுதும்படி பிள்ளை கேட்கப்பட்டது.

4. இது பிள்ளை வாசித்து விளங்கிக் கொள்கிறதா என்பதைப் பரீட்சிப்பது. நாலாம் வகுப்புப் பாடத்திட்டத்திலிருந்து எடுக்கப்பட்ட ஆறு செய்யுட் களை அடிப்படையாகக் கொண்டு கிரகித்தற் பரீட்சை தயாரிக்கப் பட்டது. பிள்ளையின் வாசிக்கம் ஆற்றல், விளங்கிக் கொள்ளுமியல்பு தகவலைச் சேகரிக்கும் ஆற்றல், அறிவைப் பிரயோகிக்கும் ஆற்றல் என்பனவற்றை மதிப்பிடும் வகையில் 5 வினாக்கள் கொடுக்கப்பட்டன.

5. ஐந்தாவது பகுதி, வாசிக்கும் ஆற்றலையும் சொல்லாட்சியையும் முன்னேற்றுவதற்குத் தேவையான பிள்ளையின் அனுமானத்துக்குரிய கிரகித்தல் ஆற்றலை அறியும் நோக்குடன் தயாரிக்கப்பட்டது.

6. இது பிள்ளை வாக்கியங்களை இலக்கணரீதியாக அமைக்கும் ஆற்றலுடையதோ என்பதைக் கண்டறியும் நோக்குடையது. தன்மை ஒருமையிலும், பன்மையிலும், படர்க்கை ஒருமையிலும் பன்மையிலும், வினைச்சொற்களை இலக்கணரீதியாகக் கையாளும் ஆற்றல் பிள்ளைக்கு உண்டா என அறியும் வண்ணம் 10 வினாக்கள் தயாரிக்கப்பட்டன.

7. இது பிள்ளையின் ஆக்கபூர்வமான எழுத்துத்திறன்களை மதிப்பிடும் நோக்குடையது. கருத்து வெளிப்பாட்டுக்காக நான்கு எளிய விடயங்கள் கொடுக்கப்பட்டன. தனது சொந்தப் பெயர், வயது, முகவரி, பாடசாலைப் பெயர் என்பனவற்றை எழுதும் ஆற்றலும் பரீட்சிக்கப்பட்டது.

## பகுதி B

### *3.04 வாசிப்புமனப்பாங்கு ஆய்வும், அக்கறைப் பதிவேடும்.*

a. இவ்வாய்வின் நோக்கம் மாணாக்கரின் வாசிப்புப் பற்றிய பண்புரீதியான கருத்தொன்றைப் பெறுதலாகும். இரண்டாம் வகுப்பில் 4,10,11,14, என்ற இலக்கங்களைக் கொண்ட பரீட்சைகள் வாசிப்பில் மாணாக்கருக்குள்ள அக்கறையை அறிவதற்கு வடிவமைக்கப்பட்டவை. விசேடமாக எத்தகைய கதைகளை அவர்கள் கேட்க விரும்புகிறார்கள் என்பது, 12,13 ஆம் இலக்கங் களைக் கொண்டவை அவர்களது ஓய்வு நேரச் செயற்பாடுகள் பற்றி அறிய உதவுவன, 7, 8 ஆம் இலக்கங்களைக் கொண்டவை அவர்கள் விரும்பும் வானொலி தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பற்றியன.

b. நான்காம் வகுப்பக்குரிய வாசிப்பு அக்கறைப் பதிவேடு அவர்களது குடும்பப் பின்னணியை அடிப்படையாகக் கொண்ட விடயங்களை உள்ளடக்கியது. பிள்ளை தனது வாசிப்புப் பழக்கத்தையும் தகவற் சேகரிப்புத் திறன்களையும் வளர்த்துக் கொள்வதில் பெற்றோரும் வீட்டு முதியவரும் எவ்வளவுக்கு ஆதரவளிக்கின்றனர் என்பது பற்றிப் பொதுவாக அறிந்து கொள்ளும் நோக்குடன் 5,6,8,14 என்ற இலக்கங்களைக் கொண்டவை, வடிவமைக் கப்பட்டன. 9-13, 15- 20, என்ற எண் கொண்ட வினாக்கள் வாசிப்புப் பற்றிய பிள்ளையின் மனப்பாங்கும் வாசிப்பு அக்கறைகளும் பற்றி அறியத் தயாரிக்கப்பட்டன.

c. 25 ஆசிரியர்களுக்கான சுய அறிக்கை வாசிப்பு அளவை 20 விடயங்களை உள்ளடக்கியது, அவை பின்வருமாறு ஒழுங்கமைக்கப்பட்டன.

I. 1-5 வரையுள்ள வினாக்கள், ஆசிரியரின் தராதரம், அனுபவம், பயிற்சி என்பன போன்ற தகவல்களைப் பெறும் நோக்குடையன.

II. 6-15 வரையுள்ள வினாக்கள், பிள்ளைகளுக்குரிய நூல்கள், அவர்களது அக்கறைகள் பிள்ளைகள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை அபிவிருத்தி செய்தல் என்பவை பற்றிய ஆசிரியரின் கருத்தை அறியும் நோக்குடையன.

III. 16-20 வரையிலான வினாக்கள், பிள்ளைகளிடம் காணப்படும் வாசிப்புக் கஷ்டங்கள், அவற்றுக்குரிய காரணங்கள், அவற்றுக்கு ஆசிரியர் மேற்கொள்ளும் பரிகார முறைகள் என்பன பற்றிய ஆசிரியரின் அபிப்பிராயமும், வகுப்பு நூலகங்கள் பற்றி அவர்களது கருத்துக்களும் அறிய வடிவமைக்கப்பட்டவை.

d. பாடசாலைச் சூழல் பற்றியும், வாசிப்புப் பழக்கங்களையும் தகவற் திறன்களையும் அபிவிருத்தி செய்வதில் பாடசாலைப் பின்னணி எவ்வளவுக்கு ஆதரவாக உள்ளது என்பது பற்றியும் அறிவதற்கென 12 பாடசாலை அதிபர்களுக்கும் ஒரு வினாக்கொத்து வடிவமைக்கப்பட்டது.

*அட்டவணை 4.* உப பரீட்சை விடயங்கள் ஒவ்வொன்றிலும் அடங்கிய வினாக்களின் எண்ணிக்கையும் அவற்றுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளும்.

| | 1-2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|
| விடயங்கள் | சொல்லாட்சி ஒத்தக்கருத்துச் சொற்கள் எதிர்க்கருத்துச் சொற்கள் | எழுத்துக் கூட்டும் ஆற்றல் | இலக்கியம் சார் கிரகித்தல் | அனுமானத்துக்கு உரிய கிரகித்தல் | இலக்கண ரீதியாக எழுதும் ஆற்றல் | ஆக்க பூர்வமான எழுத்தாற்றல் |
| வினாக்களின் எண்ணிக்கை | 5 , 5 | 10 | 5 | 5 | 10 | 4 விடயங்கள் தெரிவு |
| புள்ளிகள்% | 10 | 10 | 10 | 10 | 20 | 40 = 100 |

# அத்தியாயம் -04

# தரவுகளைப் பகுப்பாய்வு செய்யும் முறைகள்

4.01 "ஆரம்ப வகுப்புப் பிள்ளைகள் மத்தியில் வாசிப்புப் பழக்கங்களையும் தகவற் திறன்களையும் மேம்படுத்துதல்" என்ற இச் செயற்திட்டத்திற்காகப் பரீட்சைகளை நடத்துவதின் முக்கிய குறிக்கோள் வாசிப்புப் பழக்கங்களிலும் தகவற் திறன்களிலும் உள்ள குறைபாட்டுக்காகக் காரணத்தை அறிவதாகும். சுலபமாகவும் எளிதாகவும் வாசித்தல், வாசித்த வற்றைக் கிரகித்தல், தகவல்களை அனுமானித்தல் சந்தர்ப்பங்கள் ஏற்படும் போது இவற்றை எழுத்து வடிவிலோ வாய்மொழிமூலமோ விளக்குதல் ஆகிய ஆற்றல்களில்தான் ஒருவருடைய வாசிப்புப் பழக்கங்களினதும் தகவற் திறன்களினதும் பண்பு தங்கியுள்ளது. கேட்டல், பேசுதல், வாசித்தல் எழுதுதல் என்ற நான்கு அடிப்படை மொழித் திறன்களைப் பெறுவதனால் திரண்ட விளைவே, சுலபமாக வாசித்தல், கிரகித்தல், கருத்தை வெளிப்படுத்துதல் ஆகியவற்றில் ஆற்றல் ஏற்படுதல். எழுத்தறிவில் இத்தகைய சாதனை உடல் சார்ந்ததும் உளம் சார்ந்ததுமான ஒரு சிக்கலான நடைமுறை. சந்தேக மில்லாமல் இதற்குப் பயிற்சியும் கற்பித்தலும் தேவை. கற்பித்தல் கற்றல் நிலைமைகளைப் பாதிப்பனவும் அவற்றில் செல்வாக்குச் செலுத்துவனவுமான பல மாறிகள் உண்டு என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு பல உப பரீட்சைகளோடு, கூடிய பல மொழிப் பரீட்சைகள் மாணவருக்கான மனப்பாங்குப் பதிவேடுகளும் அக்கறை அளவைகளும், தெரிவுசெய்யப்பட்ட 13 பாடசாலை அதிபர்களுக்கும் 24 ஆசிரியர்க ளுக்கும் வினாக்கொத்துக்கள் என்பன ஏற்படுத்தப்பட்டன. 2 ஆம் 4ஆம் வகுப்பு மாணாக்கருக்கு வேறுவேறாக மொழிப் பரீட்சைகள் நடத்தப்பட்டன, மாவட்ட ரீதியாகவும் பாடசாலை வகை ரீதியாகவும் பால்ரீதியாகவும் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. மாணாக்கரின் ஆற்றுகை, நிகழ்தகவு அட்டவணைகள், நூற்றுவீதங்கள், சராசரிகள், நியம விலகல்கள் என்பவற்றோடு ஆண்களுக்கு வேறாகவும் பெண்களுக்க வேறாகவும் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளது.

4.02 இவ்வாய்வுக்காக, அநுராதபுரம், குருணாகல், மாத்தறை, கொழும்பு, என்ற 4 மாவட்டங்களிலும் இருந்து 13 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டன.

1. தரங்குறைந்த மனித பௌதீக வளங்களையுடைய பாடசாலைகள்.
2. சராசரித் தரமுடைய மனித பௌதிக வளங்களையுடைய பாடசாலைகள்.
3. சராசரித்தரத்திற்கு மேற்பட்டத்தரத்தில் மனித பௌதிக வளங்களையுடைய பாடசாலைகள்.

மாகாணசபை, பிரதேச சபை ஆகியவற்றின் கல்விப்பணிப்பாளர்களின் உதவி பாடசாலைகளைத் தெரிவு செய்வதிற் பெறப்பட்டது.

4.03 பரீட்சைகளுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளில் 80% புள்ளிகளைப் பெற்ற மாணாக்கர் முற்றாகக் கையாளக்கூடிய திறமை மட்டத்தை அடைந்துள்ளர் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. வகுப்பில் எதிர்பார்க்கப்பட்ட அடைவு மட்டத்தை அடையத் தவறியவர்கள், தரங் குறைந்த மட்டத்துக்குரிய 30 புள்ளிகளுக்கும் குறைந்த புள்ளி களைப் பெற்றவராவர்.

இவ்விருமட்டங்களுக்குமுரிய புள்ளி வீச்சு வருமாறு :-

1. தரங்குறைந்த மட்டம் 0.30%
2. முற்றாகக் கையாளக்கூடிய திறமை மட்டம் 80% - 100%

ஒவ்வொரு மாவட்ட ரீதியிலும், பாடசாலை வகைக்கும் பாலுக்கும் ஏற்ப, மாணாக்கரின் முற்றாகக் கையாளக்கூடிய திறமை மட்டங்களையும் தரங்குறைந்த மட்டங்களையும் அடைந்தவர்கள் தொகைகள் மாதிரியுள்ள மாணாக்கரின் தொகையின் நூற்றுவீதமாகக் கணிக்கப்பட்டன.

*அட்டவணை 05.* இரண்டாம் வகுப்பின் சராசரி ஆற்றுகை.

| மாவட்டம் | தரங்குன்றிய வளங்களை உடைய பாடசாலை | | சராசரித்தர வளங்களை உடைய பாடசாலை | | சராசரிக்கு மேற்பட்ட தரத்தில் வளங்களை உடைய பாடசாலை | |
|---|---|---|---|---|---|---|
| | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| அநுராதபுரம் | 87.6 | 71.6 | 80.4 | 79.7 | 83.8 | 84.8 |
| குருணாகல் | 86.6 | 82.2 | 89 | 84 | 91.8 | 91 |
| மாத்தறை | 91.5 | 88.6 | 84.4 | 78.6 | 91.8 | 84 |
| கொழும்பு | 82.6 | 83 | 88.4 | 94.7 | 94 | 89.8 |

*4.04* இரண்டாம் வகுப்பின் சராசரி ஆற்றுகையைச் சுட்டும் அட்டவணை 05, சராசரி ஆற்றுகை உயர்மட்டத்தில் இருப்பதைக் காட்டுகின்றது. பால் அடிப்படையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு இல்லை. மாவட்ட அடிப்படையிலும் குறிப்பிடத்தக்க ஏற்றத் தாழ்வுகள் காணப்படவில்லை. மனித பௌதீக வளங்கள் எளிதிற் கிடைப்பதனால் துலாம்பாரமாகத் தெரியக் கூடிய அடைவுமட்டங்களும் இல்லை.

*அட்டவணை 06.* சராசரி ஆற்றுகை, நியமவிலகல், வகுப்பு 4

| மாவட்டம் | பாடசாலை வகை *1* தரங்குறைந்த | | பாடசாலை வகை *2* சராசரித்தரம் | | பாடசாலை வகை *3* சராசரிக்குமேற்பட்ட | | மாவட்ட ரீதியாக மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| அநுராதபுரம *சராசரி* | 25.6 | 15.3 | 29.6 | 18.5 | 37.6 | 29.6 | 31 | 21.1 |
| *நியம விலகல்* | 14.4 | 10.6 | 7.9 | 5.7 | 18.2 | 21.4 | | |
| குருணாகல் *சராசரி* | 29 | 24 | 35.8 | 35 | 64.3 | 50.2 | 42 | 36.4 |
| *நியம விலகல்* | 11.7 | 18 | 17.5 | 18 | 16.8 | 15.4 | | |
| மாத்தறை *சராசரி* | 41.7 | 24.8 | 33.8 | 16.8 | 67.5 | 60 | 47.6 | 34 |
| *நியம விலகல்* | 17.4 | 20 | 17.8 | 10.5 | 12.5 | 10.5 | | |
| கொழும்பு *சராசரி* | 54.6 | 41.7 | 72 | 62 | 58.5 | 54.3 | 61.8 | 52.8 |
| *நியம விலகல்* | 18.9 | 14 | 13 | 11.9 | 15.19 | 16.8 | | |
| *முற்றுமுழுதான சராசரி* | 32 | | 38 | | 53 | | | |

*4.05.* ஆனால் நாலாம்வகுப்பு மாணாக்கரின் சராசரி ஆற்றுகை மிக விசனத்துக் குரியது. அநுராதபுர மாவட்ட மாதிரியில் உள்ள ஆண்களும் பெண்களும் நாலாம் வகுப்பில் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை மொழித்திறனில் அடையத் தவறிவிட்டனர். இந் நிலைமை குருணாகல் மாத்தறை மாவட்டங்களிலுள்ள பாடசாலை வகை1, பாடசாலை வகை 2, ஆகியவற்றிலும் உண்டு. கொழும்பில் பாடசாலை வகை 3 இல் உள்ள மாணாக்கரின் சராசரி ஆற்றுகையிலும் பார்க்கப் பாடசாலை வகை 2 இல் உள்ள மாணாக்கரின் சராசரி ஆற்றுகை அதிகரித்துக் காணப்படுகின்றது. (அட்டவணை 06.)

இந் நிலைமை தனிப்பட்ட ஆசிரியர்களின் கற்பித்தல் முறைகளின் பயன்தருதன்மையையும் அவர்களது அர்ப்பண சிந்தையையும் பெரும்பாலும் காட்டுவதாகும். எனினும் கொழும்பு மாவட்டம் பெண்களுக்கும் ஆண்களுக்கும் முறையே 61.8, 52.8 வீதம் மிக உயர்ந்த சராசரிப் புள்ளிகளைப் பெற்றுள்ளது.

பாடசாலை வகைப்படி சராசரிப் புள்ளிகளை நோக்கும் பொழுது அப்பாடசாலைகள் மத்தியில் ஏற்றத்தாழ்வுகள் உண்டு. தரங்குறைந்த வசதிகளையுடைய பாடசாலை வகை 1 இல் சராசரி ஆற்றுகை 32.1. சாரசரித்தர வசதிகளையுடைய பாடசாலை வகை 2 இல் சராசரி ஆற்றுகை 37.9. சராசரிக்கு மேற்பட்ட வசதிகளைக் கொண்ட பாடசாலை வகை 3 இல் சராசரி ஆற்றுகை 52.7. மாணாக்கரின் ஆற்றுகையில், விசேடமாக மொழியில் அடிப்படைத் திறன்களைப் பெறுகையில் பாடசாலைச் சுற்றாடலில் பெறும் வசதிகள் அவற்றைத் தீர்மானிக்கும் காரணிகளாக அமைகின்றன. அட்டவணை 6 இன்படி பால் ரீதியாக குறிப்பிடத்தக்க வேறுபாடும் மாணாக்கரின் ஆற்றுகையில் உண்டு. நான்கு மாவட்டங்களிலும் மொழித்திறன் பரீட்சைகளில் பெண்கள் ஆண்களை விஞ்சி விட்டனர். இதற்கு 3 வகைப் பாடசாலைகளுக்கும் கணிக்கப்பட்ட நாலாம் வகுப்புச் சராசரி ஆற்றுகைப் பகுப்பாய்வு (அட்டவணை 07) சான்று பகருகின்றது.

*அட்டவணை 07.* சராரி ஆற்றுகை பெண்கள் - ஆண்கள்....
பாடசாலை வகைகள் 1,2,3, என்பனவற்றுக்கு அமைய



1 = தரங்குறைந்த வளங்களையுடைய பாடசாலைகள்

2 = சராசரித்தர வளங்களையுடைய பாடசாலைகள்

3 = சராசரிக்கு மேற்பட்ட வளங்களையுடைய பாடசாலைகள்.

*4.06* நாலாம் வகுப்பு மாணாக்கரின் முற்று முழுதான அடைவு மட்டங்கள் இரு பிரிவுகளில் விவரமாக மதிப்பீடு செய்யப்பட்டது, முதலாவது பிரிவு- மொழியை முற்றாகக் i fahs f;$ba nkhopj;jpwd;fs ;ngwwt h; அதாவது 80% புள்ளிகளுக்கு மேலாகப் பெற்றவர். இரண்டாவது பிரிவு மொழித்திறன் மட்டத்தை அடையாதவர்கள்; அதாவது 30% புள்ளிளுக்குக் குறைவாக எடுத்தவர்கள்.

*அட்டவணை 08.* மொழித்திறன்களில் முற்று முழுதான அடைவு-வகுப்பு 4

| மாவட்டம் | முற்றாகக் கையாளக் கூடிய மொழித்திறன் மட்டம் 80% | | | | தரங்குறைந்த மொழித்திறன் மட்டம் 30% | | | | மாவட்ட ரீதியில் தரம் குறைந்த மொழித்திறன் மட்டம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | | % | | மொத்தம் | | % | | மொத்தம் | % |
| | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் + ஆண் | |
| அநுராதபுரம் | - | - | - | - | 37 | 51 | 61.6 | 85 | 88 | 66.6 |
| குருணாகல் | 3 | 1 | 5 | 1.6 | 32 | 32 | 53 | 53 | 64 | 5.3 |
| மாத்தறை | 3 | 1 | 5 | 1.6 | 22 | 38 | 36.6 | 63 | 60 | 50 |
| கொழும்பு | 11 | 5 | 18.3 | 8.3 | 5 | 13 | 8.3 | 21.6 | 18 | 15 |
| மொத்தம் | 17 | 7 | 7 | 3 | 96 | 134 | 40 | 55.8 | 230 | 48 |

அநுராதபுரமாவட்டத்தில் ஒரு பிள்ளையாவது மொழித்திறன் பரீட்சையில் முற்றாகக் கையாளக்கூடிய திறமை மட்டத்தை அடைந்திருக்கவில்லை என்பதை அட்டவணை 08 காட்டுகின்றது. மற்ற மாவட்டங்களான குருணாகல் மாத்தறை ஆகிய வற்றிலும் முற்றாகக்கையாளும் திறமை மிகக் குறைவாகக் காணப்படுகின்றது. பெண்கள் 5%, ஆண்கள் 1.6%.

எதிர்பார்க்கப்பட்ட தரத்தை மொழித்திறனில் அடையாதவர்கள் அநுராதபுர மாவட்டப் பாடசாலைகளிலேயே மிக அதிகமாகக் காணப்படுகின்றனர். அதாவது 66.6% குருணாகலில் 53% உம் மாத்தறையில் 50% உம் ஆகும்.

கொழும்பு மாவட்டத்தில் தான் தரங்குறைந்த அடைவு மட்டத்தில் மிகக் குறைவான நூற்று வீதமான 15 காணப்படுகின்றது. இக் குறைவான பெறுபேறுகளிலும் பால்ரீதியான ஏற்றத்தாழ்வுகள் தெளிவாகத் தெரிகின்றன. நான்கு மாவட்டங்களிலும் தரங்குறைந்த மட்ட நூற்று வீதம் ஆண்களுக்குப் பெண்களிலும் பார்க்கக் கூடுதலாக இருப்பதைக் காணலாம் (அட்டவணை 08).

அட்டவணை 09.

பாடசாலை வகை ரீதியாக
முற்றாகக் கையாளும் மட்டம் 80%

| மாவட்டம் | பாடசாலை வகை 1 | | பாடசாலை வகை 2 | | பாடசாலை வகை 3 | |
|---|---|---|---|---|---|---|
| | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| அநுராதபுரம் | - | - | - | - | - | - |
| குருணாகல் | - | - | - | 1 | 3 | - |
| மாத்தறை | - | - | - | - | 3 | 1 |
| கொழும்பு | 1 | - | 8 | 3 | 2 | 2 |
| மொத்தம் | 1 | - | 8 | 4 | 8 | 3 |
| % | 1.25 | - | 10 | 5 | 10 | 3.75 |

அட்டவணை 10.

பாடசாலை வகை ரீதியாக
தரங்குறைந்த மட்டம் 30%

| மாவட்டம் | பாடசாலை வகை 1 | | பாடசாலை வகை 2 | | பாடசாலை வகை 3 | |
|---|---|---|---|---|---|---|
| | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| அநுராதபுரம் | 13 | 19 | 13 | 19 | 11 | 13 |
| குருணாகல் | 16 | 16 | 13 | 12 | 3 | 4 |
| மாத்தறை | 9 | 17 | 13 | 20 | - | 1 |
| கொழும்பு | 4 | 8 | 1 | 1 | - | 4 |
| மொத்தம் | 42 | 60 | 40 | 52 | 14 | 22 |
| % | 63.75 | | 57.5 | | 22.6 | |

பாடசாலை வகைகள் 1,2,3, ரீதியாக முற்றாகக் கையாளும் திறமை மட்டமும் தரங்குறைந்த மட்டமும் பகுப்பாய்வு செய்யப்பட்ட பொழுது 4 ஆம் வகுப்பு மாணாக்கரின் அடைவு மிகக்குறைவாகவே காணப்படுகின்றது. இந்நிலை விசேடமாக, மிகக் குறைவான மனிதபௌதிக வளங்ளைக் கொண்ட பாடசாலை வகை 1 இல் காணப்படுகின்றது. அத்துடன் பாடசாலைகளில் வசதிகள் அதிகரிக்க அதிகரிக்க சித்தியடையாதோர் நூற்றுவீதமும் குறைந்து செல்கின்றது.

பாடசாலை வகை 1 - 63.75%
பாடசாலை வகை 2 - 57.5%
பாடசாலை வகை 3 - 22.5%

## *அத்தியாயம் - 05*

# இலக்கியத் தொடர்பான உப பரீட்சைகளைப் பகுப்பாய்வு செய்தல் – வகுப்பு 2

*.01* வெவ்வேறு மாவட்டங்கள், பாடசாலை வகைகள், ஆகியவற்றின் மத்தியிலும், ஆண்கள் பெண்களுக்கிடையிலும் அவர்களது ஆற்றுகையிலும் அகன்ற வேறுபாடு உண்டு. 2ஆம் 4ஆம் வகுப்புகளுக்குரிய இரு பரீட்சைகளினதும் குறிக்கோள்களுக்குமேற்ப ஒவ்வொருவிடயத்திலும் மாணாக்கரின் ஆற்றுகை, ஆற்றுகை பற்றிய விபரங்களை அறிவதற்கும், பிரச்சினைகள் எத்துறைகளில் முக்கியமாக உள்ளன என்பதை அறிவதற்கும் வேறுவேறாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டது. மொழியை முற்றாகக் கையாளக் கூடிய திறமை கொண்டவர்கள் எனக்கருதப்படுபவர்களாகிய 80% மேல் புள்ளிகள் எடுத்தவர்களின் எண்ணிக்கையும், தரங்குறைந்தவர்களாகக் கருதப்படுப வர்களாகிய 30% க்கும் குறைவான புள்ளிகளை எடுத்தவர்களின் எண்ணிக்கையும் ஆண்களுக்கு வேறாகவும் பெண்களுக்கு வேறாகவும் ஒவ்வொரு உப பரீட்சை விடயத் துக்கும் கணிக்கப்பட்டன. மாவட்டரீதியாகவும், பாடசாலை வகைரீதியாகவும் ஆற்றுகையும் நூற்றுவீதங்களும் கணிக்கப்பட்டன. (அட்டவணை 11)

### I. *நெடுங்கணக்கிலுள்ள எழுத்துக்களை இனங்காணல்*

2ஆம் வகுப்பு உப பரீட்சையில் முதாலாவது விடயம் தெரிவு செய்யப்பட்ட சில சிங்கள மொழி எழுத்துக்களை இனங்காணல். இதில் 5 கேள்விகளோடு கூடிய படங்கள் இருந்தன. படங்களின் பெயரின் முதலெழுத்தை இனங்கண்டு அவற்றை வேறு சொற்களிலுள்ள அதே எழுத்துக்களுடன் தொடர்புபடுத்தி மாணாக்கர் அவ்வெழுத்துக்களின் முன் ✓ என்ற அடையாள மிடும்படி கேட்கப்பட்டனர்.

இவ்வாறு எழுத்துக்களை இனங்காணபதில் முற்றான திறமை அடைந்த மாணாக்கரதும், தரங்குறைந்த மட்டத்தில் உள்ள மாணாக்கரதும் எண்ணிக் கையை அட்டவணை 12 காட்டுகின்றது. பெண்கள் ஆண்கள் ஆகிய இருபாலா ரினதும் முற்று முழுதானஆற்றுகை திருப்திகரமாக உள்ளது. மாவட்டங்களுக் கிடையிலோ அல்லது பாடசாலை வகைகள் 1,2,3, ஆகியவற்றின் மத்தியிலோ ஏற்றத்தாழ்வுகள் பெரிதாகத் தெரிய வில்லை. எனினும் முற்றான திறமை மட்டத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் குறிப்பிடத்தக்க வேறுபாடு உண்டு. அதாவது 4 மாவட்டங்களிலும் ஆண்களிலும் பார்க்க பெண்கள் திறமையாக ஆற்றியுள்ளனர்.

*அட்டவணை-12.* எழுத்துக்களை இணங்காண்பதில் முற்றான திறமை மட்டமும் தரங்குறைந்த மட்டமும் -வகுப்பு-2

| மாவட்டம் | முற்றான திறமை மட்டம் மொத்தம் | | % | | தரங்குறைந்த மட்டம் மொத்தம் | | மாவட்ட ரீதியில் முற்றான திறமை மட்டம் மொத்தம் | மாவட்ட ரீதியில் முற்றான திறமை மட்டம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | *பெண்* | *ஆண்* | | | | | *பெண்+ ஆண்* | *%* |
| அநுராதபுரம் | 41 | 39 | 68 | 65 | 6 | 7 | 80 | 66.6 |
| குருணாகல் | 44 | 35 | 73 | 58 | 5 | 9 | 79 | 65.8 |
| மாத்தறை | 47 | | 78 | 65 | 4 | 7 | 86 | 71.6 |
| கொழும்பு | 46 | 30 | 76 | 60 | 12 | | 76 | 68.3 |

வகுப்பு 2

| பாடசாலை வகை | ஒவ்வொரு மாவட்டத்திலும் 4பாடசாலைகள் | பரீட்சை விடயம் 1: எழுத்துக்களை இணங்காணல் 80%+ | | 30%– | | 2: சொற்களை இணங்காணல் 80%+ | | 30%– | | 3: சொல்லாட்சியும் கிரகித்தலும் 80%+ | | 30%– | | 4: அனுமானத்திற்குரிய கிரகித்தல் 80%+ | | 30%– | | 5: கருத்து வெளிப்பாடும் ஆக்க முயற்சியும் 80%+ | | 30%– | | 6: முதற் பெயரை எழுத முடியாது | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| வகை 1 | 1 | 16 | 15 | - | 2 | 16 | 14 | - | 4 | 17 | 14 | - | 3 | 18 | 12 | - | 1 | 12 | 12 | - | 5 | 2 | - |
| | 2 | 15 | 6 | 2 | 5 | 20 | 19 | - | - | 19 | 18 | - | - | 20 | 20 | - | - | 19 | 18 | 1 | 2 | - | - |
| | 3 | 16 | 11 | 2 | - | 20 | 20 | - | - | 20 | 20 | - | - | 20 | 20 | - | - | 19 | 20 | - | - | - | - |
| | 4 | 8 | 10 | 10 | 6 | 20 | 19 | - | - | 18 | 20 | 2 | - | 19 | 20 | - | - | 19 | 14 | - | 2 | 2 | 1 |
| மொத்தம் = | | 55 | 42 | 14 | 13 | 76 | 72 | - | 4 | 74 | 72 | 2 | 3 | 77 | 72 | - | - | 69 | 64 | 1 | 9 | 4 | 1 |
| % = | | 68.8 | 52.5 | 17.5 | 16.25 | 95 | 90 | - | 5 | 92.5 | 90 | 2.5 | 3.75 | 96.25 | 90 | - | - | 86.3 | 80 | 1.25 | 11.25 | 5 | 1.25 |
| வகை 2 | 1 | 11 | 10 | 4 | 2 | 15 | 15 | 2 | - | 20 | 14 | - | 1 | 20 | 17 | - | - | 13 | 13 | 1 | 2 | 1 | 5 |
| | 2 | 14 | 14 | 1 | 2 | 20 | 20 | - | - | 20 | 17 | - | - | 19 | 9 | - | - | 18 | 15 | 1 | 4 | - | 3 |
| | 3 | 14 | 12 | 1 | 5 | 19 | 17 | - | - | 17 | 14 | - | 4 | 18 | 20 | - | - | 17 | 18 | 1 | 1 | 2 | 2 |
| | 4 | 18 | 9 | 2 | 6 | 20 | 20 | - | - | 20 | 20 | - | - | 20 | 20 | - | - | 20 | 20 | - | - | - | - |
| மொத்தம் = | | 57 | 45 | 8 | 15 | 74 | 72 | 2 | - | 77 | 65 | - | 5 | 77 | 66 | - | - | 68 | 66 | 3 | 7 | 3 | 10 |
| % = | | 71.25 | 56.25 | 10 | 18.8 | 92.5 | 90 | 2.5 | - | 96.25 | 81.25 | - | 6.25 | 96.25 | 82.5 | - | - | 85 | 83 | 3.8 | 8.8 | 3.8 | 12.3 |
| வகை 3 | 1 | 14 | 14 | 2 | 3 | 19 | 19 | 1 | 1 | 17 | 18 | 2 | 2 | 19 | 18 | 1 | 1 | 15 | 18 | 3 | 1 | 2 | 5 |
| | 2 | 15 | 15 | 2 | 2 | 20 | 20 | - | - | 20 | 20 | - | - | 20 | 20 | - | - | 20 | 20 | - | - | - | - |
| | 3 | 17 | 16 | 1 | 2 | 19 | 20 | - | - | 20 | 19 | - | - | 20 | 20 | - | - | 20 | 18 | - | 2 | - | - |
| | 4 | 20 | 17 | - | 1 | 20 | 20 | - | - | 20 | 20 | - | - | 20 | 14 | - | - | 19 | 19 | 1 | 1 | - | - |
| மொத்தம் = | | 66 | 62 | 5 | 8 | 78 | 79 | 1 | 1 | 77 | 77 | 2 | 2 | 79 | 72 | 1 | 1 | 74 | 75 | 4 | 4 | 2 | 5 |
| % = | | 82.5 | 77.5 | 3.8 | 10 | 95.5 | 98.8 | 1.25 | 1.25 | 96.25 | 96.25 | 2.5 | 2.5 | 98.75 | 90 | 1.25 | 1.25 | 92.5 | 93.8 | 5 | 5 | 2.5 | 6.25 |

*அட்டவணை:11*

*பரீட்சைக் குறிப்பேடுகளுடன் தொடர்புபடுத்தி விடய அடிப்படையில் தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல் - வகுப்பு 2*

## II. 2-3 எழுத்துக்கள் கொண்ட சொற்களை இனங்காணல்

சொற்களிலிருந்து விடப்பட்ட எழுத்துக்கள் ஒரு வட்டத்துள் இருந்தன. கொடுக்கப்பட்ட படத்தை கொண்டு கருத்துள்ள சொற்களை ஆக்கும் படி மாணாக்கர் கேட்கப்பட்டனர். அநுராதபுர மாவட்டத்தில் 83% பெண்களும் 80% ஆண்களும் முற்றான திறமை மட்டத்தை அடைந்திருந்தனர். ஏனைய மூன்று மாவட்டங்களிலும் இன்னும் மேலான பெறுபேறுகள் கிடைத்தன. பெண்களில் 5% உம் ஆண்களில் 8% மாத்திரமே தேவையான மட்டத்தைச் சொற்களை இனங்காண்பதில் அடையவில்லை.

*அட்டவணை -13* சொற்களை இனங்காணல் - வகுப்பு 2.

| மாவட்டம் | முற்றான திறமை மட்டம் மொத்தம் | | முற்றான திறமை மட்டம் % | | தரங்குறைந்த மட்டம் மொத்தம் | | மாவட்ட ரீதியில் முற்றான திறமை மட்டம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | மொத்தம் | % |
| அநுராதபுரம் | 50 | 48 | 83 | 80 | 3 | 5 | 98 | 81.6 |
| குருணாகல் | 60 | 59 | 100 | 98 | -- | -- | 119 | 99.1 |
| மாத்தறை | 58 | 57 | 96 | 95 | -- | -- | 115 | 95.8 |
| கொழும்பு | 60 | 59 | 100 | 98 | -- | -- | 119 | 99 |

## III. சொல்லாட்சியும் வாசித்துக் கிரக்கித்தலும் - நேரிடையான கருத்து

அட்டவணை 14, நான்கு மாவட்டங்களிலும் உள்ள பிள்ளைகள் சொல்லாட்சியிலும் நேரிடையான கருத்தைக் கிரகித்தலிலும் முற்றான திறமையைத் திருப்திகரமாக அடைந்து விட்டனர் என்பதைக் காட்டுகின்றது. எல்லா மாவட்டங்களிலும் அவர்கள் பெற்ற புள்ளிகளின்சராசரி நூற்றுவீதம் 83க்கு மேற்பட்டது. குறிப்பிடத்தக்க ஏற்றத்தாழ்வுகள்மாவட்ட ரீதியாகப் புலப்படவில்லை. கொழும்பு மாவட்டம் தவிர்ந்த ஏனையமாவட்டங்களில் ஆண்களிலும் பார்க்கப் பெண்கள் திறமையாக ஆற்றியுள்ளனர். கிரகித்தலில் மிக அற்பமான எண்ணிக்கையினரே இவ்வகுப்புக்குரிய தரத்தை அடையவில்லை.

*அட்டவணை 14-* சொல்லாட்சியும் வாசித்துக் கிரக்கித்தலும் -வகுப்பு 2

| மாவட்டம் | முற்றான திறமை மட்டம் மொத்தம் | | முற்றான திறமை மட்டம் % | | தரங்குறைந்த மட்டம் மொத்தம் | | தரங்குறைந்த மட்டம் % | மாவட்ட ரீதியில் முற்றான திறமை மட்டம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | | மொத்தம் | % |
| அநுராதபுரம் | 54 | 46 | 90 | 76 | 2 | 6 | 6.6 | 100 | 83 |
| குருணாகல் | 59 | 55 | 98 | 91 | -- | -- | -- | 114 | 95 |
| மாத்தறை | 57 | 53 | 95 | 88 | -- | 4 | 3.3 | 110 | 91.6 |
| கொழும்பு | 58 | 60 | 96 | 100 | 2 | -- | 1.6 | 118 | 98.1 |

## IV. அனுமானத்துக்குரிய கிரகித்தல்

இந்த உப பரீட்சையில் 3 வினாக்கள் மாத்திரம் இருந்தன. ஒவ்வொன்றிலும் இரு சொற்கள் மாத்திரம் கொண்ட மூன்று வாக்கியங்களை மாணாக்கர் வாசித்து அவற்றின் கருத்தை, அனுமானித்து, அக்கருத்தைப் புலப்படுத்தக்

கூடிய எளிய படங்களை வரைய வேண்டும். இப் பரீட்சைப் பெறுபேறுகளும் திருப்திகரமாக உள்ளன. கிட்டத்தட்ட எல்லோரும் முற்றான திறமை மட்டத்தை அடைந்து விட்டனர். இக் கிரக்கித்தற் பரீட்சையில் அநுராதபுரத்திரல் மாத்திரம் 3% மாணாக்கர் எதிர்பார்க்கப்பட்ட தரத்தை அடையவில்லை. மாத்தறை மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் பெண்கள் ஆண்களிலும் பார்க்க ஓரளவு அதிக திறமை பெற்றுள்ளனர். (அட்டவணை 15)

*அட்டவணை 15* அனுமானத்துக்குரிய கிரகித்தல் -வகுப்பு 2

| மாவட்டம் | முற்றான திறமை மட்டம் மொத்தம் | | முற்றான திறமை மட்டம் % | | தரங்குறைந்த மட்டம் மொத்தம் | | தரங் குறைந்த மட்டம் % | மாவட்ட ரீதியில் முற்றான திறமை மட்டம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | *பெண்* | *ஆண்* | *பெண்* | *ஆண்* | *பெண்* | *ஆண்* | *பெண்+ஆண்* | மொத்தம் | % |
| அநுராதபுரம் | 57 | 47 | 95 | 78 | 1 | 3 | 3 | 104 | 89.6 |
| குருணாகல் | 59 | 49 | 98 | 81 | - | - | - | 108 | 90 |
| மாத்தறை | 58 | 60 | 96 | 100 | - | - | - | 118 | 98 |
| கொழும்பு | 59 | 54 | 98 | 90 | - | - | - | 113 | 94 |

## V. *கருத்து வெளிப்பாடும் ஆக்கமுயற்சியும்*

குருணாகல், மாத்தறை, கொழும்பு ஆகிய மூன்று மாவட்டங்களிலும், கருத்து வெளிப்பாடு ஆக்கமுயற்சி ஆகியவற்றில், மாணாக்கர் அதி உயர் மட்டத்தை அடைந்துள்ளனர். 90% மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளனர். (அட்டவணை 16). அநுராதபுர மாவட்டத்தில் சராசரிப் புள்ளிகள் 69%. மிக அற்ப எண்ணிக்கையினரே இவ்வகுப்புக்குரிய அடைவு மட்டத்தை எட்டவில்லை.

*அட்டவணை- 16.* கருத்து வெளிப்பாடும் ஆக்கமுயற்சியும்

| மாவட்டம் | முற்றான திறமை மட்டம் மொத்தம் | | முற்றான திறமை மட்டம் % | | தரங்குறைந்த மட்டம் மொத்தம் | | தரங்குறைந்த மட்டம் % | மாவட்ட ரீதியில் முற்றான திறமை மட்டம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | *பெண்* | *ஆண்* | *பெண்* | *ஆண்* | *பெண்* | *ஆண்* | *பெண்+ஆண்* | மொத்தம் | % |
| அநுராதபுரம் | 40 | 43 | 66 | 71 | 4 | 8 | 10 | 83 | 69 |
| குருணாகல் | 57 | 53 | 95 | 88 | 2 | 6 | 6 | 110 | 91.6 |
| மாத்தறை | 56 | 56 | 93 | 93 | 1 | 1 | 1.6 | 112 | 93 |
| கொழும்பு | 58 | 53 | 96 | 88 | 1 | 3 | 2.5 | 111 | 92.5 |

## VI. *தமது பெயரை எழுதமுடியாத மாணக்கர் -வகுப்பு 2*

அநுராதபுர மாவட்டத்தில் 12.5% மாணாக்கர் திருப்திகரமாகத் தமது முதற் பெயரை எழுதமுடியவில்லை. எனவே 87% மாணாக்கர் வாசிக்கக்கூடிய மட்டத்தில் தமது பெயரை எழுதக் கூடியவர்கள்.

*அட்டவணை 17-தமது பெயரை எழுதமுடியாத மாணக்கர் வகுப்பு2*

| மாவட்டம் | பெண் | ஆண் | ஆண்கள் பெண்களின் மொத்த எண்ணிக்கை | மொத்த எண்ணும் %உம் |
|---|---|---|---|---|
| அநுராதபுரம் | 5 | 10 | 15 | 12.5 |
| குருணாகல் | - | 3 | 3 | 2.5 |
| மாத்தறை | 2 | 2 | 4 | 3.3 |
| கொழும்பு | 2 | 1 | 3 | 2.5 |
| மாதிரியில் | மொத்தம் | | 25 | 10% |

முற்றான திறமை மட்டம் தரங்குறைந்த திறமை மட்டம் ஆகியவற்றின் சராசரி நூற்றுவீதத்தை, பரீட்சையின் 5 விடயங்களுக்கும், பாடசாலை வகை அடிப்படையில் கணிக்கும் பொழுது, ஒரு பாடசாலையில் கிடைக்கின்ற மனித பௌதிக வளங்கள் அப் பாடசாலையின் அடைவு மட்டங்களை எவ்வாறு பாதிக்கின்றன என்பது தெரியவருகின்றது. அட்டவணை 18.01, 18.02. சராசரிக்கு மேலான வளங்களைக் கொண்ட பாடசாலையான பாடசாலை வகை 3 இல் தான் 5 விடயங்களிலும் முற்றான திறமை மட்டச் சராசரி அதிகமாகக் காணப்படுகின்றது. தரங்குறைந்த வசதிகள் உள்ள பாடசாலை வகையின் நிலைமை இதற்கு எதிர்மாறாக உள்ளது. எனினும் முற்றளாவிய ரீதியில் 4ஆம் வகுப்போடு இரண்டாம் வகுப்பை ஒப்பிட்டு நோக்கும் பொழுது 2 ஆம் வகுப்பின் ஆற்றுகை பாராட்டத்தக்கது.

*அட்டவணை-18.01, எழுத்தறிவில் 5 உப பரீட்சைகளிலும் முற்றான திறமை மட்டம்*

| பரீட்சை விடயங்கள்= | 1 | | 2 | | 3 | | 4 | | 5 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பாடசாலை வகை | மொத்தம் | % | மொத்தம் | % | மொத்தம் | % | மொத்தம் | % | மொத்தம் | % |
| 1 | 97 | 60.5 | 148 | 92.5 | 146 | 91 | 149 | 93 | 133 | 83 |
| 2 | 102 | 63.8 | 146 | 91 | 142 | 88.8 | 143 | 89 | 134 | 83.8 |
| 3 | 128 | 80 | 157 | 98 | 154 | 96.3 | 151 | 94 | 149 | 93 |

*அட்டவணை 18.02 தரங்குறைந்த மட்டம்*

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 27 | 17 | 4 | 2.25 | 5 | 3.3 | 1 | .6 | 10 | 6.2 |
| 2 | 23 | 14 | 2 | 1.25 | 5 | 3.3 | 1 | .6 | 10 | 6.2 |
| 3 | 13 | 8 | 2 | 1.25 | 4 | 2.2 | 2 | 1.25 | 8 | 5 |

## *5.02 உப பரீட்சைகளின் பகுப்பாய்வு - வகுப்பு 4*

4 ஆம் வகுப்புப் பரீட்சைகள் ஏழு விடயங்கள் கொண்டன. இவ்வேழு உப பரீட்சைகளிலும் மாணாக்கரின் ஆற்றுகை ஒவ்வொரு விடயத்தினதும் குறிக்கோளுக்கு அமையப் பின்வருமாறு வேறு வேறாகக் கணிக்கப்பட்டது.

### *1. சொல்லாட்சி-ஒத்தகருத்துடைச் சொற்கள்*

நாலாம் வகுப்புக்குரிய பாடப்புத்தகத்திலிருந்து ஒத்த கருத்துடைச் சொற்கள் தெரிவு செய்யப்பட்டன. 2 ஆம் வகுப்புக்குச் செய்தது போலவே மாவட்ட ரீதியாக, முற்றான திறமை மட்டம் தரங்குறைந்த மட்டம் என்பனவற்றை கணித்துப் பகுப்பாய்வு செய்யப்பட்டது. (அட்டவணை 19).

*அட்டவணை 19 உப பரீட்சை சொல்லாட்சி- ஒத்த கருத்துடைச் சொற்கள்- வகுப்பு -4*

| மாவட்டம் | முற்றான திறமை மட்டம் மொத்தம் | | முற்றான திறமை மட்டம் % | | தரங்குறைந்த மட்டம் மொத்தம் | | தரங் குறைந்த மட்டம் % | | மாவட்ட ரீதியில் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | முற்றான திறமை மட்டம் மொத்தம் | தரங் குறைந்த மட்டம் மொத்தம் | முற்றான திறமை மட்டம் % | தரங் குறைந்த மட்டம் % |
| அநுராதபுரம் | 2 | 5 | 3.3 | 8.3 | 37 | 43 | 61.7 | 71.7 | 7 | 80 | 5.8 | 66.6 |
| குருணாகல் | 12 | 2 | 20 | 3.3 | 29 | 33 | 48.3 | 55 | 14 | 62 | 10.8 | 51.7 |
| மாத்தறை | 15 | 9 | 25 | 15 | 23 | 30 | 38.3 | 50 | 24 | 53 | 20 | 44 |
| கொழும்பு | 28 | 26 | 46.7 | 43.3 | 11 | 10 | 18.3 | 16.7 | 54 | 21 | 45 | 17.5 |
| | | | | | | | | | 99 | 216 | 21 | 45 |

விடய அடிப்படையில் பகுப்பாய்வு செய்யும் பொழுது, மாவட்டங் களுக்கு இடையில் மிகத் தெளிவாக ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. சகல வளங்களையும் உடைய கொழும்பு மாவட்ட பிள்ளைகள் தான் குறிப்பிடத் தக்க முற்றான திறமை மட்டத்தை அடைந்துள்ளனர். அநுராதபுர மாவட்டத்தில் 62% பெண்களும் 72% ஆண்களும் அவ்வகுப்புக்குரிய சொல்லாட் சியைப் பெறத் தவறிவிட்டனர். குருணாகல் மாத்தறை மாவட்டங்களில் முறையே 52% உம் 44% உம் சொல்லாட்சியைப் பெற்றிருக்கவில்லை. அதாவது முழுவதிலும் 45% சொல்லாட்சி பெறுவதில் வெற்றியடையவில்லை.

### 2. *சொல்லாட்சி - எதிக்கருத்துடைச் சொற்கள்.*

மாணாக்கரின் சொல்லாட்சி மட்டத்தைப் பரீட்சிக்க அமைக்கப்பட்ட இவ்விடயப் பரீட்சையிலும், கொழும்பு மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங் களில் மாணவரின் புள்ளிகள் மிகக் குறைவாகவே உள்ளன. அட்டவணை 20. கொழும்பு மாவட்டத்தில் 58.3 பெண்கள் சாதனை படைத்துள்ர். பெண்கள் ஆண்களைவிடத் திறம்படச் செய்துள்ளனர். ஒப்பீட்டளவில் அநுராதபுர மாவட்டப் பிள்ளைகளில் இவ்வகுப்புக்குரிய சொல்லாட்சியை பெறத்தவறி, முற்றான திறமை மட்டத்தை மிகக் குறைந்த 30.8% ஆண் பிள்ளைகளே அடைந் துள்ளனர்.

மாணாக்கரின் ஆற்றுகையில் கொழும்பு, அநுராதபுரம் ஆகிய மாவட் டங்களுக் கிடையில் ஏற்றத்தாழ்வு மிகத் தெளிவாக உள்ளது. எனினும் முற்றளாவிய ரீதியில் இவ்வுப பரீட்சையில் சித்தியடையத் தவறியவர் எண்ணிக்கை மிகக் குறைவு. அது 23% மட்டுமே (அட்டவணை 20).

*அட்டவணை 20-சொல்லாட்சி -எதிர்க்கருத்துடைச் சொற்கள் -ஆற்றுகை*

| மாவட்டம் | முற்றான திறமை மட்டம் மொத்தம் | | முற்றான திறமை மட்டம் % | | தரங்குறைந்த மட்டம் மொத்தம் | | தரங் குறைந்த மட்டம் % | | மாவட்ட ரீதியில் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | முற்றான திறமை மட்டம் மொத்தம் | தரங் குறைந்த மட்டம் மொத்தம் | முற்றான திறமை மட்டம் % | தரங் குறைந்த மட்டம் % |
| அநுராதபுரம் | 4 | 8 | 66 | 13.3 | 18 | 19 | 30 | 31 | 12 | 37 | 10 | 30.8 |
| குருணாகல் | 19 | 8 | 31.6 | 13.3 | 18 | 14 | 30 | 23 | 27 | 32 | 22.5 | 26.6 |
| மாத்தறை | 11 | 13 | 18.3 | 21.7 | 11 | 21 | 18.3 | 35 | 24 | 32 | 20 | 26.6 |
| கொழும்பு | 35 | 16 | 58.3 | 26.6 | 01 | 07 | 1.6 | 11.6 | 51 | 08 | 42.5 | 6.7 |
| | | | | | | | | | 114 | 109 | 24 | 23 |

### *3. எழுத்துக் கூட்டும் ஆற்றல்.*

இவ்வாற்றலில் மாணாக்கரின் அடைவு எமது உள்ளத்தைச் சோர்வடையச் செய்கிறது. 4 மாவட்டங்களில் முற்றளாவிய ரீதியில் 2.7% ஆனவரே முற்றான திறமை மட்டத்தை அடைந்துள்ளனர். 4 ஆம் வகுப்பு மாணாக்கரின் 64% ஆனவர்கள் அவ்வகுப்புக்குரிய சொற்களை எழுத்துக்கூட்ட முடியாத நிலையில் உள்ளனர் என்பதை அட்டவணை 21 காட்டுகின்றது. அநுராதபு மாவட்டம் மிகத் தாழ் நிலையில் உள்ளது. இம் மாவட்டத்தில் இப் பரீட்சையில் 82% சித்தியடையவில்லை. கொழும்புக்கும் ஏனைய மாவட்டங்களுக்கும் இடையில் உள்ள ஏற்றத்தாழ்வு மிகத் துலாம்பரமாக உள்ளது. அட்டவணை 21 ஆண்கள் பெண்களிலும் பார்க்க இவ்விடயத்தில் குறைவுடையவர்களாக உள்ளனர். 70.8% ஆண்கள் தரங்குறைந்த மட்டத்தில் உள்ளனர்.

*அட்டவணை 21- எழுத்துக் கூட்டும் ஆற்றல்.*

| மாவட்டம் | முற்றான திறமை மட்டம் மொத்தம் | | முற்றான திறமை மட்டம் % | | தரங்குறைந்த மட்டம் மொத்தம் | | தரங்குறைந்த மட்டம் % | | மாவட்ட ரீதியில் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | தரங் குறைந்த மட்டம் | தரங் குறைந்த மட்டம் |
| | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | மொத்தம் | % |
| அநுராதபுரம் | 0 | 0 | 0 | 0 | 44 | 54 | 73 | 90 | 98 | 81.6 |
| குருணாகல் | 2 | 0 | 3.3 | 0 | 41 | 43 | 68.3 | 71.6 | 84 | 70. |
| மாத்தறை | 2 | 0 | 3.3 | 0 | 40 | 46 | 66.6 | 76.6 | 86 | 71.7 |
| கொழும்பு | 8 | 1 | 13 | 1.7 | 13 | 27 | 21.7 | 45 | 40 | 33. |
| மொத்தம் | 12 | 1 | 13 | 2.7 | 138 | 170 | 57.7 | 70.8 | 308 | 64 |

### *4. நேரிடையான கருத்தைக் கிரகித்தல்*

இவ்விடயத்தில் மாவட்டரீதியாகவும், பாடசாலை வகை ரீதியாகவும் பால் ரீதியாகவும், ஏற்றத்தாழ்வுகள் அட்டவணை 22 இல் தெளிவாக தெரிகின்றன. அவ்வகுப்புக்குரிய பாடப்புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்டப்பட்ட 6 எளிய செய்யுட்களையும் அநுராதபுரத்தில் 78% பெண்களும் 58% ஆண்களும் கிரகிக்கத் தவறிவிட்டனர். பாடசாலை வகை ரீதியாக நோக்கும் பொழுது சராசரிக்கு மேலான வளங்களையுடைய பாடசாலையில் இருந்து தரங் குறைந்த வளங்களையுடைய பாடசாலை வகை வரை, இறங்கு வரிசையில் புள்ளிகள் காணப்படுகின்றன. முற்றான திறமை மட்டத்தில் பெண்கள் 45% பெற்று 38% பெற்ற ஆண்களிலும் முன்னேறிய நிலையில் காணப்படுகின்றனர். கொழும்பு மாவட்டத்தில் முற்றான திறமை மட்டத்தை அடைந்த பெண்கள் 70%- (அட்டவணை 22.)

*அட்டவணை 22- நேரிடையான கருத்தைக் கிரக்கித்தல்*

| மாவட்டம் | முற்றான திறமை மட்டம் மொத்தம் | | முற்றான திறமை மட்டம் % | | தரங்குறைந்த மட்டம் மொத்தம் | | தரங்குறைந்த மட்டம் % | | மாவட்ட ரீதியில் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | முற்றான திறமை மட்டம் | தரங் குறைந்த மட்டம் | முற்றான திறமை மட்டம் | தரங் குறைந்த மட்டம் |
| | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | மொத்தம் | மொத்தம் | % | % |
| அநுராதபுரம் | 14 | 10 | 23 | 16.6 | 47 | 35 | 78 | 58 | 24 | 82 | 20 | 68.3 |
| குருணாகல் | 18 | 23 | 30 | 38.3 | 20 | 22 | 33 | 36.6 | 41 | 42 | 34 | 35 |
| மாத்தறை | 35 | 25 | 58.3 | 41.7 | 11 | 22 | 18 | 36.6 | 60 | 33 | 50 | 27.5 |
| கொழும்பு | 42 | 33 | 70 | 55 | 06 | 07 | 10 | 11.7 | 75 | 13 | 62.5 | 10.8 |
| முற்றளாவிய மொத்தம் | 109 | 91 | 45 | 38 | 84 | 86 | 35 | 36 | 200 | 170 | 41.6 | 35.4 |

## *5. அனுமானத்துக்குரிய கிரகித்தல்*

அனுமானத்துக்குரிய கிரக்கித்தலில் முற்றான திறமைமட்ட அடைவில், மாவட்ட ரீதியாக ஏற்றத்தாழ்வு காணப்படுகின்றது. கொழும்பு மாவட்டத்தில் 50% அநுராதபுரத்தில் 10% அநுராதபுரமாவட்டத்தில் 59% மாணாக்கரும் குருணாகல் மாவட்டத்தில் 45% மாணாக்கரும் தாம் வாசித்தவற்றிலிருந்து அனுமான முறையில் கருத்துக்களையும் தொடர்புகளையும் அறிந்து கொள்ள முடியவில்லை. வாசித்தல், தகவல்களைத் தேடுதல், அவற்றுக்குத் தேவைப்பட்ட பொழுது விளக்கம் கொடுத்தல் ஆகிய திறன்களை இவர்கள் அபிவிருத்தி செய்து கொள்ளவில்லை. இந்நிலைமைக்குப் பிழையான கற்பித்தல் முறைகளும் வாசிப்புப் பழக்கங்கள் ஊக்கப்படுத் தப்படவில்லை என்பதுமே காரணம். இவ்வுப பரீட்சையில் கொழும்பு மாவட்டம் தவிர்ந்த ஏனையவற்றில் பெண்கள் ஆண் களிலும் பார்க்கத் திறமையுடன் முற்றான திறமை மட்டத்தில் ஆற்றியுள்ளனர். கொழும்பு மாவட்டத்தில் 51.7% ஆண் மாணாக்கர் முற்றான திறமை மட்டத்தை அடைந்துள்ர். மாத்தறை மாவட்டத்தில் தான் எல்லாவற்றிலும் அதிகக் கூடுதலான நூற்று வீதத்தினர் முற்றான திறமை மட்டத்தில் பெண்களாயுள்ளனர். இவர்கள் 56.7% ஆகும். தரங் குறைந்த மட்டத்தில் ஆகக் கூடுதலாக உள்ளவர் அநுராதபுர மாவட்டத்து ஆண்கள். இவர்கள் 61.7%

*அட்டவணை 23- அனுமானத்துக்குரிய கிரகித்தல்*

| மாவட்டம் | முற்றான திறமை மட்டம் மொத்தம் | | முற்றான திறமை மட்டம் % | | தரங்குறைந்த மட்டம் மொத்தும் | | தரங் குறைந்த மட்டம் % | | மாவட்ட ரீதியில் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | முற்றான திறமை மட்டம் மொத்தும் | தரங் குறைந்த மட்டம் மொத்தும் | முற்றான திறமை மட்டம் % | தரங் குறைந்த மட்டம் % |
| அநுராதபுரம் | 9 | 4 | 15 | 6.6 | 34 | 37 | 56.7 | 61.7 | 13 | 71 | 10.8 | 59 |
| குருணாகல் | 16 | 15 | 26.7 | 25 | 24 | 30 | 40 | 50 | 31 | 54 | 25.8 | 45 |
| மாத்தறை | 34 | 20 | 56.7 | 33.3 | 13 | 23 | 21.7 | 38.3 | 54 | 36 | 45 | 30 |
| கொழும்பு | 29 | 31 | 48.3 | 51.7 | 06 | 06 | 10 | 10 | 60 | 12 | 50 | 10 |
| முற்றளாவிய மொத்தம் | 88 | 70 | 36.7 | 29 | 77 | 96 | 32 | 40 | 158 | 173 | 33 | 36 |

## *6. இலக்கண முறைப்படி எழுதும் ஆற்றல்.*

எழுத்து வடிவிலே கருத்தை வெளிப்படுத்தும் வினைத்திறன், ஏற்றுக் கொள்ளப்பட்ட இலக்கண மரபுப்படி எழுதுவதில் தங்கியுள்ளது. ஆரம்பப் பாடசாலை யிலேயே இலக்கண முறைப்படி எழுதும் திறன் அபிவிருத்திக்கு அத்திவாரமிடப் படவேண்டும். இத்தகைய திறனைப் பெறுவதில் குறிப்பிடத்தக்க ஏற்றத்தாழ்வுகள் உண்டு என்பதை அட்டவணை 24 காட்டுகின்றது. அநுராதபுர மாவட்டத்தில் 70% ஆண்களும் 56.7% பெண்களும் மாத்தறை மாவட்டத்தில் 60% ஆண்களும் இத் திறனை பெற்றிருக்கவில்லை. சரியான எழுவாய் பயனிலைகளோடமைந்த 5 வாக்கியங்களை அவர்கள் அமைக்கத் தவறிவிட்டனர். இதற்கு எதிர்மாறாகக் கொழும்பு மாவட்டத்தில் 68.3% பெண்களும் 51.6% ஆண்களும் முற்றான திறமை மட்டத்தை அடைந்துளர். இவ்விடயத்திலும் முற்றளாவிய ரீதியில் 26% ஆண்களும் 36% பெண்களும் முற்றான திறமை மட்டத்தை அடைவதனால் பெண்கள் முன்னிலையில் நிற்கின்றனர். சராசரித்தரத்திலும் குறைந்த வளங்க ளுடைய பாடசாலைகள் சராசரிக்கு மேற்பட்ட வளங்களையுடைய பாடசா லைகள் என்ற இருவகைப் பாடசாலைகளுக்குமிடையே சரியான இலக்கண முறைப்படி மொழியைப் பயன்படுத்துதலின் அடைவில் ஏற்றத்தாழ்வுகள் துலாம்பர மாகத் தெரிகின்றன. வசதி குறைந்த பாடசாலைகளில் வாசிப்புச் சாதனங்கள் இன்மை, ஆரம்பப் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள், அர்ப்பண சிந்தனையோடு கரும மாற்றும் ஆளணியினர் ஆகியோர் இல்லாமை பெருங்குறையாகும். முற்றளாவிய ரீதியில், முற்றான திறமை அடைவு மட்டம் கொழும்பு மாவட்டத்தில் 60% ஆக இருக்க அநுராதபுரத்தில் 6.6% மட்டுமே.

அட்டவணை-24 இலக்கண முறைப்படி எழுதும் திறன்களில் அடைவு

| மாவட்டம் | முற்றான திறமை மட்டம் மொத்தம் | | முற்றான திறமை மட்டம் % | | தரங்குறைந்த மட்டம் மொத்தம் | | தரங் குறைந்த மட்டம் % | | மாவட்ட ரீதியில் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | முற்றான திறமை மட்டம் மொத்தம் | தரங் குறைந்த மட்டம் மொத்தம் | முற்றான திறமை மட்டம் % | தரங் குறைந்த மட்டம் % |
| அநுராதபுரம் | 6 | 2 | 10 | 3.3 | 34 | 42 | 56.7 | 70 | 8 | 76 | 6.6 | 63.3 |
| குருணாகல் | 19 | 21 | 31.7 | 35 | 19 | 21 | 31.7 | 35 | 40 | 40 | 33.3 | 33.3 |
| மாத்தறை | 21 | 8 | 35 | 13.3 | 20 | 36 | 33.3 | 60 | 29 | 56 | 24.1 | 46.6 |
| கொழும்பு | 41 | 31 | 68.3 | 51.6 | 6 | 7 | 10 | 11.6 | 72 | 13 | 60 | 10.8 |
| முற்றளாவிய மொத்தம் | 87 | 62 | 36 | 26 | 79 | 106 | 33 | 44 | 149 | 185 | 31 | 38 |

## 7 i). ஆக்கரீதியான எழுத்துத் திறன்கள்

ஏழு உப பரீட்சைகளில் மிகக் குறைந்த முற்றளாவிய பெறுபேறுகளில் இரண்டாவது இடத்தை வகிப்பது ஆக்கரீதியான எழுத்துத் திறன்களாகும். அட்டவணை 25 சுயமாகக் கருத்தை வெளியிடுவதற்கும் கொடுக்கப்பட்ட விடயங்கள் "எனது கிராமம்", "நான் கண்ட ஊர்வலம் ஒன்று", "ஒரு கனவு" போன்று மிக எளிமையானவை. பெரும்பாலான பிள்ளைகளுக்குப் பத்து வாக்கி யங்கள் தன்னும் சரியாகவும் எழுத்துத் தெளிவுடனும் எழுதமுடியவில்லை. அநுராதபுரமாவட்டத்தில் முற்றான திறமை மட்டத்தை ஒருவரும் அடையவில்லை. குருணாகல் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் முற்றான திறமை மட்டம் 10% க்கும் குறைவு.

பெண்கள் ஆண்களிலும் பார்க்க உயர் நிலையில் உள்ளனர். அநுராதபுர மாவட்டத்தில் 84% உம் மாத்தறை மாவட்டத்தில் 73% உம் குருணாகல் மாவட்டத்தில் 64% உம் தரங் குறைந்த மட்டத்தில் இருப்பதால் ஆக்கரீதியான எழுத்துத்திறனை அபிவிருத்தி செய்வதற்கு ஆரம்பப் படிகளையே இம்மாவட்டத்தில் மேற்கொள்ளவில்லை என்று தோன்றுகின்றது. ஆரம்ப நிலையில் தான் மாணாக்கரிடத்தில் உள்ள கருத்து வெளிப்பாட்டுத்திறன்களை ஆசிரியர் வெளிக்கொணர்ந்து அபிவிருத்தி செய்து, மாணாக்கரின் வாசிப்புப் பழக்கங் களையும் தகவற் திறன்களையும் மேம்படுத்த ஊக்கப்படுத்த முடியும். இத்தகைய சவாலை எதிர்கொள்ள ஆசிரியர் புதிய சிந்தனையுடன் கூடிய புத்தாக்க முறைகளைக் கைக்கொள்ள வேண்டும்.

| மாவட்டம் | முற்றான திறமை மட்டம் மொத்தம் | | முற்றான திறமை மட்டம் % | | தரங்குறைந்த மட்டம் மொத்தம் | | தரங்குறைந்த மட்டம் % | | மாவட்ட ரீதியில் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | முற்றான திறமை மட்டம் மொத்தம் | தரங் குறைந்த மட்டம் மொத்தம் | முற்றான திறமை மட்டம் % | தரங் குறைந்த மட்டம் % |
| அநுராதபுரம் | 0 | 0 | 0 | 0 | 44 | 57 | 73 | 95 | 0 | 101 | 0 | 84.1 |
| குருணாகல் | 5 | 2 | 8.3 | 3.3 | 34 | 43 | 56.7 | 71.6 | 7 | 77 | 5.8 | 64.1 |
| மாத்தறை | 4 | 1 | 6.7 | 1.6 | 39 | 49 | 65 | 81.6 | 5 | 88 | 4.1 | 73.3 |
| கொழும்பு | 24 | 11 | 40 | 18.3 | 17 | 31 | 28.3 | 51.6 | 35 | 48 | 29.1 | 40 |
| | | | | | | | | | 47 | 314 | 9.8 | 65 |

### *7 ii). தனது பெயர், வயது, முகவரி, பாடசாலைப் பெயர் ஆகியவற்றை எழுதுதல்.*

ஒரு பிள்ளைக்குக் கல்வியூட்டுவது அப்பிள்ளையின் வாழ்க்கையோடு ஆரம்பிக்க வேண்டும். ஏனெனில் அது தான் பிள்ளைக்கு நெருங்கியதும் அது அக்கறைக்கொண்டதும் ஆன விடயம். நாம் இன்று சமுதாயப் பிராணிகளாக இருப்பதால், ஒரு சிறு பிள்ளையும் தனது தனிப்பட்ட தகவல்களை மற்றவர்க ளுக்குத் தெரிவிக்கத் தெரிந்து இருக்க வேண்டும். தமது பிள்ளைகள் பற்றிய தகவல்களை அவர்களுக்குக் கற்பித்து அவற்றைச் சரியாக வெளிப்படுத்தும் திறனையும் ஏற்படுத்துதல் பெற்றாரினதும் பாடசாலையினதும் பொறுப்பாகும். தம்மைப் பற்றிய தகவல்களை வெளிப்படுத்தும் திறன் பற்றிய பரீட்சையில் 4 ஆம் வகுப்பு மாணாக்கரின் ஆற்றுகை அட்டவணை 26 இல் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

*அட்டவணை 26- தம்மைப் பற்றிய தகவல்களை வெளிப்படுத்த இயலாத மாணாக்கரின் எண்ணிக்கையும் நூற்று வீதமும்*

| மாவட்டம் | I பெயர் | | | II வயது | | | III விலாசம் | | | IV பாடசாலையின் பெயர் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பெண் | ஆண் | மொத்தம் | பெண் | ஆண் | மொத்தம் | பெண் | ஆண் | மொத்தம் | பெண் | ஆண் | மொத்தம் |
| அநுராதபுரம்<br>% | 7<br>11.6 | 19<br>31.6 | 26<br>22.6 | 10<br>16.6 | 16<br>26.6 | 26<br>22 | 34<br>56.6 | 48<br>80 | 82<br>67 | 27<br>45 | 25<br>41.6 | 52<br>43 |
| குருணாகல்<br>% | 6<br>10 | 13<br>21.6 | 19<br>16 | 10<br>16.6 | 10<br>16.6 | 20<br>16.6 | 16<br>26.6 | 28<br>46.6 | 44<br>36 | 16<br>26.6 | 14<br>23 | 30<br>25 |
| மாத்தறை<br>% | 3<br>5 | 10<br>16.6 | 13<br>11 | 21<br>35 | 28<br>46.6 | 49<br>41 | 14<br>23 | 17<br>28 | 31<br>26 | 4<br>6.6 | 13<br>21.6 | 17<br>14 |
| கொழும்பு<br>% | 5<br>8 | 7<br>11.6 | 12<br>10 | 5<br>8 | 7<br>11.6 | 12<br>10 | 2<br>3 | 6<br>10 | 8<br>6.6 | 7<br>11.6 | 11<br>18 | 18<br>15 |
| | 21 | 49 | 70<br>14.5% | 46 | 61 | 107<br>22% | 66 | 99 | 165<br>34% | 54 | 63 | 117<br>24% |

#### *அ. தனது சொந்தப் பெயரை எழுதுதல்*

அநுராதபுர மாவட்டத்தில் 31.6% ஆண்களும் குருணாகல் மாவட்டத்தில் 21.6% ஆண்களும் மாத்தறை மாவட்டத்தில் 16.6% ஆண்களும் கொழும்பு மாவட்டத்தில் 11.6% ஆண்களும் தமது பெயர்களைத் திருப்திகரமாக எழுதத் தவறிவிட்டனர். இவ்வாறு எழுதத் தவறிய பெண்களின் நூற்றுவீதம் மிகச் சொற்பம்.

#### *ஆ. தனது வயதை எழுதுதல்.*

மாத்தறை மாவட்டத்து ஆண்கள் பெண்களடங்கிய மாணாக்கரில் 41% தமது வயதைச் சரியாக எழுதத் தவறிவிட்டனர். அநுராதபுர மாவட்டத்து 22% மாணாக்கர் தமது வயதைச் சரியாகக் கணித்து ஆண்டுகளிலும் மாதங்களிலும் எழுதமுடியவில்லை. இவ் விடயத்தில் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை ஆண்டுகள் மாதங்கள் என்ற எண்ணக் கருக்களைச் சரியாகப் புரிந்து கொள்ளாமையாகும்.

#### *இ. தனது முகவரியை எழுதுதல்*

நாலாண்டுப் பாடசாலைப் படிப்பை நிறைவு செய்தபின்னரும் அநுராதபுரமாவட்டத்து 80% ஆண்களும் 56% பெண்களும், குருணாகல் மாவட்டத்து 46.6% ஆண்களும் 26.6% பெண்களும் மாத்தறை மாவட்டத்தும் 28% ஆண்களும் தமது முகவரியைத் திருத்தமாகவும் தெளிவாகவும் எழுதமுடியாத நிலையில் இருந்தனர். இந்நிலைமை அவர்களது கற்றல் வாழ்க்கையோடு தொடர்புற்றிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது.

### ஈ. தனது பாடசாலையின் பெயரை எழுதுதல்.

அநுராதபுர மாவட்டத்து 43% மாணாக்கரும் குருணாகல் மாவட்டத்து 25% மாணாக்கரும் மாத்தறை மாவட்டத்து 14% மாணாக்கரும், கொழும்பு மாவட்டத்து 15% மாணாக்கரும் திருப்திகரமாகத் தமது பாடசாலைப் பெயரை எழுதத்தவறிவிட்டனர். மாணாக்கர் பாடசாலையின் பெயர்ப்பலகையைத் தினமும் காண்கின்றனர். ஆசிரியர் மாணாக்கருக்குக் கற்பிக்க அப்பலகையைப் பயன்படுத்தவில்லை. மாதிரியாகக் கொள்ளப் பட்ட மாணாக்கரில், தமது பெயர், வயது, முகவரி பாடசாலையின் பெயர் ஆகியவற்றை எழுத முடியாதவரின் முற்றளாவிய நூற்று வீதம் வருமாறு:

I) பெயர் = 14.5%

II) வயது = 22%

III) விலாசம் = 34%

IV) பாடசாலைப்பெயர் = 24%

ஆற்றல் குறைந்த இத்தகைய மாணாக்கர் தான் முதலில் நேரகாலத்தோடு பாடசாலைக் கல்வியை இடைநிறுத்திக் கொள்பவர். எனவே அடிப்படைச் சமுதாயத் தேவைகளையாவது இவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். சமுதாயத்திலே பிள்ளை வாழ்வ தற்கு உதவி செய்யாமல் ஆசிரியர் திட்டமிட்ட பாடவிதானத்துக்கமைய ஒரு கலைத்திட் டத்தைக் கற்பித்து முடிப்பதில் தான் சிரத்தை உடையவர்களாக இருக்கின்றனர். வாசிப்புச் சாதனங்கள் பிள்ளையின் வாழ்க்கையோடு தொடர்புற்றதாய் இருக்க வேண்டும். மொழியைக் கற்பித்தலின் குறிக்கோள்களும் கற்பித்தல் முறைகளும் ஒன்றோடொன்று தொடர்புற்றிருக்க வேண்டும்.

## 5.03. நாலாம் வகுப்புக்குரிய இவ்வேழு உபபரீட்சைகளிலும், முற்றான திறமை

முற்றான திறமை மட்டத்தையும் தரங்குறைந்த மட்டத்தையும் காட்டும் அட்டவணை 27 மாணாக்கர் கற்கத் தவறிய பகுதிகளைக் காட்டுகின்றது. எழுத்துக் கூட்டலும் ஆக்கரீதியாக எழுதுதலும் மாணாக்கர் கஷ்டப்படும் பகுதிகள் என்பது தெளிவாகத் தெரிகின்றது. எழுத்துக் கூட்டத் தெரியாமையினால் மாணாக்கர் வாசிக்க முடியாமல் இருப்பது, ஒரு கருத்தை அனுமானித்துக் கொள்வதற்குத் தடையாக உள்ளது. (விடயம் 3) மாதிரியில் 50%--70% வரை எழுத்துக்கூட்டும் திறனில் சித்தியடையவில்லை. ஆக்க ரீதியாக எழுதும் ஆற்றலும் மிகக் குறைவு. (விடயம்7) 50%--70% ஆக்கரீதியாக எழுதுதலில் சித்தியடையவில்லை.

*அட்டவணை 27- 7 உபபரீட்சை விடயங்களுக்கு முற்றான திறமை, தரங்குறைந்த மட்டங்கள்.*

| பரீட்சை விடயங்கள் | 1 | | 2 | | 3 | | 4 | | 5 | | 6 | | 7 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பாடசாலை வகை | முற்றான திறமை மட்டம் மொத்தம் | % | முற்றான திறமை மட்டம் மொத்தம் | % | முற்றான திறமை மட்டம் மொத்தம் | % | முற்றான திறமை மட்டம் மொத்தம் | % | முற்றான திறமை மட்டம் மொத்தம் | % | முற்றான திறமை மட்டம் மொத்தம் | % | முற்றான திறமை மட்டம் மொத்தம் | % |
| 1 | 14 | 8.75 | 26 | 16.25 | 3 | 1.8 | 43 | 27 | 36 | 22.5 | 26 | 16.25 | 21 | 13 |
| 2 | 28 | 17.5 | 35 | 22 | 6 | 3.8 | 60 | 37.5 | 44 | 27.5 | 46 | 28.8 | 13 | 8 |
| 3 | 56 | 35 | 53 | 33 | 4 | 2.2 | 97 | 60.6 | 78 | 48.8 | 77 | 48 | 13 | 8 |

*அட்டவணை 27-01.*

| பரீட்சை வீடயங்கள் | 1 | | 2 | | 3 | | 4 | | 5 | | 6 | | 7 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பாடசாலை வகை | தரங் குறைந்த மட்டம் | | தரங் குறைந்த மட்டம் | | தரங் குறைந்த மட்டம் | | தரங் குறைந்த மட்டம் | | தரங் குறைந்த மட்டம் | | தரங் குறைந்த மட்டம் | | தரங் குறைந்த மட்டம் | |
| | மொத்தம் | % | மொத்தம் | % | மொத்தம் | % | மொத்தம் | % | மொத்தம் | % | மொத்தம் | % | மொத்தம் | % |
| 1 | 94 | 58.8 | 49 | 28 | 110 | 68.8 | 66 | 41.25 | 74 | 46.25 | 80 | 50 | 123 | 76.8 |
| 2 | 70 | 43.8 | 42 | 26 | 113 | 70.6 | 64 | 40 | 69 | 43 | 75 | 46.8 | 112 | 70 |
| 3 | 52 | 32.5 | 17 | 10.6 | 85 | 53 | 30 | 18.8 | 30 | 18.8 | 30 | 18.8 | 79 | 49.6 |

*அட்டவணை 27.02*

முழு பரீட்சையிலும், 6 விடயங்களில், தரங்குறைந்த வளங்களையுடைய பாடசாலைகள் (பாடசாலை வகை1) சராசரித்தர வளங்களையுடைய பாடசாலைகள் (பாடசாலை வகை 2) ஆகியவற்றிலுள்ள மாணாக்கர் 40%-70% சித்தியடையவில்லை. வாசிப்புப் பழக்கங்களையும் தகவற் திறன்களையும் அபிவிருத்தி செய்ய வேண்டுமாயின் மேற்படி நிலைமை தவிர்க்கப்பட வேண்டும்.

முற்றான திறமை மட்டத்தைக் காட்டும் அட்டவணை 27-01ஐ நோக்கும் பொழுது பாடசாலை வளங்களில் சமமின்மை பிள்ளைகளின் கல்வியைத் தீர்மானிக்கின்றமை புலப்படுகின்றது. முழுப் பரீட்சையிலும் 5 விடயங்களில் பாடசாலை வகை 3 இல் உள்ள 30%- 60% மாணாக்கர் முற்றான திறமை பெற்றுள்ளனர். ஏனைய பாடசாலை வகைகளான, வகை 1, வகை 2 ஆகியவற்றில் முற்றான திறமை மட்டத்தை அடைந்த மாணாக்கர் முறையே 1%- 27%, 4%- 37% ஆகும்.

# வாசிப்பு ஆர்வமும் பிள்ளைகளும்

வாசிப்பை அடிப்படையாகக் கொண்டு பிள்ளைகளின் ஆர்வங்கள் பற்றிய வினாக்கொத்து, மனப்பாங்குப் பதிவேடுகள் என்பன வேறு வேறாக இரண்டாம் நாலாம் வகுப்புகளுக்குக் கொடுக்கப்பட்டன. இவையும், ஒவ்வொரு வகுப்பிலும் இவ்விரண்டு ஆசிரியரிடமிருந்து பெறப்பட்ட ஆர்வங்கள் பற்றிய பதிவேடு, தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அதிபர்களிடம் இருந்து பெறப்பட்ட தகவல்கள் என்பனவும், வாசிப்புப் பற்றி மாணாக்கரின் பண்புரீதியான கருத்து, அவர்கள் ஆர்வம் கொண்டுள்ள விடயங்கள், வாசிப்புப் பழக்கத்தை எந்தளவுக்குப் பெற்றுள்ளனர். அவர்களது வாசிப்புப் பழக்கங்கள் தகவற் திறன்கள் என்பனவற்றை அபிவிருத்தி செய்ய அவர்களது வீட்டுச் சூழலும் எவ்வளவுக்கு ஆதரவு கொடுக்கின்றன, என்பனவற்றை வெளிப்படுத்தின.

பிள்ளைகள் தமது சுற்றாடல் பற்றி அறிவதற்கு உள்ளார்ந்த விருப்பமுடையவர். தனது புலனுணர்ச்சி மூலம் கற்றுக் கொண்டு வளரும் பிள்ளை தனது சுற்றாடலைப் புரிந்து கொள்வதில் மேலும் மேலும் ஆர்வமுடையதாகின்றது. என்ன நடந்தது, என்ன நடக்கின்றது, என்பன போன்ற விடயங்கள் அதன் ஆர்வத்துக்குட்பட்டன. எனவே கதைகள் வாசிப்பதைக் கேட்க விரும்புகிறது. உள்ளார்ந்து இருக்கும் இத்தகைய அவாவை அவர்களது சுய ஆர்வப் பதிவேடுகள் பெருமளவு சுட்டிக்காட்டுகின்றன. உ-ம்

அட்டவணை- 28,29, "எனது ஒய்வுநேரத்தை நான் செலவிட விரும்புகிறேன்" என்பது பற்றிய ஆர்வப் பதிவேடு - வகுப்பு 2.

*அட்டவணை- 28,29. "எனது ஒய்வு நேரத்தை நான் செலவிட விரும்புகிறேன் "பணம் என்னிடமிருந்தால் நான் வாங்குவேன்" என்ற விடயங்கள் பற்றி சுய ஆர்வப் பதிவேடு - வகுப்பு 2*

| மாவட்டம் | விளையாடுதல் | சைக்கிளில் ஓடுதல் | வாசித்தல் |
|---|---|---|---|
| அநுராதபுரம் | 11 | 18 | 67 |
| குருணாகல் | 13 | 23 | 79 |
| மாத்தறை | 11 | 16 | 90 |
| கொழும்பு | 14 | 30 | 70 |
| மொத்தம் | 49 | 87 | 306 |
| % | 10% | 18% | 64% |

அட்டவணை 28

| விளையாட்டுப் பொருட்கள் | கதைப் புத்தகங்கள் | நிறப் பென்சில்கள் |
|---|---|---|
| 31 | 33 | 29 |
| 27 | 53 | 37 |
| 29 | 53 | 34 |
| 27 | 52 | 40 |
| 114 | 191 | 140 |
| 24% | 40% | 29% |

அட்டவணை 29

பிள்ளைகள் எவற்றைச் செய்வதில் ஆர்வம் கொண்டுள்ளனர் என்பதை இவ்விரு அட்டவணைகளும் (28,29) காட்டுகின்றன. ஓய்வு நேரத்தில் 64% பிள்ளைகள் விளையாடுதல் சைக்கிள் ஓடுதல் என்பவற்றை விரும்பாது வாசிக்க விரும்புகின்றனர். அவர்களிடம் பணமிருந்தால் பெரும்பாலானோர் விளையாட்டுப் பொருட்கள், நிறப் பென்சில்கள் என்பவற்றிலும் பார்க்கக் கதைப்புத்தங்களை வாங்கவே விரும்புகின்றனர். இத்தகைய கருத்தொற்றுமையை 4 ஆம் வகுப்பு மாணாக்கரிடமும் காணலாம்.

*அட்டவணை 30,31 ஓய்வு நேரத்தைச் செலவிட விரும்புவது நான் வாங்க விரும்புவது*

| மாவட்டம் | விளையாடுதல் | நீந்தல் | வாத்தியக் கருவி வாசித்தல் | நூல்நிலையத் துக்குச் செல்லுதல் | நிறப் பென்சில்கள் | பிள்ளைகள் பத்திரிகை | பந்தும் துடுப்பும் | கதைப் புத்தகம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| அநுராதபுரம் | 16 | 11 | 43 | 32 | 18 | 28 | 19 | 38 |
| குருணாகல் | 11 | 12 | 16 | 69 | 20 | 38 | 14 | 44 |
| மாத்தறை | 27 | 8 | 34 | 48 | 14 | 37 | 16 | 50 |
| கொழும்பு | 18 | 16 | 12 | 73 | 8 | 41 | 9 | 59 |
| மொத்தம் | 72 | 47 | 105 | 221 | 60 | 144 | 58 | 191 |
| % | 15 | 9.8 | 21.8 | 46 | 12.5 | 30 | 12 | 40 |

தமது ஓய்வு நேரத்தில் நாலாம் வகுப்பில் 46% மாணாக்கர் நூல் நிலையத்துக்குச் செல்ல விரும்புகின்றனர். தங்களிடம் பணமிருந்தால் 40% மாணாக்கர் கதைப்புத்தகம் வாங்கவும் 30% மாணாக்கர் பிள்ளைகள் பத்திரிகை வாங்கவும் விரும்புகின்றனர். அத்துடன் அட்டவணை 32 இன்படி பாடசாலை நேரத்துக்குப் பின் 78% நித்திரை செய்வது விளையாடுவது என்பவற்றிலும் பார்க்க நூல்களை வாசிக்கவே விரும்புகின்றனர்.

*அட்டவணை 32 நான் பாடசாலை நேரத்துக்குப்பின் செய்ய விரும்புவது*

| மாவட்டம் | நித்திரை | நூல் வாசித்தல் | விளையாடுதல் |
|---|---|---|---|
| அநுராதபுரம் | - | 90 | 10 |
| குருணாகல் | 3 | 97 | 12 |
| மாத்தறை | 2 | 92 | 22 |
| கொழும்பு | 3 | 95 | 17 |
| மொத்தம் | 8 | 374<br>78% | 61<br>12.6% |

ஒரு புத்தகத்தின் பக்கங்களைத் திருப்புதல் அல்லது அதிலுள்ள படங்களைப் பார்த்தல் என்பவற்றோடு மாத்திரம் அவர்களின் ஆர்வம் முடிந்து விடுவதில்லை. முதிர்ச்சி உடைய ஒருவர் புத்தகங்களிலிருந்து கதைகளை வாசிப்பதைக் கேட்கவும் கதை சொல்வதைக் கேட்கவும் பிள்ளைகள் உண்மையான ஆர்வம் கொண்டுள்ளனர் (அட்டவணை 33). புத்திசாதுரியம் உள்ள ஆசிரியர், வாசிக்கும் பழக்கத்தை அபிவிருத்தி செய்ய, இவ்வார்வத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

*அட்டவணை 33 - நூல்களில் நான் விரும்புவது - வகுப்பு 2*

| மாவட்டம் | படங்கள் பார்த்தல் | கதைகளைக் கேட்டல் | பக்கங்களைப் புரட்டுதல் |
|---|---|---|---|
| அநுராதபுரம் | 31 | 61 | 11 |
| குருணாகல் | 52 | 60 | 13 |
| மாத்தறை | 30 | 72 | 18 |
| கொழும்பு | 30 | 68 | 19 |
| மொத்தம் | 143<br>29.8% | 216<br>78% | 61<br>12.6% |

பிள்ளைகள் பெரும்பாலும் சிரித்து மகிழ்ச்சியுடன் இருக்க விரும்புகின்றனர். கதைகளைக் கேட்டு மகிழ விரும்புகின்றனர். நகைச்சுவை பொருந்திய கதைகளிலே அதிகம் ஆர்வம் காட்டுகின்றனர். அட்டவணை 34 இதை வெளிப்படுத்துகிறது. அட்டவணை 34 நான் வாசிக்க விரும்பும் கதைகள் -வகுப்பு 2 (7 வயது)

*அட்டவணை 34 நான் வாசிக்க விரும்பும் கதைகள்*

| மாவட்டம் | அந்தரே | கமரால | நாட்டார் கதைகள் | போர் பற்றிய கதைகள் |
|---|---|---|---|---|
| அநுராதபுரம் | 43 | 27 | 16 | 07 |
| குருணாகல் | 65 | 25 | 13 | 14 |
| மாத்தறை | 47 | 40 | 20 | 10 |
| கொழும்பு | 51 | 37 | 21 | 05 |
| மொத்தம் | 206<br>43% | 129<br>27% | 70<br>14.6% | 36<br>7.5% |

*அட்டவணை 35 வாசிக்க விரும்புவன - வகுப்பு 4 (9-10 வயது)*

| மாவட்டம் | விலங்குகளைப் பற்றிவாசித்தல் | வாகனங்களைப் பற்றி வாசித்தல் | பறவைகளைப் பற்றி வாசித்தல் | வீரர்களைப் பற்றி வாசித்தல் |
|---|---|---|---|---|
| அநுராதபுரம் | 09 | 10 | 27 | 53 |
| குருணாகல் | 11 | 03 | 16 | 85 |
| மாத்தறை | 11 | 10 | 27 | 65 |
| கொழும்பு | 22 | 04 | 23 | 70 |
| மொத்தம் | 53<br>11% | 27<br>5.6% | 93<br>19% | 273<br>56.8% |

*6.02* பிள்ளைகள் வயதில் முதிரும் பொழுது அவர்கள் வாசிக்க அக்கறை கொண்டுள்ள விடயங்களும் மாறுகின்றன. இது நாலாம் வகுப்புப் பிள்ளைகளின் (9-10 வயது) வாசிப்பு அக்கறைகளைக் காட்டும் அட்டவணை 35 இல் இருந்து புலனாகின்றது. பால் வேறுபாடின்றி ஆண்களும் பெண்களும் வீரர்களைப் பற்றி வாசிக்கவே பெரும்பாலும் விரும்புகின்றனர். வாசிப்பில் அக்கறையை உண்டாக்கும் பொழுது, விசேடமாக மிகச் சிறு பிராயத்திலேயே வாசிப்புப் பழக்கத்தின் அபிவிருத்தியை வசதியாக்கலாம். ஒரு பிள்ளை, கதைகளைக் கேட்கும் பொழுது அல்லது முதிர்ச்சியுடைய ஒருவர் கதைகளை வாசிப்பதைக் கேட்கும் பொழுது, வாசிக்கத் தூண்டப்படுகிறது. இன்று பொது ஊடகங்கள் மூலமாக ஒரு பிள்ளை இந்த வகையில் மனநிறைவு பெறுகின்றது. பிள்ளைகளுக்காகத் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களைத் தொலைக்காட்சியில் பார்க்கும் பொழுது அல்லது வானொலியிற் கேட்கும் பொழுது, அவை பிள்ளைகளுக்கு விழிப்புணர்வையும் வாசிக்கும் தேவையையும் ஏற்படுத்துக்கின்றன. எனவே வாசிப்புப் பழக்கங்களை ஏற்படுத்த இவற்றைப் பயன்படுத்தலாம்.

*அட்டவணை 36.2 ஆம் வகுப்பு மாணாக்கர் அக்கறைகொள்ளும் பொது ஊடக விடயங்கள்.*

| மாவட்டம் | சித்திரத் தொடர்கள் | சிறுவர் நாடகங்கள் | கதைகள் |
|---|---|---|---|
| அநுராதபுரம்= | 59 | 05 | 38 |
| குருணாகல்= | 78 | 12 | 25 |
| மாத்தறை = | 54 | 06 | 60 |
| கொழும்பு= | 68 | 03 | 41 |
| மொத்தம் = | 259 | 26 | 164 |
| % | 53.9 | 5 | 33.9 |

*தொலைக்காட்சி*

| அம்புலி மாமா | லமா பிற்றிய | லமா ரங்க மடல | சிறுவர் பாடல்கள் |
|---|---|---|---|
| 45 | 19 | 18 | 21 |
| 70 | 12 | 14 | 21 |
| 78 | 19 | 03 | 15 |
| 60 | 20 | 07 | 23 |
| 253 | 70 | 42 | 80 |
| 52.7 | 14.5 | 8.8 | 16.5 |

*வானொலி*

| மாவட்டம் | பிந்து | மிஹிர | ரன்கட்டி | ரிக்கிரி | பத்திரிகைகள் வாசிக்கும் மொத்தப்பேர் | % |
|---|---|---|---|---|---|---|
| அநுராதபுரம் | 54 | 4 | 11 | 11 | 80 | 66.6 |
| குருணாகல் | 87 | 9 | 9 | 9 | 114 | 95 |
| மாத்தறை | 78 | 7 | 15 | 10 | 110 | 91.6 |
| கொழும்பு | 86 | 15 | 8 | 7 | 116 | 96.6 |
| மொத்தம் | 305 | 35 | 43 | 37 | 420 | 87.5 |

*பத்திரிகைகள்*

2 ஆம் வகுப்பு மாணாக்கரில் 53.9% சித்திரத் தொடர்கதைகளைத் தொலைக் காட்சியில் பார்க்க விரும்புகின்றனர்; வானொலி நிகழ்ச்சிகளில் 52.7% அம்புலி மாமாவை விரும்புகின்றனர். வாசிப்புப் பழக்கங்களையும் தகவற் திறன்களையும் அபிவிருத்தி செய்ய வகுப்பறைகளில் மேற்படி ஆர்வத்தைப் பல வழிகளில் பயன்படுத்திக் கொள்ளலாம்.

*அட்டவணை 37-01,02. பொது ஊடகங்களில் பிள்ளைகளின் ஆர்வம் - வகுப்பு 4*

| மாவட்டம் | சித்திரத் தொடர்கள் | தொலைக் காட்சி நாடகம் | கதைகள் | இந்தி மொழிப் படங்கள் | பாடல்கள் | கதைகள் | நாடகங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| அநுராதபுரம் | 56 | 12 | 17 | 19 | 43 | 44 | 11 |
| குருணாகல் | 64 | 24 | 18 | 12 | 39 | 49 | 19 |
| மாத்தறை | 55 | 22 | 18 | 24 | 40 | 56 | 17 |
| கொழும்பு | 80 | 11 | 22 | 05 | 45 | 56 | 11 |
| மொத்தம் | 255 | 69 | 75 | 60 | 167 | 205 | 58 |
| % | 53 | 14 | 15.6 | 12.5 | 34.7 | 42.7 | 12 |

*தொலைக்காட்சி* *வானொலி*

*அட்டவணை 38-01 சிறுவர் பத்திரிக்கைகளை வாசிக்கும் மாணாக்கரின் எண்ணிக்கையும் நூற்று வீதமும் -வகுப்பு 4*

| மாவட்டம் | மிஹிர | பிந்து | ரிக்கிரி | வித்யா | பத்திரிகைகள் வாசிக்கும் மொத்தப் பேர் | % |
|---|---|---|---|---|---|---|
| அநுராதபுரம் | 34 | 32 | 19 | 15 | 100 | 83 |
| குருணாகல் | 36 | 41 | 07 | 26 | 110 | 91.6 |
| மாத்தறை | 32 | 48 | 10 | 19 | 109 | 90.8 |
| கொழும்பு | 38 | 45 | 07 | 28 | 118 | 98. |
| மொத்தம்<br>% | 140<br>29 | 166<br>34.5 | 43<br>8.9 | 88<br>18 | 437 | 91 |

எல்லா மாவட்டங்களிலும் பெருமளவு பிள்ளைகள் சிறுவர் பத்திரிகைகளை வாசிக்கின்றார்கள். என்பதை மேலேயுள்ள அட்டவணை புலப்படுத்துகின்றது. 2 ஆம் வகுப்பில் 63.5% மாணாக்கரும் நாலாம் வகுப்பில் 34.5% மாணாக்கரும் "பிந்து" என்ற பத்திரிக்கையை வாசிக்க விரும்புகின்றனர். தூர கிராமப்புறங்களில் பத்திரிகைகள் வாங்கப்

பணமில்லாத மாணாக்கர் கூட இவற்றை வாசிக்கின்றனர். வசதி படைத்த மாணாக்கர் இவற்றை வாங்கிப் பாடசாலைக்குக் கொண்டு வரும் பொழுது சில நல்லாசிரியர்கள், வசதியில்லாத மாணாக்கரும் இவற்றை வாசிக்கக் கொடுப்பித்து, வாசிப்புப் பழக்கத்தை அபிவிருத்தி செய்கின்றனர். எனவே வாசிப்புப் பழக்கத்தைக் கொண்ட மாணாக்கரின் இத்தகைய உயர் நூற்றுவீதம், வாசிப்புச் சாதனங்கள் மாணாக்கருக்கு இலகுவாகக் கிடைக்கக் கூடியனவாயிருப்பின், வாசிப்புப் பழக்கங்களும் தகவற் திறன்களும் இவர்க ளிடையே நிச்சயமாக அபிவிருத்தி செய்ய முடியும் என்பதைக் காட்டுகின்றது. ஏனைய ஊடகங்களான தொலைக்காட்சி வானொலி என்பவற்றில் பிள்ளைகளுக்கான நிகழ்ச்சிகளைப் பார்க்கும் பொழுதும் கேட்கும் பொழுதும், அவை பிள்ளைகள் மத்தியில் ஒரு விழிப்புணர் வையும் வாசிக்க வேண்டிய தேவைகளையும் ஏற்படுத்துகின்றன. பிள்ளைகள் தொலைக் காட்சியையே பார்த்துக்கொண்டு அதற்கு அடிமையாக இருப்பதனால் வாசிப்புப் பழக்கத்துக்கு அது ஒரு பெரும் இடையூறாக இருக்கின்றது எனச் சிலர் கருதுகின்றனர். ஆனால் பிள்ளைகளின் நேரத்தை ஆழ்ந்த அறிவுடன் ஒழுங்குப்படுத்திச் செலவிட வைப்பது பெற்றார் கவனத்திற் கொள்ள வேண்டிய பொறுப்பாகும். எனினும் தகவலுக்கும் மகிழ்ச்சிகரமாகப் பொழுதைப் போக்குவதற்கும், பொது ஊடகங்கள் மூலாதாரமாக முக்கியத்துவமுடையன என்பதை நினைவிற்கொள்ள வேண்டும்.

சுய ஆர்வப் பதிவேடு, பாடசாலைப் பாடங்களில் ஆண்களும்பெண்களும் கணிதத்தை விரும்புகின்றனர்; சிங்கள மொழி கற்பதில் அதிக ஆர்வம் காட்டவில்லை என்பதைக் காட்டுகின்றது. அட்டவணை 39 இல் 46% மாணாக்கர் தாம் விரும்பும் பாடமாகக் கணிதத்தைக் குறித்துள்ளனர் 12.7% மாணாக்கர் மாத்திரமே சிங்கள மொழியைக் குறித்துள்ளனர்.

*அட்டவணை 39 நான் அதிகம் விரும்பும் பாடம் - வகுப்பு 4*

| மாவட்டம் | சித்திரம் | | | கணிதம் | | | சிங்கள மொழி | | | இசை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பெண் | | ஆண் | பெண் | | ஆண் | பெண் | | ஆண் | பெண் | | ஆண் |
| அநுராதபுரம் | 5 | =17 | 12 | 26 | =49 | 23 | 07 | =21 | 14 | 18 | =22 | 04 |
| குருணாகல் | 13 | =26 | 13 | 22 | =54 | 32 | 11 | =12 | 01 | 12 | =17 | 05 |
| மாத்தறை | 11 | =27 | 16 | 25 | =53 | 28 | 13 | =18 | 05 | 08 | =17 | 09 |
| கொழும்பு | 12 | =29 | 17 | 31 | =65 | 34 | 06 | =10 | 04 | 12 | =16 | 04 |
| மொத்தம் | | 99 | | | 221 | | | 61 | | | 71 | |
| % | | 20.6 | | | 46 | | | 12.7 | | | 15 | |

பத்துவயதுப் பிள்ளைக்கு மிகவும் சுவராஸ்யம் இல்லாத பாடமாகச் சிங்கள மொழி விளங்குகின்றது. என்பது இவ்வட்டவணை மூலம் தெரிகின்றது. இவ்வகுப்பு நிலையில் மொழித்திறன்கள் நான்கிலும் பிள்ளை முற்றான திறமை பெறவில்லை.

இது, சிங்கள மொழித்திறன்களில் மாணாக்கரின் அடைவு மட்டம் குறைவாக இருப்பதற்கு ஒரு உட்காரணத்தைப் புலப்படுத்துகின்றது. அநுராதபுர மாவட்டத்தில் மூவகைப் பாடசாலைகளிலும், குருணாகல்,மாத்தறை ஆகிய மாவட்டங்களில் முதலாம் இரண்டாம் வகைப் பாடசாலைகளிலும். மாணாக்கரின் சராசரி ஆற்றுகை 35% க்கும் குறைவாக உள்ளது. அட்டவணை 06. இது மாணாக்கரின் தவறாக மாத்திரம் கொள்ளக்கூடாது. மேற்படி நிலைமை மாணாக்கர் புத்திக்கூர்மை உடையவர்; கற்றலிலும் புதிய கண்டுப்பிடிப்புகளிலும், மனத்திருப்தி அடைவதிலும் ஆர்வமுடையவர் என்பதைக் காட்டுகின்றது. எனவே கற்பித்தல் சுவராஸ்யமுள்ளதாக இருக்கவேண்டும்; மாணாக்கரும் சரியாக வழிநடத்தப்பட்டு ஊக்குவிக்கப்படவேண்டும்.

## அத்தியாயம் - 07

# வீட்டுப் பின்னணி

### 7.01 வீட்டுப் பின்னணி

ஒரே வருமான மட்டத்தில் உள்ள இரு குடும்பங்களில், ஒன்று பெரிதானால் அக் குடும்பத்துப் பிள்ளைகள் மற்றக்குடும்பத்துப் பிள்ளைகள் போலத் தம் தேவைகளில் சமமான நிறைவைக் காண்பதில்லை என ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. கொடுக்கப்பட்ட வினாக்கொத்தில் 2 ஆம் வகுப்பு மாணாக்கரின் குடும்பங்கள் இரு பிரிவில் அடக்கப்பட்டன. ஒன்று ஐந்து அல்லது அதற்குக் குறைந்த அங்கத்தவர்களையுடைய குடும்பம். மற்றது ஆறு தொடக்கம் பத்து வரையுள்ள அங்கத்தினரைக் கொண்ட குடும்பம். இவ்விருவகை யிலுமுள்ள குடும்பங்களின் எண்ணிக்கையும் நூற்று வீதமும் அட்டவணை 40இல் தரப்பட்டுள்ளன.

*அட்டவணை 40-குடும்பத்தின் அளவைக் காட்டுவது-வகுப்பு 2.*

| மாவட்டம் | பிரிவு I 1-5 அங்கத்தவர் | | | | பிரிவு II 6-10 அங்கத்தவர் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பெண் | ஆண் | மொத்தம் | % | பெண் | ஆண் | மொத்தம் | % |
| அநுராதபுரம் | 28 | 22 | 50 | 41.6 | 25 | 19 | 44 | 36.6 |
| குருணாகல் | 42 | 33 | 75 | 62.5 | 17 | 25 | 42 | 35 |
| மாத்தறை | 35 | 40 | 75 | 62.5 | 26 | 19 | 45 | 37.5 |
| கொழும்பு | 47 | 38 | 85 | 70.8 | 07 | 15 | 22 | 18 |

அட்டவணை 40 இன் படி கொழும்பு மாவட்டத்தில் குறைந்த அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களின் நூற்றுவீதம் 70.8% ஆக இருக்க அநுராதபுரத்தில் 41.6% ஆக உள்ளது. கூடிய அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களின் நூற்றுவீதம் அநுராதபுரத்தில் 36.6% ஆக இருக்கக் கொழும்பில் 18% ஆக உள்ளது. பிள்ளைகளின் ஆற்றுகையில் இக்காரணியும் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. முற்றான திறமை மட்ட நூற்றுவீதம் கொழும்பு மாவட்டத்தில் தான் கூடுதலாகவும் அநுராதபுர மாவட்டத்தில் தான் மிகக் குறைவாகவும் உள்ளது. அட்டவணை 06,18-01,02.

### 7.02

வாசிப்புச் சாதனங்களான நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பனவற்றைத் தம் பிள்ளைகளுக்கு வழங்கிப் பெற்றோரளிக்கும் ஆதரவு பிள்ளைகளின் வாசிப்புப் பழக்கங்கள் தகவற் திறன்கள் ஆகியவற்றை அபிவிருத்தி செய்யச் சந்தேகமின்றி உதவுகின்றன. பெற்றோரின் சமுதாய-பொருளாதார நிலை தான் இதைத் தீர்மானிக்கின்றது. 2 ஆம் வகுப்பு மாணாக்கரும் 4ஆம் வகுப்பு மாணாக்கரும் தாம் வைத்திருக்கும் புத்தகங்களின் எண்ணிக்கையைக் காட்டும் அட்டவணை 41 இதனைத் தெட்டத் தெளிவாகக் காட்டுகின்றது.

*அட்டவணை -41 வாசிப்பதற்குத் துணை நூல்களாகப் பிள்ளைகள் வைத்திருக்கும் நூல்களின் எண்ணிக்கை.*

| மாவட்டம் | 1-5 நூல்கள் | | 6-10 நூல்கள் | |
|---|---|---|---|---|
| | மொத்தம் | % | மொத்தம் | % |
| அநுராதபுரம் | 75 | 62.5 | 24 | 20 |
| குருணாகல் | 69 | 57.5 | 46 | 42 |
| மாத்தறை | 77 | 64. | 37 | 31 |
| கொழும்பு | 56 | 47. | 47. | 39 |

*வகுப்பு 2*

| 1-3 நூல்கள் | | 4-5 நூல்கள் | | 6-10 நூல்கள் | | 10 நூல்கள் | |
|---|---|---|---|---|---|---|---|
| மொத்தம் | % | மொத்தம் | % | மொத்தம் | % | மொத்தம் | % |
| 60 | 50 | 28 | 23 | - | - | 14 | 11.6 |
| 38 | 31.6 | 25 | 20.8 | 14 | 11.6 | 44 | 36.6 |
| 53 | 44 | 32 | 26.6 | 1 | - | 29 | 24 |
| 20 | 16.6 | 33 | 27.5 | - | - | 65 | 54 |

*வகுப்பு 4*

அட்டவணை 41-01 அநுராதபுர மாவட்டத்து 2 ஆம் வகுப்பு மாணாக்கரில் 20% தான் 5க்கு மேற்பட்ட துணை நூல்களைக் கொண்டுள்ளனர் என்றும் குருணாகல், கொழும்பு ஆகிய மாவட்டங்களில் முறையே 42%, 39% மாணாக்கர் கொண்டுள்ளனர் என்றும் காட்டுகிறது. அட்டவணை 41-02 இந்நிலை மையை மேலும் உறுதிப்படுத்துகின்றது. 10க்கும் மேற்பட்ட நூல்களை வைத்திருக்கம் பிள்ளைகள் அநுராதபுர மாவட்டத்தில் 11.6% ஆக இருக்க கொழும்பு மாவட்டத்தில் 54% ஆகவும் குருணாகல் மாவட்டத்தில் 36.6% ஆகவும் உள்ளனர்.

மாதிரியாக எடுத்துக்கொண்ட பிள்ளைகள் எல்லாரினதும் பெற்றாரில் 12.7% ஒரு செய்திப் பத்திரிகையும் வாங்குவதில்லை. அநுராதபுர மாவட்டத்தில் 20% இல்லங்கள் பத்திரிகைகள் வாங்குவதில்லை. பத்திரிகைகள் வாங்காத இல்லங்கள் கொழும்பு மாவட்டத்தில் 7.5% மாத்திரமே. ஆனால் இம் மாதிரியில் 35% ஞாயிற்றுக் கிழமைச் செய்தித்தாள்களை வாங்குகின்றனர். ஏனைய ஊடகங்களான தொலைக்காட்சி, வானொலி ஆகியவை மூலம் பொழுதைப் போக்குவதும் தகவல்களைப் பெறுவதும் மேற்குறிப்பிட்ட நிலைமைக்குக் காரணம் ஆகலாம். இதனால் மக்கள் தமது வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்குப் பயன்படுத்தக் கூடிய சந்தர்ப்பம் புறக்கணிக்கப்படுகின்றது. அட்டவணை 42 பெற்றாரில் மிகச் சிறிய நூற்று வீதத்தினரே ஒவ்வொருநாளும் செய்தித் தாள்களை வாங்குகின்றனர். கொழும்பு மாவட்டத்தில் கூட 26% மாத்திரம் தினமும் பத்திரிகை வாங்குகின்றனர். இதற்கு இரு காரணங்களைக் கூறலாம். அவை பத்திரிகை வாசிக்க நேரமின்மையும் வாங்கப் பணமின்மையுமாகும். எவ்வாறாயினும் பெற்றார் தினமும் பத்திரிகை வாங்கினால், அது பிள்ளைகளை வாசிப்பதற்கு ஊக்குவிப்பதாக அமையும்.

*அட்டவணை -42 செய்தித்தாள்களை வாங்கும் இல்லங்களின் எண்ணிக்கை- வகுப்பு 4*

| மாவட்டம் | தினமும் | ஞாயிற்றுக் கிழமைகளில் | சில வேளைகளில் | ஒரு போதும் இல்லை |
|---|---|---|---|---|
| அநுராதபுரம் | 17 | 34 | 32 | 24 |
| குருணாகல் | 22 | 39 | 37 | 15 |
| மாத்தறை | 15 | 47 | 41 | 13 |
| கொழும்பு | 26 | 48 | 33 | 09 |
| மொத்தம்=<br>% = | 80<br>16.6 | 168<br>35 | 143<br>29.7 | 61<br>12.7 |

## *7.03 பாடசாலை பின்னணி*

வாசிப்புப் பழக்கங்களையும் தகவற் திறன்களையும் அபிவிருத்தி செய்வதற்கும் பாடசாலைப் பின்னணி எந்த அளவிற்கு வசதியுள்ளதாக அமைகிறது என்பதை அறிவதற்குப்

பாடசாலை அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வினாக்கொத்து வடிவமைக்கப்பட்டது. 1-10 வரையிலான வினாக்கள் பாடசாலைகள் பற்றிய பொதுத்தகவல்கள் பற்றியன. இங்கு குறிபிட்ட குறிக்கோளை அடைவதற்குப் பாடசாலை எவ்வளவிற்கு ஆதரவாக உள்ளது என்ற தகவலைப் பெறும் நோக்குடன் 11-16 வரையிலான வினாக்கள் தயாரிக்கப் பட்டன.

வகுப்பறைகள், இடவசதி, தளபாடங்கள் எல்லாம் கொண்ட கட்டிடங்கள் ஒரு பாடசாலையில் இருக்கின்ற தன்மைக்கேற்பக் கற்பித்தல் கற்றல் நிலைமை குறிப்பிடத்தக்களவு பாதிக்கப்படுகின்றது அதிபர்களிடம் இருந்து பெற்ற தகவல்களின்படி 13 பாடசாலைகளில் 4 பாடசாலைகளில் மட்டும் தான் தேவையான வகுப்பறைகள் உண்டு. பலராலும் பெரிதும் நாடப்படும் நகர்ப்புற பாடசாலைகள் சிலவற்றில் ஆரம்பப்பிரிவுகளில் 40 மாணாக்கரை மாத்திரம் கொள்ளக்கூடிய வகுப்பறைகளில் 50 மாணாக்கர் உள்ளனர். இந்நிலைமை கற்பித்தல்-கற்றல் நிலைமையை வெகுவாகப் பாதிக்கின்றது. ஆசிரியரோ மாணாக்கரோ வகுப்பறையில் அங்குமிங்குமாகப் போக முடியாது. எனவே ஆசிரியர் ஒவ்வொரு மாணாக்கர் மீதும் தனிக்கவனம் செலுத்த முடியாது. எனவே கற்பித்தலும் கற்றலும் ஒரு முறைசார் விடயமாக அமைந்துள்ளது.

சில பாடசாலைகளில் நிலைமை மோசமாக உள்ளது; வகுப்பறைகளாகப் பிரிக்கப்படாத திறந்த மண்டபங்களில் வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. இத்தகைய பாடசாலைகளில் கற்பித்தலும் கற்றலும் சலிப்புத்தரும் சுமையாக அமைந்துள்ளன.சில ஆசிரியர் வெளியே மரநிழலில் வகுப்புக்களை நடத்த வேண்டியுள்ளது.

நாம் எடுத்துக் கொண்ட 13 பாடசாலைகளில் 5 பாடசாலைகள் ஆரம்பக் கல்வி மாத்திரமே புகட்டுவன. 11ஆம் வகுப்பு அல்லது 13 ஆம் வகுப்புவரை உள்ள பாடசாலை களில் ஆரம்பப் பிரிவை நிர்வகிக்க அநுபவம் உடைய பயிற்சி பெற்ற ஆசிரியர் ஒருவர் பதில் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். ஏனைய எட்டுப்பாடசாலைகளின் அதிபர்களில் மூன்று பேர் பயிற்சி பெற்ற ஆசிரியர்; ஐந்து பேர் பட்டத்துக்குப் பின் டிப்புளோமாப் பெற்ற பட்டதாரிகள். இச்சந்தர்ப்பத்தில் பாடசாலை அதிபரின் கல்வியும் தொழிலும்சார்ந்த அந்தஸ்து, தாய்மொழியை மேம்படுத்துவதில் அவரது மனப்பாங்கு, தனது தொழிலுக்கு அவரது அர்ப்பணிப்பு, வாசிப்புச் சாதனங்களை வழங்குவதிலும் வாசிப்புப் பழக்கங்களை ஊக்குவிப்பதிலும் அவரது ஆதரவு என்பன குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் உடையன.

வளங்கள் தரங்குறைந்தவையாக இருக்கும் பொழுது, மாணாக்கரிடத்தில் வாசிப்புத் திறன்களையும் பழக்கங்களையும் மேம் படுத்துவதில் ஆசிரியர் தான் முக்கிய பங்கு கொள்கிறார். வாசிப்புக்கு மூலாதாரமாக உள்ளவர் இத்தகைய பாடசாலைகளில் ஆசிரியரே. வினாக்கொத்தினூடாகத் தகவல்களை வழங்கிய 24 ஆசிரியர்களில் 21 பேர் ஆரம்பக் கல்வியில் பயிற்சி பெற்றவர்; ஏனையோர் பயிற்சி பெற்ற பட்டதாரிகள். பாடசாலை அதிபர்கள் வழங்கிய தகவல்களின் படி பயிற்சி பெறாத ஆசிரியர்களும் பலர் உள்ளர். அட்டவணை 43 மாவட்ட மாதிரிகளில் அநுராதபுரத்தில் 12 பேர், குருணாகலில் 10 பேர் மாத்தறையில் 4 பேர் கொழும்பில் 2 பேர் பயிற்சி பெறாதவர்களாக உள்ளர். தம்தொழிலுக் குரிய பயிற்சி பெறாதாவர்கள் ஆசிரியர்களாயிருப்பினும் கல்வியின் தரம் பின் தள்ளப்படும்.

இப் பதின்மூன்று பாடசாலைகளிலும் ஏழு பாடசாலைகளில் ஆரம்பப் பாடசாலைப் பிள்ளைகளின் வாசிப்புத் தேவையை நிறைவு செய்யக்கூடிய நூலகங்கள் இல்லை. அட்டவணை 43 ஏனைய பாடசாலைகளில் 4 பாடசாலைகளில் 100-500 நூல்கள் தான் உள்ளன. மூன்று பாடசாலைகளில் 1000க்கும் குறைவான நூல்களே உள்ளன. கொழும்பு மாவட்டத்து இரு தேசியப் பாடசாலைகளிலும் 3000க்கும் மேற்பட்ட நூல்வளம் உண்டு. இரு பாடசாலைகள் சில நூல்களை நன் கொடையாகப் பெற்றுள்ளன; ஆனால் அவற்றைப் பாதுகாப்பாக வைத்தெடுக்கக் கூடிய வசதிகள் இல்லை என முறையிட்டனர். இந்நிலைமை தரங்குறைந்த வளங்களையுடைய பாடசாலைகள் சராசரி தரத்துக்கு மேற்பட்ட வளங்களையு டைய பாடசாலைகள் என்பவற்றுக்கிடையேயுள்ள ஏற்றத் தாழ்வுகளைத் தெளிவாகக் காட்டுகின்றது; அத்துடன் பிள்ளையின் வீட்டினதும் பாடசாலையினதும் சமுதாயப் பொருளாதார மட்டம் பிள்ளைகளின் அடைவு மட்டத்தில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன என்பதும் தெளிவு. (அட்டவணை 06.4 ஆம் வகுப்பு மாணாக்கரின் சராசரி ஆற்றுகை) 13 பாடசாலைக ளில் 8 பாடசாலைகள் யாதொரு பத்திரிகையையும் வாங்குவதில்லை.

## *7.4.1 வாசிப்பை முன்னேற்றுதல் பற்றி ஆசிரியர் அபிப்பிராயம்*

வினாக்கொத்துக்கு 25 ஆசிரியர் அளித்த பதில்கள் மூலம், பிள்ளைகள் வாசிப்பில் உண்மையான ஆர்வம் கொண்டுள்ளனர் என்றும் கஷ்டமான நிலைமைகளிலும் வகுப்பறை நூலகங்களை ஆசிரியர் ஏற்படுத்தி வாசிப்பை ஊக்குவிக்கத் தம்மாலான சகல முயற்சிகளையும் மேற்கொள்கின்றனர் என்றும் தெரிகின்றது. ஆண்டுத் தொடக்கத்தில் ஒவ்வொரு பிள்ளையும் ஒரு கதைப் புத்தகத்தைப் பாடசாலைக்கு கொண்டுவருகின்றது. சிலவேளைகளில் ஆசிரியர்கள் அப் பிள்ளைகள் கொண்டுவரக்கூடிய புத்தகப் பட்டியலை வழங்குவர். சிறுவர் பத்திரிகைகளை வாங்கக்கூடிய வசதி படைத்தவர்களும் அவற்றை வாங்கி வகுப்புக்குக் கொண்டு வருவர். இந் நூல்களும் பத்திரிகைகளும் வகுப்பு மாணாக்கரிடையே பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. இவ்வாறு பிள்ளைகள் தமது வாசிப்புப் பழக்கத்தை அபிவிருத்தி செய்ய ஆசிரியர் உதவுகின்றனர். மிஹிர, விஜய, ஹப்பன, ரிக்கிரி, புஞ்சி போன்ற பத்திரிகைகளின் பெயர்களை ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். அநுராதபுரம் குருணாகல் ஆகிய மாவட்டங்களில் இவ்வாறு மாணாக்கரிடையே நூற் பரிமாற்றம் செய்வதன் மூலம் வாசிப்பு முன்னேற்றப்படவில்லை. அதற்குப் பதிலாக இடைநிலைப் பாடசாலை நூலகத்திலிருந்து ஆசிரியர்கள் சில நூல்களைப் பெற்று அவற்றை மாதத்துக்கு ஒருமுறை மாணாக்கரிடை விநியோகிக்கின்றனர். ஆனால் கொழும்பு மாவட்டத்தில் வகுப்பறை நூலகங்களும் பிரதான நூலகங்களும் செவ்வனே இயங்குகின்றன.

## *7.4.2*

வாசிப்புச் சாதனத் தட்டுப்பாடு மாத்திரமன்றி, பாடசாலை வகை 1,2 ஆகியவற்றிலுள்ள மாணாக்கர் வேறுகுறைபாடுகளையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. அவையாவன: சமுதாய பொருளாதார நிலைமை, குடும்பங்கள் பெரியனவாயிருத்தல், பெற்றார் கல்வியறிவற்றிருத்தல், அதன்பயனாக வாசிப்பின் முக்கியத்துவத்தை உணராதிருத்தல் என்பனவாகும். போதிய வசதிகள் இன்மையாலும் வீட்டுப் பின்னணி ஊக்க மளிக்காமையாலும் இப்பிள்ளைகள் மொழித்திறன்களில் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை அடையவில்லை என ஆசிரியர் கருதுகின்றனர்.

## *7.4.3*

ஆரம்பப் பாடசாலைக்குரிய பாடத்திட்டம் அந்தந்த வகுப்புகளுக்கு மிகக் கூடுதலாக இருப்பதால் அப்பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்ய முடிவதில்லை என்றும் அதன் பயனாக மொழி அபிவிருத்தியில் தம்மால் அதிக கவனம் செலுத்துவது கஷ்டமாக உள்ளது என்றும் சில ஆசிரியர்கள் கருதுகின்றனர். கலைத்திட்ட உள்ளடக்கம் பல்வேறு தன்மைப்பட்டதாக இருப்பின் தனிப்பட்ட மாணாக்கரின் தேவைகளை நிறைவு செய்யும் என்பது உண்மை. உள்ளடக்கத்தை விரிவுபடுத்தி 5-10 வயதுப் பிள்ளைக்கு ஏற்றவாறு மொழித்திறன்களின் குறிக்கோள்களை அடைவதற்கு ஆசிரியர்களுக்கு சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும் என்பதே முக்கியம்.

## *7.4.4*

2 ஆம் 4 ஆம் வகுப்புகளுக்குரிய (5ஆம் வகுப்புக்குரிய கூட) பாடப்புத்தகங்களிலுள்ள கதைகள் மாணாக்கரின் உணர்வைத் தூண்டி அறியும் ஆவலை ஏற்படுத்தாமையினால் அப்பாடநூல்கள் அவர்களை மேலும் வாசிக்கத்தூண்டுவதில்லை எனச் சில ஆசிரியர்கள் சுட்டிக்காட்டினர். கதைகள் மாணாக்கருக்குச் சிந்திக்கச் சந்தர்ப்பம் கொடுப்பதில்லை. எனவே மாணாக்கர் எழுத்துக்களை இனங்காண முடியாமலும் சொற்களின் கருத்துக்களை விளங்கிமுடியாமலும் இருக்கின்ற நிலையில், கதைகளை மனப்பாடம் செய்து வைத்துக்கொண்டு வாசிப்பதுப்போல் பாசாங்கு செய்கின்றனர். இதற்கு ஓர் உதாரணமாக அமரற்ற தாக்க (அமரவுக்குப் பரிசு) என்று பாடநூலில் உள்ள கதையை ஆசிரியர் குறிப்பிடுகின்றனர். எனவே அதிகாரிகள் கலைத்திட்டத்தைத் தெரிவு செய்து, வகுப்புகளுக்கு ஏற்றவாறு தரப்படுத்துதல், பாடநூலின் உள்ளடக்கம் ஆகியவற்றில் மிக அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

*அட்டவணை 43 வாசிப்பை முன்னேற்றக் கிடைக்கும் வசதிகள்.*

| மாவட்டம் | பாடசாலை வகை | ஆரம்பப் பாடசாலை நூலகம் | நூலகர் | நூல்களின் எண்ணிக்கை | சிறுவர் பத்திரிகை | நூல்கள் சேமிப்பு இடம் | புதினத் தாள்கள் | தொலைக்காட்சி வானொலி | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அநுராதபுரம் | 1 | x | x | x | x | - | x | ✓ | ✓ |
| | 2 | ✓ | x | 300 | x | x | x | x | x |
| | 3 | x | x | x | x | - | 2 | ✓ | ✓ |
| குருணாகல் | 1 | ✓ | x | 1000 | ✓ | ✓ | 2 | ✓ | ✓ |
| | 2 | ✓ | ✓ | 1000 | x | ✓ | 3 | ✓ | ✓ |
| | 3 | ✓ | x | 1200 | ✓ | ✓ | 1 | x | ✓ |
| மாத்தறை | 1 | x | x | 350 | x | x | x | x | ✓ |
| | 2 | x | x | 250 | x | x | x | x | ✓ |
| | 3 | x | x | 500 | ✓ | x | 2 | ✓ | ✓ |
| கொழும்பு | 1 | x | x | 1200 | ✓ | x | 1 | x | ✓ |
| | 2 | கட்டிடம் அமைக்கப் பட்டுள்ளது | x | ஒழுங்கு நடைபெறுகின்றது | x | - | 3 | x | x |
| | 3 பெ. | ✓ | ✓ | 5000 | ✓ | ✓ | 3 | ✓ | ✓ |
| | 3 ஆ. | ✓ | ✓ | 3000 | ✓ | ✓ | 3 | ✓ | ✓ |
| x-இல்லை | | 7 | 9 | 2 | 8 | 4 | 4 | 6 | 2 |
| ✓ - ஆம் | | 6 | 4 | - | 5 | - | 9 | 7 | 11 |

கொழும்பிலுள்ள இரு தேசிய பாடசாலைகளும் தவிர ஏனையவற்றில் பயிற்சி பெற்ற நூலகர் இல்லை. பெரும்பாலான பாடசாலைகளில் நூலகத்தில் ஒரு ஆசிரியர் உதவுவர்; இரண்டொரு பாடசாலைகளில் பெயரளவில் சிறு ஊதியத்தைக் கொடுத்து நூலகத்துக்குப் பொறுப்பாகப் பெண்பிள்ளைகளை நியமித்துள்ள.

இவ்வாறு மாதிரியாகக் கொண்ட பாடசாலைகளுள் 50% ஆனவற்றின் பிள்ளைகளுக்கு அவர்கள் வீட்டுப் பின்னணியும் பாடசாலைப்பின்னணியும் அவர்களது வாசிப்புப் பழக்கங்கள், தகவற்திறன்கள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்குத் தேவையானவற்றை வழங்கக்கூடியனவாக அமையவில்லை.

*அட்டவணை 44 -ஆரம்பப் பாடசாலை நூலகங்களும் நூல்களும்*

| மாவட்டம் | பாடசாலை வகை | ஆரம்பப் பாடசாலை நூலகம் | நூலகர் | இருக்கும் நூல்களின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 200-500 | 500-1000 | 1000-2000 | 2000-5000 |
| அநுராதபுரம் | 1 | x | x | - | - | - | - |
| | 2 | ✓ | x | ✓ | - | - | - |
| | 3 | x | x | - | - | - | - |
| குருணாகல் | 1 | ✓ | x | ✓ | - | ✓ | - |
| | 2 | ✓ | ✓ | ✓ | - | ✓ | - |
| | 3 | ✓ | x | ✓ | - | ✓ | - |
| மாத்தறை | 1 | x | x | - | - | - | - |
| | 2 | x | x | - | - | - | - |
| | 3 | x | x | - | - | - | - |
| கொழும்பு | 1 | x | x | - | - | ✓ | - |
| | 2 | x | x | - | - | - | - |
| | 3 பெ | ✓ | ✓ | - | - | - | ✓ |
| | 3 ஆண் | ✓ | ✓ | - | - | - | ✓ |
| x-இல்லை | | 7 | 10 | - | - | - | - |
| ✓ - ஆம் | | 6 | 3 | 4 | - | 4 | 2 |

*ஆய்வு மூலம் அறியப்பட்டவற்றின் பொழிப்பு.*

1. பிள்ளைகள் நூல்கள், படநூல்கள் சஞ்சிகைகள் போன்றவற்றில் ஆர்வம் உள்ளவர், தகவல்களையும் அறிவையும் பெறவும் மற்றவர்களுடன் ஊடாடவும் உள்ளார்ந்த விருப்பம் உடையவர்.
2. எடுத்துக் கொண்டமாதிரியில் இரண்டாம் வகுப்பில் 80% மாணாக்கர் திருப்திகரமான மொழித்திறன்களைப் பெற்றுள்ளனர்.
3. I. நான்காம் வகுப்பு மாணாக்கரில் 50% - 67% ஆனவர் அவ்வகுப்புக் கால இறுதியில் அவ்வகுப்புக்கென எதிர்பார்க்கப்பட்ட மொழித்திறன்களைப் பெற்றிருக்கவில்லை.

   II. அநுராதபுரமாவட்டத்தில் 68% ஆனவரும் குருணாகல் மாவட்டத்தில் 36% ஆனவரும் தங்கள் முகவரியை எழுதமுடியவில்லை. அநுராதபுரமாவட்டத்தில் 43% ஆனவர் தம் பாடசாலைப்பெயரை எழுதமுடியவில்லை.
4. மாவட்டங்களுக்கிடையிலும், மூன்றுவகைப் பாடசாலைகளுக்கு இடையிலும் ஆண் பெண் என்ற இருபாலாருக்கும் இடையிலும் மொழித்திறன்களில் அடைவுமட்டதில் பெரும் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன.
5. ஆனால் சிறந்த கல்வியை முன்னேற்றுவதற்குப் பாடசாலைகளில் பௌதிக மனித வளங்கள் சமமாக வழங்கப்படவில்லை.
6. ஆசிரியர் கற்பித்தல் புத்தாக்க நுணுக்கங்களைப் பின்பற்றுவதில்லை.
7. கற்பித்தலை மேற்பார்வை செய்தல், ஆசிரியர்க்கு வழிகாட்டுதல் என்பன ஒழுங்காக அவற்றுக்குப் பொறுப்பான ஆசிரியர்களால் மேற்கொள்ளப்படுவதில்லை.

8. கற்றலில் மாணாக்கருக்கு ஏற்படும் கஷ்டங்களை கண்டறிந்து அவர்களுக்கு உதவக் கூடியவகையில் அளவீட்டு முறைகளும் மதிப்பீட்டு முறைகளும் பேணப்படுவதில்லை.

9. நவீன உலகில் மாற்றமுற்ற சமுதாயத்துக்கு ஏற்றனவாகக் கலைத்திட்டம் ஆசிரியர் வழிகாட்டிகள், பாடநூல்கள், கற்பித்தல் முறைகள் என்பன அமையவில்லை.

10. எடுத்துக் கொண்ட மாதிரியில் 50% ஆரம்பப் பாடசாலைகளில் நூலகங்கள் இல்லை. பொருத்தமான வாசிப்புச் சாதனங்கள், நூலகங்கள் பல்வேறு வகைப்பட்ட நூல்கள், ஆரம்ப மாணாக்கரின் தேவைகளுக்கும் அக்கறைகளுக்கும் ஏற்ற தரம் வாய்ந்த நூல்கள் என்பனவும் நூலகர்களும் இல்லாமை அப்பிள்ளைகளின் வாசிப்புப் பழக்கங்கள் தகவற் திறன்கள் ஆகியவற்றை அபிவிருத்தி செய்யத் தடையாக உள்ளது.

# அத்தியாயம் - 08

# பெறப்பட்ட முடிபுகளும் கலந்துரையாடலும்

*8.01* பிள்ளைகள் வாசிப்பில் விருப்பம் உடையவர் என்பதைச் சுய ஆர்வப் பதிவேடுகள் புலப்படுத்துகின்றன. அவர்கள் நூல்கள், சஞ்சிகைகள், சிறுவர் பத்திரிகைகள் ஆகிய வற்றில் விருப்பமுடையவர்; தகவல், அறிவு, ஊடாட்டம் ஆகியவற்றை அவாவுகின்றனர். கதைகளைக் கேட்பதற்கு அவர்களுக்குள்ள உள்ளார்ந்த விருப்பம் தெற்றெனப் புலப்படு கின்றது. அவர்களது வாசிப்புப் பழக்கங்களையும் தகவற் திறன்களையும் மேம்படுத்துவதற்கு மேற்குறிப்பிட்ட அவர்களது விருப்பங்களையும் ஆர்வங்களையும் கவர்ந்திழுத்துப் பயன் படுத்த வேண்டும்.

வாசிப்புப் பழக்கங்களையும் தகவற் திறன்களையும் அபிவிருத்தி செய்வதற்கு அத்திவாரமாக வகுப்பறையில் அவதானித்துக் கேட்டல், பேச்சு,எழுத்து வாசிப்பு என்ற நான்கு மொழித்திறன்களையும் அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டும். வாசிப்பை ஒரு பழக்கமாக கொண்டு வருவதற்குப் பிள்ளை இலகுவாகத் தடையின்றி வாசிக்கக் கூடியதா யிருத்தல் வேண்டும். இதற்கு முதலில் எழுத்துக்களையும் சொற்களையும் எளிதில் இனங்காணக் கூடியதாய் இருத்தல் வேண்டும். பின்னர் சொற்களை வாக்கியங்களாக சேர்த்து அவற்றின் பொருளை அறிந்து தகவலையும் அறிவையும் பெறவேண்டும். இது ஒரு சிக்கலான படிமுறை. எனவே அத்திவாரம் மிக வலுவாக இடப்படவேண்டியதின் முக்கியத்துவம் தெளிவாகின்றது. இது பெற்றாரினதும் ஆசிரியரினதும் பாடசாலையினதும் பொறுப்பாகும். இந்த ஆய்விலே 2 ஆம் 4 ஆம் வகுப்புகளுக்கு நடத்தப்பட்ட பரீட்சைகளின் பெறுபேறுகளில் இருந்து மேற்குறிப்பிட்ட முக்கிய பொறுப்பு திருப்திகரமாகவும் பொறுப்பு ணர்வுடனும் ஆசிரியர், பெற்றோர் தொடர்புடைய் அதிகாரிகள் ஆகியோரால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்று தெரிகின்றது.

*8.2* நான்கு மாவட்டங்களிளும் மூவகை பாடசாலைகளிலுமுள்ள 2 ஆம் வகுப்பு மாணாக்கர் மொழித்திறன்களில் 80% சராசரி பெற்றுள்ளனர். ஆனால் 4 ஆம் வகுப்பின் சராசரி ஆற்றுகை திருப்தி தருவதாயில்லை. அநுராதபுரம், குருணாகல், மாத்தறை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் பாடசாலை வகைக்கமைய கணிக்கும் பொழுது சராசரி ஆற்றுகை 35% ஆகும். இம் மூன்று மாவட்டங்களிலும் 50% 60% மாணாக்கர் நாலாம் வகுப்புக்குத் தேவையான தகைமையைப் பெற்றிருக்கவில்லை அட்டவணை 8. எனவே ஆசிரியர், பாடசாலைகள், பெற்றோர் யாவரும் தமது கடமைகளில் இருந்து தவறி விட்டனர் என்றே கொள்ளலாம். இந்நிலைமையை மேலும் ஆராயும் பொழுது, பிள்ளைகள் கல்விகற்கப் பாடசாலையில் சேர்ந்த பொழுது பெற்றோர்கள் மிகவும் ஆதரவளிப்பவராகவும் உற்சாகத்துடன் காணப்படுகின்றனர் என்றும், ஆனால் காலஞ் செல்லச் செல்லப் பெற்றோரி னதும் வளர்ந்த பிள்ளைகளினதும் உற்சாகம் தேய்ந்து செல்கின்றது என்றும், அவர்களது கவனம் எல்லாம் அவர்களுக்குப் பின் தோன்றும் பிள்ளைகள் மீதே செல்கின்றது என்றும் அதனால் அவர்களது (9-10 வயசுப் பிள்ளைகள்) கல்வியில் அசட்டையாக உள் என்பதும் தெரிய வந்தது.

மாவட்டங்களுக்குகிடையிலும், ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலும் மூவகைப் பாடசாலைகளுக்கிடையிலும் மாணாக்கரின் ஆற்றுகையில் பெரும் ஏற்றத்தாழ் வுகள் காணப்படுகின்றமையை 4 ஆம் வகுப்பு மதிப்பீடு காட்டுகின்றது. 3 ஆவது வகைப் பாடசாலைதான் பெண்களுக்கு 57% ஆகவும் ஆண்களுக்கு 49% ஆகவும் அதிஉயர்ந்த சராசரிப் பெறுபேறுகளைப் பெற்றுள்ளது. 2 ஆவது வகைப் பாடசாலை பெண்களுக்கும் ஆண்களுக்கும் முறையே 43%, 33% ஐப் பெற்று அடுத்த ஸ்தானத்தில் உள்ளது. முதலாவது வகை பாடசாலைகள் தரங்குறைந்த வளங்கள் காரணமாக பெண்களும் ஆண்களும் முறையே 38%, 26.4% ஆகிய சராசரிப் பெறுபேறுகளைப் பெற்று மிகக் குறைந்த நிலையில் உள்ளன. கொழும்பு மாவட்டப் பிள்ளைகள் ஏனைய மூன்று மாவட்டப்

பிள்ளைகளிலும் பார்க்க திறம்பட மொழித்திறன்களைப் பெற்றுள்ளனர் என்பது வெளிப்படை. அநுராதபுரம் தான் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. முற்றான திறமை மட்ட அடைவும் கொழும்பில் தான் கூடுதலாக இருக்கின்றது. ஏனைய மாவட்டங்களில் குறைந்து சென்று அநுராதபுர மாவட்டத்தில் மிகக் கீழ் நிலையில் உள்ளது.

மாணாக்கரின் ஆற்றுகையில் இத்தகைய வேறுபாடுகள், பொதுவாக எல்லாப் பாடங்களுக்கும், குறிப்பாக மொழித்திறன்களுக்குத் தேவையான, கற்றல் கற்பித்தல் வசதிகளின் விநியோகம் சரி சமனாகப் பாடசாலைகளில் நடைபெறவில்லை என்பதையே காட்டுகின்றது.

மொழித்திறன்களைப் பெறுவதில் 4ஆம் வகுப்பு மாணாக்கர் கஷ்டபப்டும் துறைகளாவன எழுத்துக் கூட்டலும், ஆக்கபூர்வமான எழுத்துத் திறன்களும் ஆகும். அட்டவணை 27, இது எல்லா வகைப் பாடசாலைக்கும் பொதுவான நிலைமை. இந் நிலைமை கீழே தெளிவாகக் காட்டப்படுகிறது.

*அட்டவணை 45- மொழித்திறன்களை அடைவதில் கஷ்டமான துறைகள் வகுப்பு-4*

| பரீட்சை விடயம் | பாடசாலை வகை 1 | பாடசாலை வகை 2 | பாடசாலை வகை 3 |
|---|---|---|---|
| 3. எழுத்துக்கூட்டும் ஆற்றல் | 69% | 71% | 53% |
| 7. ஆக்கபூர்வ எழுத்துத்திறன் | 77% | 70% | 50% |

நான்காண்டுப் பாடசாலைக் கல்வியின் பின்னர், மாணாக்கரின் அரைப்பங்கினருக்கு மேல், அதாவது 50%-70% க்கும் இடைப்பட்டோர், அவ்வகுப்புக்கு எதிர்பார்க்கப்பட்ட அடைவுமட்டத்தை மேற்குறிப்பிட்ட இரு திறன்களிலும் அடையவில்லை இப் பாரதூரமான நிலைமைக்கு வேறும் அடிப்படைக் காரணிகள் உண்டு என்பது புலனாகின்றது. மாணாக்கரின் கல்விசார் வெற்றிக்கும், வீட்டுப் பின்னணியும் பாடசலைப் பின்னணியும் வழங்கும் ஆதரவு இச் சந்தர்ப்பத்தில் அடிப்படையான முக்கியத்துவம் உடையது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. வினைத்திறனுடைய கற்பித்தல், திருப்திகரமான கற்றல் ஆகியவை நடைபெறவும் மாணாக்கரின் அடைவு மட்டம் மேம்படவும் ஆசிரியர் கைக்கொள்ளும் கற்பித்தல் முறையியலும் சமமான முக்கியத்துவமுடையது. வசதிகள் மறுக்கப்பட்ட குடும்பங்களில் பெற்றார் தமது பிள்ளைகளுக்கு மொழி அபிவிருத்தியில் கொடுக்கும் ஆதரவு மிக மிகக் குறைவு; ஆதரவு இல்லை என்றே கூறலாம். அட்டவணை 41-01,02, அட்டவணை 42. இத்தகைய நிலையில் பாடசாலையும் ஆசிரியரும் தான் கல்வி வசதிகளிலுள்ள இக்குறைபாட்டுக்கு ஈடுசெய்ய வேண்டும். இது உண்மையில் நடக்கின்றதா என்பதே கேள்வி.

*8.03* நாலு மாவட்டங்களிலும் தெரிவு செய்யப்பட்ட மாதிரிப் பாடசாலைகளில் மனித பௌதீக வளங்கள் சமமாக வழங்கப்பட்டிருக்கவில்லை என்பது கவனிக்கப்பட்டது. அநுராதபுரம் மாத்தறை ஆகிய மாவட்டங்களிலுள்ள சில பாடசாலைகளில் ஆரம்ப வகுப்புக்கள் திறந்த மண்டபங்களில் நடத்தப்பட்டன. கொழும்பு மாவட்டத்திலுள்ள தலை சிறந்த பாடசாலைகளிற் கூட வகுப்பறைகள் இருந்தும் ஒவ்வொரு வகுப்பிலும் மாணாக்கர் தொகை அதிகமாகி இடநெருக்கடி காரணமாக ஆசிரியரோ மாணவரோ ஒருவரையொருவர் அண்டமுடியாதிருந்தது. அதனால் ஆசிரியர் ஒவ்வொரு மாணாக்கர் மீதும் தனித்தனிக் கவனம் செலுத்தமுடியவில்லை. இந் நிலைமை ஆரம்பப் பாடசாலைப் பிள்ளைகளை பெரிதும் பாதிக்கின்றன; ஏனெனில் அவர்கள் அப்பொழுது தான் சில விடயங்களை கிரகிக்கத் தொடங்குகின்றனர். எனவே இத்தகைய முறைசார் வழியில் அறிவு புகட்டும் பொழுது ஆசிரியர் எவ்வளவு தான் முயன்று கஷ்டப்பட்டாலும் மாணாக்கர் பெறும் பயன் அற்பமே.

*8.04* தெரிவு செய்யப்பட்ட 13 பாடசாலைகளில் 5 பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி மாத்திரமே உள்ளது. இப் பாடசாலைகளில் 500க்கு மேற்பட்ட மாணாக்கருளர். ஒரு அதிபரும் பதில் அதிபரும் முகாமைத்துவம் செய்கின்றனர். மேல் வகுப்புக்கள் உள்ள பாடசாலைகளிற் போலல்லாது இப் பாடசாலைகளில் ஒரே ஆசிரியரே எல்லாப் பாடங் களையும் ஒரு வகுப்பிற் கற்பிக்கின்றனர். மேல் வகுப்புகள் உள்ள பாடசாலைகளில் ஆங்கில மொழி ஆரம்ப விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு விசேட ஆசிரியர்கள் உளர். எனவே ஆரம்ப வகுப்புக்கள் உள்ள பாடசாலைகளிலும் ஆங்கில மொழி ஆரம்ப விஞ்ஞானம் ஆகியவற்றுக்கு விசேட ஆசிரியரின் தேவையுண்டு. இத்தகைய ஒரு நடவடிக்கை பிள்ளைகளின் அறிவையும் தகவற் திறன்களையும் விரிவடையச் செய்வதுடன் சிங்களம் ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் நூல்களை வாசிக்க ஊக்குவிக்கும்.

*8.05* ஒரு கற்றல் நிலைமையில் கற்பித்தல் முறைகளும் பெரும் பங்கு வகிக்கின்றன. ஆசிரியர் வகுப்புக்குரிய பாடத்திட்டத்தைக் கற்பித்து முடிப்பதிலேயே கவனம் செலுத்து வதால், கற்றோரிடமுள்ள தனித்தனி வேறுபாடுகள், அவரவர்க்கேற்ற கற்பித்தலில் புத்தாக்க நுணுக்கங்கள் என்பன பற்றிச்சிந்திக்காது பொதுக் கற்பித்தல் முறைகளையே கையாளுகின்றனர் என்பது கவனிக்கப்பட்டது. மதிப்பீட்டு வாசிப்பு முறை இருக்கவில்லை. ஆசிரியர் பின்னூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்படுத்தி அவற்றின் அறிக்கைகளைப் பேணுவதில் அக்கறை உள்ளவராகத் தெரியவில்லை. பெரும்பாலான பாடசாலைகளில் கற்பித்தல் சாதனங்கள் இருக்கவில்லை. எனவே ஆசிரியர் தமது வெண்கட்டியையும் தமது வாய்மொழியையும் நம்பி இருந்தனர். வாசிப்பில் கஷ்டங்கள் உள்ள பிள்ளை களுக்கு உதவுவதற்குச் சில ஆசிரியர் ஒரு கிழமையில் இரண்டு மூன்று நாட்கள் பாடசாலை விட்ட பிறகு தங்கி இருந்து வேலை செய்வதாகக் கூறினர். இந்நிலைமையில் கற்பித்தல் சாதனங்கள் பயன்படுத்தப்படுவதில்லை. கற்பித்தல் முறையில் உள்ள பெருங்குறைபாடு வகுப்பறைகள் செயன்முறைகள் குறிப்பிட்ட பிள்ளைகளின் வாழ்க்கை யோடும் சுற்றாடலோடும் தொடர்புபட்டனவாய் இருக்காமையாகும். நாலாம் வகுப்பில் 67% மாணாக்கர் தமது செந்த முகவரியை எழுத முடியவில்லை என்பதும் 43% மாணாக்கர் திருப்திகரமாகத் தமது பாடசாலையின் பெயரை எழுதமுடியவில்லை என்பதும் மேற்படி கூற்றை உறுதிசெய்கின்றன.

*8.06* வாசிப்புச் சாதனங்கள் கிடைத்தால் தான் வாசிப்புத்திறன்களை அபிவிருத்தி செய்யலாம். வாசிப்புப் பழக்கங்களை ஏற்படுத்துவதில் பொருத்தமான வாசிப்புச் சாதணங்கள் கிடைக்காமை பெருந் தடையாக உள்ளது. வசதிகள் மறுக்கப்பட்ட பாடசாலைகளில் பிள்ளைகளுக்குப் பொருத்தமான வாசிப்புச் சாதனங்கள் இல்லை. மாதிரியாக எடுத்துக்கொள்ளப்பட்ட 50% பாடசாலைகளில் நூலகங்கள் இல்லை. நூலகங்கள் உள்ள சில பாடசாலைகளிலும் நூல்களை வைப்பதற்குப் போதிய இடவசதி யின்மை, மாணாக்கருக்கு நூல்களை வழங்கி அவர்களுக்கு வழிகாட்ட ஒரு நூலகரை நியமிக்கப் போதிய பணமின்மை, ஆரம்பப்பாடசாலைப் பிள்ளைகளுக்கேற்ற நூல்க ளின்மை, பிள்ளைகளின் வேறுபட்ட அக்கறைகளுக்கேற்ப வேறுபட்ட நூல்களின்மை போன்ற பல குறைபாடுகள் உண்டு. பெயரளவில் ஏதோ சம்பளத்தைக் கொடுத்து நியமிக்கப்பட்ட சில நூலகரும் அவ்வேலைக்கெனப் பயிற்சி பெற்றவர் அல்லர். இத்தகைய குறைபாடுகளுக்கு அப்பால் பெரும் தொகையான நூல்களும் தேவைப்படுகின்றன.

கொடைவள்ளல்களிடமிருந்தும் வேறு அமைப்புக்களிடமிருந்தும் நன்கொடை யாகப் பெற்ற நூல்களைக் கூடப் பாதுகாப்பாக வைத்துப் பேணுவதற்கு இரண்டு அலுமாரிகளாவது இல்லாத நிலையில் சில பாடசாலைகள் உள்ளன. ஒரு தேசீய பாடசாலையின் ஆரம்பப் பிரிவில் உள்ள நூலகத்தில் 5000 சிறுவர் நூல்கள், தேவையான தளபாடங்கள், பயிற்சி பெற்ற நூலகர் எல்லாம் உண்டு. ஆனால் பாடசாலை வகை I இல் 10 நூல்களாவது இல்லை. இது ஒரு துக்ககரமான நிலைமை. இந்நிலைமையைச் சீர்செய்ய அரசாங்கம் பல வழிகளில் முயல்கின்றது. மாணாக்கரின் சுய ஆர்வப் பதிவேடுகளில் இருந்து, மேலதிக வாசிப்பில் ஈடுபடப் பிள்ளைகளுக்கு விருப்பம்

உண்டு என்று தெரியவருகின்றது; வாசிப்பில் ஆர்வம் உடையவர்கள் அவர்கள். எனவே பிள்ளைகளின் உள்ளார்ந்த ஊக்கத்தை பயன்படுத்தி அவர்களது வாசிப்புப் பழக்கங்களையும் தகவற் திறன்களையும் அபிவிருத்தி செய்வது சகல பெற்றார், ஆசிரியர் தொடர்புபட்ட அதிகாரிகள் ஆகியோர் யாவரினதும் கடமையும் பொறுப்புமாகும்.

பிள்ளைகளின் வாசிப்புப் பழக்கங்களை அபிவிருத்தி செய்வதற்கு, அவர்கள் இலகுவாகவும் கஷ்டமின்றியும் வாசிக்கக் கூடியதாய் இருத்தல் வேண்டும். வாசிக்க முடியாமல் இருப்பது பிள்ளையின் மொழி அபிவிருத்தியின் குறைபாட்டுடன் தொடர் புடையது. எனவே ஆரம்பப் பாடசாலைப் பிள்ளைகளின் மொழித்திறன்களை அபிவிருத்தி செய்வதை ஒரு முக்கிய விடயமாகக் கொள்ள வேண்டும். கல்வியின் நோக்கம் எழுத்தறிவை விரிவாக்கல்; அதாவது மாணாக்கரை எழுத, வாசிக்க, சிந்திக்கத்தூண்டுதல். நாளாந்த வாழ்க்கை, சிந்தனையையும் எண்ணங்களையும் நெறிப்படுத்துதலில் தங்கியுள்ளது.

தொடர்பாடல் மனிதனின் முக்கிய செயற்பாடாகும். அது தான் முக்கிய நடத்தை வடிவமுமாகும். வாசிக்கக் கற்றுக்கொள்ளல் ஒரு திறனும் செயற்பாடும் மாத்திரமன்று. வாசிப்பு மூலம் பிள்ளைகள் தகவல்களைப் பெறுவதால், அது புத்திசார்ந்த துணிச்சல் வேலைகளுக்கும் புலமை முயற்சிகளுக்கும் முக்கிய சவாலாக அமைகின்றது. இச் சவால்களைப் பிள்ளைகள் எதிர்க்கொள்ளப் பாடசாலை உதவுதல் வேண்டும்.

மாதிரியில் உள்ள மாவட்டப் பாடசாலைகள் யாவும், தமது கல்வியூட்டும் முயற்சியில் சமமான வெற்றி பெறவில்லை என்பது புலப்படுகின்றது. ஏன்? இதற்குப் பல காரணங்கள் உண்டு. ஒரு பிள்ளையின் மொழித்திறன்களின் அடைவுமட்டத்தைப் பாடசாலையில் கிடைக்கும் மனித பௌதிக வளங்கள் பாதிக்கின்றன. கொழும்பு மாவட்டத்திலுள்ள பாடசாலை வகை மூன்றிலுள்ள பிள்ளைகளை, அநுராதபுர மாவட்டப் பாடசாலை வகை ஒன்றிலுள்ள பிள்ளைகளோடு ஒப்பிடும் பொழுது முதலில் குறிப்பிடப் பட்டவரின் அடைவுமட்டம் மிக உயர் நிலையில் உள்ளது. வசதிகுறைந்த பிள்ளைகளின் பெற்றார் பிள்ளைகளின் படிப்பில் அவர்களுக்கு உதவ முடியாது. அவர்களும் கல்வியறிவின்மையால் கற்றல் பால் ஒரு நேர் மனப்பாங்கை அவர்களிடம் காணமுடியாது. எனவே இப் பிள்ளைகள் தத்தம் வீடுகளில் பெற்றாரின் ஆதரவையும் ஊக்கத்தையும் பெறவதில்லை. மாதிரியில் உள்ள 4ஆம் வகுப்பு மாணாக்கரின் 50% -67% பின்வருவனற்றில் மொழித்திறன்களைப் பெற்றிருக்கவில்லை.

1+2 அவ்வகுப்பு மட்டத்துக்குரிய சொல்லாட்சி

3. எழுத்துக்கூட்டும் ஆற்றல்

4. பொருள்சார் கிரகித்தல்

5. அநுமானத்துக்குரிய கிரகித்தல்

6. இலக்கணமுறைப்படி எழுதும் திறன்கள்

7. ஆக்கபூர்வமாக எழுதுதல்

அநுராதபுர மாவட்டத்தில் 68% மாணாக்கருக்குத் தமது வீட்டு முகவரியை எழுத முடியாது; 43% மாணாக்கருக்குத் தமது பாடசாலைப் பெயரை எழுத முடியவில்லை. இவ்வாறு ஒரு பாடசாலையில் மனிதபௌதிக வளங்கள் கிடைக்கின்றமைக்கும் மாணாக்கரின் ஆற்றுகைக்கும் இடைத் தொடர்புண்டு. இத்தகைய பாரதூரமான நிலை தவிர்க்கப்பட வேண்டும். இச் சந்தர்ப்பங்களில் ஆசிரியரும் மாணாக்கருமே கற்றலுக்கு வளமாக அமைகின்றனர். இன்று வாசிப்பும் எழுத்தும், ஏழுத்துக்களின் வரிவடி வங்களுக் கிடையுள்ள வேறுப்பாட்டை அறிதல், பாடப்பகுதியை கண்ணால் பார்த்து வாசித்தல், அவ்வடி வங்களை வரைதல் என்பனவற்றுக்கும் அப்பாற்பட்டுச் செல்லுகின்றன. உளவியற் கருத்தின்படி எத்துறையிலாவது அறிவென்பது வாசிப்போருக்கும் அறிவுப்பொருளுக்கு மிடையுள்ள இடைத்தாக்கத்தினால் பெறப்படுவதாகும். பிள்ளை வாசிக்கக் கற்றலாவது இயற்கையை ஆராய்வதாகும்; எழுத்து மொழியின் தொழிற்பாடும் பெறுமதியும் அதுதான். இதைப் பிள்ளை பாடசாலைக்குச் செல்லுமுன்னரே ஆரம்பித்துவிடுகின்றது.

பிள்ளைகள் அறிவைத் தேடுவதில் மும்முரமாக நாட்டம் கொண்டவராவர்; ஒரு குறிப்பிட்ட திறனைப் பெற இசைகிறார்களா இசையவில்லையா என்பது மாத்திரமன்று என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். ஆரம்பப் பாடசாலைப் பிள்ளை "எழுத்தறிவுக் கழகத்தை" ஏற்கனவே சேர்ந்து விட்டது என்று கூறப்படுகின்றது; ஏனெனில் அது இயல் பாகவும் தற்செயலாகவும் வாசிப்பைப்பற்றிக் கற்றுக் கொள்ளத் தொடங்கிவிட்டது; இதற்குக் காரணம் அது தன் சுற்றாடலில் பேருந்து பெயர்ப் பலகைகள், தெருக்களில் உள்ள பல்வேறு சுவரொட்டிகள், சந்தையில் உள்ள பொருட்களின் லேபல்கள், தொலைக் காட்சி விளம்பரங்கள், பத்திரிகை விளம்பரங்கள், வீதி ஒழுங்கு விதிகள் போன்றவற்றில் காணப்படும் சொற்களை அடிக்கடி காணவேண்டி நேரிடுகின்றது. இவ்வாறு ஒரு பிள்ளை தனது சுற்றாடலில் பெருந்தொகையான சொற்களைக் காணுகின்றது; அத்துடன் அவற்றின் பொருளைக் கிரகித்துக் கொள்ள முயல்கின்றது. எனவே பெரும்பாலான பிள்ளைகள் அச்சில் வெளிவந்த சொற்கள் பற்றி ஏதோ ஒருவகையில் அறிந்திருக்கின்றன. இத்தகைய அறிவைப் பெற்றுள்ள பிள்ளைகளின் அநுபவங்களை விரிவடையச் செய்தலும் பெற்றிராத பிள்ளைகளுக்கு அறிவை ஈடுசெய்தலும் ஆசிரியரின் பொறுப்பாகும். பிள்ளைகளின் தனித்தனியான வேறுப்பாட்டைக் கருத்திற் கொண்டு. அவர்களிடம் ஏற்கனவேயுள்ள அறிவின் அடிப்படையில் இருந்து விருத்தி செய்து அவர்களது வாசிப்பை அர்த்தமுள்ளவாறு விரிவடையச் செய்வதில் ஆசிரியர் கவனம் செலுத்தவில்லை எனத் தெரிகின்றது. கற்றலில் (வாசிப்பில்) வெற்றி பெறுவது நாங்கள் கற்பிப்பதில் இருந்து அன்று; கற்றோர் என்ற முறையிலிருந்து யாது செய்ய பிள்ளைகளுக்கு உதவுகின்றோம் என்பதில் இருந்தாகும் என்பதை ஆசிரியர் புரிந்துக்கொள்ள வேண்டும். பிள்ளைகள் கற்பனவற்றில் பெரும்பகுதியைத் தாங்களாகவே கற்றுக்கொள்ள வேண்டும். கற்பிக்கப்படுவதும் கற்றுக் கொள்ளப்படுவதும் ஒன்றாக இருப்பதில்லை. எனவே ஆசிரியர் கற்போரின் தேவைகளையும் கவனத்திற் கொள்ள வேண்டும். ஆசிரியர் கற்பிக்க முயலும் சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்கள், என்பன சுவாராஸ்ய முடையதாகவும் நினைவுகூரத்தக்கவையாகவும் பிள்ளையின் ஆர்வத்துடன் தொடர்புபட்டனவாகவும். இருந்தால், அவை பிள்ளைக்கு அர்த்தமுள்ள வையாகும். அவற்றைத் தமது சொந்த அநுபவங்களோடு ஒப்பிட்டுப் பிள்ளைகள் துலங்குவர். செய்தி ஒன்றை பெற்று அதனைப் புரிந்து கொள்ளும் பொழுது தான்வாசிப்பு நடைபெறுகின்றது. முன்பு குறிபிடப்பட்ட பரீட்சைகளின் பெறுபேறுகள், ஆசிரியர்ள் பொதுவானதும் சீரானதுமான கற்பித்தல் நுணுக்கங்களையே கையாளுகின்றனர் என்பதைக் காட்டுகின்றன.

*8.07* பிள்ளைகளின் வாசிப்புப் பழக்கங்களை அபிவிருத்தி செய்வதில் ஆசிரியர் ஒரு முக்கிய மூலக்கூறாகக் கருதப்படுகின்றனர். பிள்ளைகள் வாசிக்கத் தொடங்கி வாசிப்புப் பழக்கங்களை உருவாக்கிக்கொள்ளும் ஆரம்ப காலப் பகுதியில் ஆசிரியர் மாணாக்கர்மீது கொண்டுள்ள செல்வாக்கு மிக்க வலுவுடையதாகும். வாசிப்பில் இன்பம் காண்பதற்குப் பிள்ளைகளுக்கு வழிகாட்டலும் உற்சாகப்படுத்தலும் தேவைப்படு கின்றன. வாசிப்பு பிள்ளைக்கு இன்பம் தரும் அநுபவமாயிருக்காவிட்டால், தங்களுக்கு வாசித்துக்காட்டப்பட்டவற்றை விட மேலதிகமாக ஒன்றும் வாசிக்கவிரும்பமாட்டார்கள். பிள்ளைகளுக்கு வாசிப்பில் ஒரு சுவையை ஊட்டி அதன் மீது ஆழ்ந்த விருப்பத்தை உருவாக்குவதற்கு ஆசிரியரும் வாசிக்க ஆசை உள்ளவராதல் வேண்டும். சிறுவர் இலக்கியம் பற்றிய பரந்த அறிவும் ஆசிரியர்க்கு குறிப்பாக உதவக்கூயது. கிடைக்கக் கூடிய நல்ல நூல்களின் பரிச்சயம் ஆசிரியர்களுக்குத் தேவை. 50% ஆசிரியர் மாத்திரம் தாங்கள் தொழில் செய்யும் காலத்தில் 500க்கு மேற்பட்ட நூல்களை வாசித்துள்ளனர் என்பதும் இவர்களின் இருவர் மாத்திரம் 1000க்கும் மேற்பட்ட நூல்களை வாசித்துள்ளனர் என்பதும் ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்ட சுயபதிவேட்டு மனப்பாங்குப் பரீட்சை மூலம் தெரிய வந்துள்ளது. ஆசிரியர் வாசிப்பு மூலம் தமது அறிவையும் காலத்துக்கேற் றவாறு விருத்தி செய்துகொள்ளவேண்டும்.

பாடத்தின் ஒவ்வொரு அலகும் கற்பித்து முடித்தபின் ஆசிரியர் தொடர் மதிப்பீடு செய்தும், மொழித்திறன்களில் மாணாக்கரின் குறைபாடுகளைத் தேடிக்காணக் கூடியவாறு பிரித்தறியும் பரீட்சைகள் நடத்தியும், பின்னூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தியும் வந்திருந்தால், தமது வகுப்புக்கு எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை இத்தனை

மாணாக்கரும் அடையத் தவறியிருக்கமாட்டர்கள். இவ்வாறு அளவீட்டு மதிப்பீட்டுப் பரீட்சைகளை ஆசிரியர் நடத்தவேண்டிய தேவையுண்டு. பின்னர் பின்னூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளப் பிள்ளைகளை நெறிப் படுத்தி பரிகாரச் செயற்பாடுகளை ஒழுங்காக நடாத்த வேண்டும்.

*8.08* ஒரு பிள்ளையின் தேவையை ஒரு நூல் நிறைவேற்றுமாயின் அப்பிள்ளை தொடர்ந்து இன்பத்துக்காக நூல்களை நாடும். ஒரு நூலில் உள்ள படங்களைப் பார்த்தே பிள்ளை அந்நூலின் அறிமுகத்தைப் பெற்றுக் கொள்கின்றது. ஒரு படப்புத்தகம் ஒரு பிள்ளையின் கவனத்தை ஈர்க்குமாயின் பிள்ளை மீண்டும் அப் புத்தகத்தை நாடுகின்றது. சிபில் வெத்த சிங்க என்பவர் ஆக்கிய "குடையை திருடியவன்" என்ற புத்தகம் போன்று பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்யும் படப்புத்தகங்களைப் பிள்ளைக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும். 4ஆம் வகுப்பு மாணாக்கருக்குரிய சுய ஆர்வப் பதிவேட்டின்படி பிள்ளைகள் பெரிதும் விரும்பும் நூல் ஜாதகக் கதைகளாகும். இக்கதைகள் பிள்ளைகளின் தேவை களையும் ஆர்வத்தையும் நிறைவு செய்வது காரணமாகப் பிள்ளைகள் இவற்றை விரும்பலாம்.

இவற்றின் உலகமும் அதன் சுற்றாடலும், அதில் உள்ள தாவர இனங்கள் விலங்கினங்கள், குடும்பத்துள்ளும் சமுதாயத்துள்ளும் மனித இடைத்தாக்கங்கள் போன்ற விடயங்கள் அடங்கியுள்ளன. பிள்ளைகள் இவற்றோடு தமது அநுபவங்களையும் இணைத்து நன்மை எது தீமை எது என வேறுபடுத்திச் சரியான ஒழுக்க விழுமியங்களை ஏற்றுக் கொள்ளக் கூடியதாயுள்ளது. எனவே பிள்ளையின் அபிவிருத்தி ஆற்றல், வயது, தேவைகள், ஆர்வம் என்பனவற்றோடு பொருந்தக் கூடிய பல்வேறு நூல்களை ஆசிரியர் தெரிவு செய்தல் அவரது பிரதான பணியாகும்.

வாசிப்பிற்கு நூல்கள் கிடைக்கக்கூடிய சந்தர்ப்பங்களைப் பெருமளவில் பெற்ற பிள்ளைகள்தான் வாசிப்பில் வெற்றியடைகின்றனர் என்று மேற்குலக ஆராய்ச்சிகள் வெளியிடுகின்றன. ஆர்வமுடன் வாசிக்கும் பிள்ளைகளுக்குச் சிறுவயதில் பெற்றார் அல்லது பேரன் பேத்திமார் ஒழுங்காகக் கதைகள் கூறி அல்லது வாசித்து வந்திருக் கிறார்கள்

பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட்ட வாசிப்பு மனப்பாங்குப் பரீட்சையின் மூலம் 15% மாணாக்கருக்குத் தானும் அவர்களது பேரன் பேர்த்திமார் அவர்களோடு வாழவில்லை என்பது தெரியவந்தது. கைக்குக் கிடைத்த புத்தகம் எதுவாயினும் அதையே பிள்ளைகள் வாசிக்கிறார்கள் என்றும் அவர்கள் தெரிவு செய்து வாசிக்கச் சந்தர்ப்பம் இல்லை என்றும் பிள்ளை தாம் வாசித்த நூல்களின் பட்டியலை அளித்த பொழுது புலனாகியது. வாசிப்பில் ஈடுபாடு உள்ளமையால் தமக்குக் கிடைக்கின்ற எதையும் வாசிக்கின்றனர். பிள்ளைகள் தமக்குப் பொருத்தமான நூல்கள் எவை,பொருத்தமற்றவை எவை என்று வேறுபாடு காண முடியாதவர்கள்; எனவே அவர்களுக்குப் பொருத்தமான நூல்களைத் தெரிவு செய்தல் முதிர்ந்தோரின் கடமையாகின்றது. இலங்கையில் பண்புரீதியாகவும் அளவுரீதியாகவும் சிறுவர் இலக்கியம் மேம்படவேண்டும். அத்துடன் பிள்ளைகளுக்கு,அவர்களுள்ளும் விசேடமாக ஆரம்பப் பாடசாலைப்பிள்ளைகளுக்கு நூல்களைத் தெரிவு செய்வதில் சிறந்த முறைகளும் விநியோகிப்பதில் சிறந்த நுணுக்கங்களும் கையாளப்படவேண்டும்

# அத்தியாயம் - 09

# சிபாரிசுக்களும் கருத்தேற்றங்களும்

சிபாரிசுக்கள் இரு பெரும் தலைப்புகளில் ஆராயப்படுகின்றன. அவையாவன:

1. மொழித்திறன்களின் கல்வி முறையை மேம்படுத்துதல்
2. ஆரம்பப்பாடசாலைப் பிள்ளைகள் மத்தியில் வாசிப்புப் பழக்கங்களையும் தகவற் திறன்களையும் முன்னேற்றுதல்.

## *9.01. மொழித் திறன்களில் கல்வி முறையை மேம்படுத்துதல்.*

*அ.* மனித பௌதிக வளங்கள் கிடைக்கின்றமை, வீட்டுப்பின்னணி, ஆசிரியர், கற்பித்தல் முறைகள், ஆசிரியரின் வழிகாட்டலும் மேற்பார்வையும், கற்பித்தல் உபகரணங்கள், அளவீட்டு மதிப்பீட்டு முறைகள், ஆசிரியர் பயிற்சி முதலிய மாறிகள் பலவற்றால் கற்பித்தல் வினைத்திறன் பாதிக்கப்படுகின்றது

கற்பித்தல் கற்றல் நிலைமையில் மிகக் குறிப்பிடத்தக்க வளம் மாணாக்கரும் ஆசிரியருமாகும். பாடசாலை வகைகள் 1,2 ஆகியவற்றில் கற்றலுக்கு மூலமாக உள்ளவர் ஆசிரியர் மாத்திரமே. பிள்ளைகள் சிறுவயதில் வளரும் பருவத்தில் அவர்கள் மீது ஆசிரியரின் செல்வாக்கு மிக்க வலுவுடையது. பாடசாலை அமைந்துள்ள பிரதேசம், பிள்ளைகளின் ஆர்வம் என்பனவற்றுக்குப் பொருந்தக் கூடியவாறு ஆசிரியர் புத்தாக்க முறைகளைப் பின்பற்றவேண்டும். ஆசிரியரைத் திறமை பெற்ற ஆசிரியர் ஒழுங்காக வழிநடத்தி மேற்பார்வை செய்தல் வேண்டும். ஆரம்பப் பாடசாலைப் பிள்ளைகள் கற்பதற்கு விசேடமாக உதவ வேண்டியிருப்பதால், உள்ளூர்ப் பொருட்களைக் கொண்டு கற்பித்தல் சாதனங்களைத் தயாரிக்கவும் கற்பித்தலில் அவற்றைப் பயன்படுத்தவும் ஆசிரியர் பயிற்றப்படவேண்டும். இவ்வாறு செய்யின் கற்பித்தலின் பண்பும் மேம்படும்.

மொழியைக் கற்கும்பொழுது பிள்ளைகள் கஷ்டமுறும் பகுதிகளைக் கண்டறிய ஆசிரியர்மதிப்பீட்டு அளவீட்டு முறைகளைப் பயன்படுத்த வேண்டும். அத்துடன் பின்னூட்டற் செயற்றிட்டங்களையும் பரிகாரச் செயற்பாடுகளையும் பயன்படுத்த வேண்டும். 10-15 வருடங்களுக்கு முன்னர் பெரும்பாலான ஆசிரியர் பெற்ற பயிற்சிக்குப் புத்துயிர் அளித்து, ஆசிரியரின் தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டும். அவ்வாறாயின் இன்றிலும் பார்க்கக் கூடிய அர்ப்பணிப்புடன் தொழில் செய்வர், ஏனெனில் ஆசிரியரின் அந்தஸ்தையும் தரத்தையும் அவர்கள் பேணக்கூடியதாயிருக்கும். எனவே அதிதிறமையாசிரியரை இன்னும் அதிக எண்ணிக்கையில் பயிற்றுவித்தலும் ஆசிரியர்க்குச் சேவைக்காலப் பயிற்சியை ஆண்டொன்றுக்கு இருமுறையாவது வழங்குதலும் சிபாரிசு செய்யப்படுகின்றன.

*ஆ.* மொழித்திறன்களை அபிவிருத்தி செய்வதில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் கல்விக் கல்லூரிகள் என்பன விசேட கவனம் செலுத்த வேண்டும். மொழித் திறன்களைக் கற்பிக்கும் முறைகள் பற்றிப் பரிசோதனைகளை ஆசிரியர் கல்லூரிகள் ஆரம்பிக்க வேண்டும்; வாசிப்பு எழுத்து முதலியவற்றைக் கற்பிக்கும் முறைகள் பற்றிப் பல்வேறு ஆய்வுகளை நடத்த ஆசிரியர்க்கு அவை ஊக்கமளிக்க வேண்டும். பல்வேறு வகுப்புக் களில் இத்தகைய ஆய்வுகளை நடத்தினால் ஆசிரியர் பல்வேறு முறைகளைப் பரீட்சித்துப் பார்த்தால் அவர்கள் கற்பிக்க ஆரம்பிக்கும் பொழுது அம்முறைகளை மாணாக்கரின் தேவைகளுக்கும், பாடசாலைகளின் அமைவிடத்துக்கும் ஏற்ப இசைவாக்கிக் கொள்ளலாம். கூட்டுறவு முறையில் கற்றல்,பல வகுப்புகளுக்கு ஏற்ற வகையில் கற்பித்தல் பரிகாரக் கற்பித்தல் போன்ற முறைகள் வசதி மறுக்கப்பட்ட பாடசாலைகளில் உதவியாக இருக்கும்.

*இ.* ஒரு பாடசாலையில் கல்வியை முகாமைத்துவம் செய்து கல்விப் படிமுறையைக் கண்காணிப்பவர் அதிபாரவர். வசதி குறைந்த பாடசாலை அதிபர்கள் சமூகத் தலைவர் களாகப் பங்கேற்க வேண்டும். பெற்றார் பெரும்பாலும் கல்வியறிவற்றவர்களாகவும் கற்றல் பற்றிய மனப்பாங்கு அற்ற வராகவும் இருப்பதால் இப்பாடசாலைப் பிள்ளை களுக்குப் பெற்றாரின் உதவி கிடைப்பதில்லை. இத்தகைய சந்தர்ப்பங்களில் அதிபர்கள் சமூகத்தலைவர்களாக இருந்து பெற்றோருக்கு அறிவூட்டிப் பாடசாலை நலனுக்கு அவர்களின் உதவியைப் பெறவேண்டும். பாடசாலையின் கல்விசார் செயற்பாடுகள், மொழித்திறன்களைப் பிள்ளைகளிடம் அபிவிருத்தி செய்வதற்கு அவர்களுக்குக் கதைகூறுவதன் பெறுமதி ஆகியவைப்பற்றிப் பெற்றாருக்கு அறிவை ஏற்படுத்த நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்ய வேண்டும். கற்பித்தல் சாதனங்கள் தயாரித்தல், வசதி படைத் தவர்களிடமிருந்து நன்கொடையாக வாசிப்புச் சாதனங்களைப் பெறுதல் போன்றவற்றில் அதிபர் சமூக உதவியை நாடலாம். அவர் பெற்றோரிடமிருந்தும் ஆசிரியரிடமிருந்தும் முழு ஒத்துழைப்பையும் பெற வேண்டும். கல்வியை மேம்படுத்துவதற்குப் பாடசாலை அதிபர்களின் தலைமைத்துவமும் மனத்திட்பமும் மிக முக்கியத்துவமுடையன. எனவே பாடசாலை அதிபர்கள் மிகக் கவனமாகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டியதுடன் ஆரம்பக் கல்வியில் பயிற்சியும் அவர்களுக்கு அளிக்கப்படவேண்டும்.

மாதிரியில் 50% பாடசாலைகள் மனித பௌதிக வளங்களின்மையால் கஸ்டப்படு கின்றன. நாட்டில் உள்ள ஆரம்பப் பாடசாலைகள் யாவற்றுக்கும் சரிசமனாக வளங்களை யளிப்பது மிகவும் இயலாத பணியாகும். எனினும், தனித்தனி வகுப்பறைகள், நூலகங்கள், வாசிப்பு அறைகள், 500-1000வரை சிறுவர் நூல்கள், சில சஞ்சிகைகள். சிறுவர் பத்திரி கைகள், ஆசிரியர் தாம் தயாரித்த கற்பித்தல் சாதனங்களையும் ஏனைய வளங்களையும் பாதுகாப்பாக வைத்துப் பேண இடவசதி போன்ற அடிப்படைத் தேவைகளை வழங்கு வதன் மூலம் பாடசாலைகளுக்கிடையிலான ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பிள்ளைகளுக்கு ஏற்படக்கூடிய உடனல ஆபத்துக்களைத் தவிர்க்கும் எண்ணத்துடனும் பாடசாலைச் சுற்றாடலைப் பிள்ளைகளுக்கு மகிழ்ச்சியூட்டக்கூடிய வகையில் கவர்ச்சிகரமாக வைத்திருக்கும் நோக்குடனும் ஆண்டில் ஒரு முறையாவது ஆரம்ப பாடசாலைக் கட்டிடங்களைப் பழுதுபார்த்தல் வேண்டும்.

## 2. *வாசிப்புப் பழக்கங்களையும் தகவற் திறன்களையும் முன்னேற்றக்கூடிய கருத்தேற்றங்கள்.*

*அ.* வாசிப்புப் பழக்கங்களையும் தகவற் திறன்களையும் பிள்ளைகள் மத்தியில் முன்னேற்றுவதன் முக்கியத்துவத்தைக் கல்வியமைச்சு உணர்ந்துள்ளமையினால் பல ஆக்கபூர்வமான திடமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சிறுவர் நூல்களையும் வாசிப்புப் பழக்கங்களையும் அபிவிருத்தி செய்வதை முன்னேற்றக் கல்வியமைச்சின் கீழ் மூன்று முக்கிய அமைப்புக்கள் உண்டு. அவையாவன:

1. தேசீய நூல் அபிவிருத்திச் சபை
2. கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
3. தேசீய நூலக சேவைகள் சபை.

